மகளிர் நீதிமன்றம், செங்கல்பட்டு.

முன்னிலை. திரு.பி.வேல்முருகன், பி.ஏ.,பி.எல்., அமர்வு நீதிபதி.

திருவள்ளுவராண்டு 2048 ஹேவிளம்பி வருடம் மாசித் திங்கள் 7ம் நாள்

2018ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19ம் நாள் திங்கள்கிழமை.

சிறப்பு வழக்கு எண்.33/2017

.......

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்<br>T.14 மாங்காடு காவல்நிலையம்,<br>குற்ற எண்.285/2017 |
| எதிரியின் பெயர் | 1. திரு.தஷ்வந்த், வயது 22,<br>த/பெ.சேகர். |
| குற்றச்சாட்டுகள் | 1. 5.2.2017ம் தேதி மாலை 5.00 மணிக்கு மதனந்தபுரம் நிக்கிதா பிளாட்சில் வசிக்கும் உறாசினி வயது 7 என்ற சிறுமி கீழ்தளத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது, எதிரி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்யும் நோக்கத்துடன் அதே குடியிருப்பில் உள்ள எதிரியின் வீட்டிற்கு கடத்திச் சென்றதன் காரணமாக இதச பிரிவு 363ன் கீழ் எதிரி மீது.<br>2. எதிரி மேற்படி உறாசினி சிறுமியை அவரது வீட்டிற்கு கடத்திச் சென்று, எதிரியின் நாயுடன் சிறுமி உறாசினி விளையாடிக்கொண்டிருந்த போது, எதிரி அவரது வீட்டுக் கதவை உள்புறமாக தாழ்ப்பாள் போட்டு, அவரை பாலியல் தாக்குதல் செய்யும் நோக்கத்துடன் கடத்திச் வைத்ததன் காரணமாக இதச பிரிவு 366ன் கீழ் எதிரி மீது.<br>3. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி, சிறுமியை பாலியல் தாக்குதல் செய்யும் நோக்கத்துடன் அவரது உள்ளாடைகளை தூக்கி பிறப்புறுப்பில் கையை வைத்து தடவியதன் காரணமாக பிரிவு 8 உ/இ.7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் எதிரி மீது. |

WEB COPY

4, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சிறுமி உறாசினியை அவரது படுக்கையறைக்கு தூக்கிச் சென்று, அவரது உள்ளாடைகளை கழற்றியதன் காரணமாக இதச பிரிவு 354(பி)ன் கீழ் எதிரி மீது.

5. மேற்படி உறாசினியின் உள்ளாடைகளை கழற்றி, எதிரியின் ஆணுறுப்பை எடுத்து உறாசினியின் பெண்ணுறுப்பில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்ததன் காரணமாக பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் எதிரி மீது

6. மேற்படி சிறுமி உறாசினியை எதிரி பாலியல் பலாத்காரம் செய்யும் போது அவர் கத்தி அழுததால் எதிரி பெட்ஷீட்டை எடுத்து அவரது முகத்தில் மூடி அழுத்தி, அவரது கழுத்தை இறுக்கி வாயை பொத்தி உறாசினியை கொலை செய்ததன் காரணமாக இதச பிரிவு 302ன் கீழ் எதிரி மீது.

7. எதிரி மேற்படி சிறுமி உறாசினியை கொலை செய்து குற்றத்தை மறைப்பதற்காக மேற்படி உறாசினியின் உடலை டிராவல் பேக்கில் வைத்து, மோட்டார் சைக்கிளில் தாம்பரம்= மதுரவாயில் பைபாஸ் ரோட்டிற்கு அருகில் உள்ள அனகாபுத்தூரில் உள்ள பயன்படுத்தப்படாத எமர்ஜென்சி பூத் அருகே உள்ள முட்புதரில் வைத்து மேற்படி உறாசினியின் உடலை பெட்ரோல் ஊற்றி எரித்து தடயங்களை அழித்ததன் காரணமாக இதச பிரிவு 201ன் கீழ் எதிரி மீது.

WEB COPY

குற்றவாளியின் உரை — குற்றவாளி அல்ல.

நீதிபதியின் முடிவு — எதிரி இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7 மற்றும் பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 கீழ் குற்றவாளி என முடிவு செய்யப்படுகிறது.

நீதிமன்ற தீர்ப்பு — முடிவில், இதச பிரிவு 363ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ஏழாண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும், இதச பிரிவு 366ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு பத்தாண்டுகள்

கடுங்காவல் சிறைதண்டனையும், இதச பிரிவு 354(பி)ன் கீழான குற்றத்திற்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும், இதச பிரிவு 201ன் கீழான குற்றத்திற்கு ஏழாண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும், பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச்சட்டம் 2012ன் கீழான குற்றத்திற்கு பத்தாண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும், பிரிவு 8 உ/இ.7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச்சட்டம் 2012ன் கீழான குற்றத்திற்கு ஐந்தாண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும், இதச பிரிவு 302ன் கீழான குற்றத்திற்கு எதிரியை மரணிக்கும்வரை அவர் கழுத்தில் தூக்கிலிட வேண்டுமென்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி சிறையிலிருப்பதாலும், அவருக்கு மாவட்ட சட்ட ஆணைபணிகள் குழுவிலிருந்து இலவசமாக வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருப்பதாலும், அபராதத் தொகை எதுவும் விதிக்கப்படவில்லை.

WEB COPY

இவ்வழக்கு 15.09.2017 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் திருமதி.சி.சீதாலட்சமி அவர்கள் ஆஜராகியும் எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.ராஜ்குமார் (இலவச சட்ட உதவி மையத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்) அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**(அ)** இவ்வழக்கின் புகார்தாரர் திரு.பாபு வயது 38 த/பெ.அப்பாராவ் என்பவர் நிக்கிதா பிளாட்ஸ்,

நெ.28, 10வது தெரு, மாதா நகர் விரிவு–II, மதனந்தபுரம், சென்னை–128 என்ற முகவரியில் கடந்த ஒரு வருடமாக தன் மனைவி, மகள் மற்றும் மகனுடன் வசித்து வந்துள்ளார். அவரது மகள் பெயர் உறாசினி, வயது 7 ஆகும். மகன் பெயர் தேஜஸ், வயது 5 ஆகும். மேற்படி புகார்தாரர் பாபு பெருங்களத்தூரில் உள்ள கம்பெனியில் சாப்ட்வேர் இன்ஜினியராக வேலை செய்து வந்துள்ளார். அவரது மகள் உறாசினி சென்னை மதனந்தபுரத்தில் உள்ள நாராயணா பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வந்துள்ளார். அதே பள்ளியில் உறாசினியின் அம்மாவும் ஆசிரியராக பணியாற்றி வந்துள்ளார்.

**(ஆ)** இவ்வழக்கின் எதிரி தஷ்வந்த் மேற்படி புகார்தாரர் பாபு வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பிலேயே எஸ்.3 என்ற இரண்டவது தளத்தில் உள்ள வீட்டில் அவரது பெற்றோர்களுடன் வசித்து வந்துள்ளார். எதிரியின் குடும்பம் மேற்படி அடுக்குமாடி குடியிருப்பிற்கு சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு குடிவந்துள்ளனர். அதனால் ஏற்பட்ட அறிமுகத்தில், சிறுமி உறாசினி, எதிரியை அண்ணா, அண்ணா என்ற அழைத்துள்ளார். எதிரி அவரது மொபைல் போனில், எப்போதும் பாலியல் சம்மந்தமாக வீடியோக்களை பார்த்துக் கொண்டிருந்ததினால் அவருக்கு பாலியல் இன்பம் அனுபவிக்கும் எண்ணம் அதிகமாகஇருந்துள்ளது.

WEB COPY

**(இ)** 5.02.2017ம் தேதி அன்று மாலை 5.00 மணிக்கு மேற்படி சிறுமி உறாசினி பக்கத்து வீட்டு குழந்தைகளுடன் கீழ் தளத்தில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். மேற்படி சிறுமி உறாசினியின் தகப்பனார் புகார்தாரர் பாபு, அவரது மனைவி மற்றும் மகனுடன் காய்கறி வாங்குவதற்காக பாய்கடை என்ற இடத்தில் உள்ள காய்கறி மார்க்கெட்டிற்கு சென்றுள்ளனர். அதை பார்த்துக் கொண்டிருந்த எதிரி, மேற்படி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்யலாம் என்ற எண்ணத்துடன், அவரிடம் போய் எதிரியின்

வீட்டில் எதிரி வளர்க்கும் நாயுடன் விளையாடலாம் என்று அழைத்து வந்து, சிறுமி உறாசினி நாயுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிரி அவரது வீட்டின் கதவை உள்புறமாக தாழிட்டு, சிறுமி உறாசினியின் உள்ளாடைகளை தூக்கி பிறப்புறுப்பில் எதிரி கையை வைத்து தடவியுள்ளார். இதனால் சிறுமி உறாசினி எதிரியின் கையை தட்டிவிட்டுள்ளார். எதிரி மேற்படி சிறுமி உறாசினியை அவரது படுக்கையறைக்கு தூக்கிச் சென்று, சிறுமியின் ஆடைகளை கழற்றி எதிரியின் ஆணுறுப்பை, சிறுமியின் பெண்ணுறுப்பில் வைத்து சிறுமியை பலாத்காரம் செய்துள்ளார்.

**(ஈ)** அப்போது சிறுமி விடுங்கள்விடுங்கள் என்று கத்தி அழுததால், எதிரி பெட்உஷீட்டை எடுத்து, சிறுமியின் முகத்தில் மூடி அழுத்தி, அவரது கழுத்தை இறுக்கி, வாயை பொத்தியதால் சிறுமி உறாசினி சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். எதிரி மேற்படி குற்றச் செயல்களை செய்து, அதற்கான தடயங்களை அழிக்கும் நோக்கத்துடன், சிறுமியின் உடலை பெட்உஷீட்டில் மூடி ஒரு டிராவல்ஸ் பேக்கில் போட்டு மேற்படி பேக்கை எதிரியின் தோளில் மாட்டிக்கொண்டு, எதிரிக்குச் சொந்தமான பதிவு செய்யப்படாத அப்பாச்சி மோட்டார் சைக்கிளில் எடுத்துக் கொண்டு, தாம்பரம்=மதுரவாயில் பைபாஸ் ரோட்டிற்கு அருகில் உள்ள அனகாபுத்துாரில் உள்ள பயன்படுத்தப்படாத எமர்ஜென்சி பூத் அருகே உள்ள முட்புதரில் வைத்து சிறுமி உறாசினியின் உடலை பெட்ரோல் ஊற்றி எரித்து தடயங்களை அழித்துள்ளார்.

**(உ)** அதன் காரணமாக எதிரி இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7 மற்றும் பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றப்பத்திரிக்கை மாங்காடு காவல்நிலைய காவல்துறை ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

2. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது, எதிரிக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் 7.10.2017 அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால், இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7 மற்றும் பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு, எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து வினவ, எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி அல்ல என மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.30 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.45 வரை குறியிடப்பட்டுள்ளது. சான்று பொருள்கள் சா.பொ.1 முதல் சா.பொ.19 வரை குறியிடப்பட்டுள்ளது.

WEB COPY

5. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து வெளிவரும் வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

(i) அ.சா.1 திரு.சி.எஸ்.டி.பாபு தனது சாட்சியத்தில், மதனந்தபுரத்தில் உள்ள மாதா நகர், 10வது குறுக்குத்தெரு, எப்.2 நிகிதா பிளாட்சில் வசிப்பதாகவும், பெருங்கொளத்தூரில் சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரிவதாகவும், தனது மனைவி அ.சா.2 ஸ்ரீதேவி மதனந்தபுரத்தில் உள்ள நாராயணா எக்னோ பள்ளியில் ஆசிரியராக பணிபுரிவதாகவும், தனக்கு 7வயதுள்ள ஹாசினி என்ற பெண்குழந்தையும், தேஜஸ் என்ற 5 வயதுடைய ஆண்குழந்தையும் உள்ளது என்றும், 5.2.2017 அன்று மாலை 6.00 மணிக்கு தானும், தன் மனைவியும், தன் மகனும் பாய்கடை என்ற இடத்திற்கு சென்று காய்கறிகள் வாங்கிக்

கொண்டு திரும்பி வந்து தன் மகள் உறாசினியை அழைத்த போது, அவளிடமிருந்து எந்த பதிலும் வராததால் அக்கம் பக்கம் தேடி பார்த்த போது அவளை காணவில்லை என்றும் அன்று இரவு 10.00 மணிக்கு மாங்காடு காவல்நிலையம் சென்று தன் மகளை காணவில்லை என அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் 8.2.2017ம் தேதி காலை மாங்காடு போலிசார், எதிரி தன் மகள் உறாசினியை பாலியல் பலாத்காரம் செய்து அவளை கொலை செய்து உடலை எரித்துவிட்டதாக தனக்கு தகவல் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திருமதி.ஸ்ரீதேவி இறந்த சிறுமியின் தாயார், அவர் தனது சாட்சியத்தில் கடந்த 5.2.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு தன் மகள் வந்து பால் குடித்துவிட்டு, திரும்பவும் விளையாட போவதாக சொல்லிவிட்டு, போய்விட்டதாகவும் அதன் பிறகு கொஞ்ச நேரம் கழித்து, தானும், தன் கணவர் அ.சா.1ம் தன் மகனும் பாய்கடை என்ற இடத்திற்கு காய்கறி வாங்க சென்றதாகவும் அப்போது தன் மகள் உறாசினி கீழே விளையாடிவிட்டு, மேலே போவதாக சொல்லிவிட்டு போனதாகவும் தாங்கள் கடைக்கு போய்விட்டு திரும்பி 7.15 மணியளவில் வந்த போது, தன் மகளை கூப்பிட்டு பார்த்தேன் அவள் வரவில்லை என்றும் தான் மேலேயும், கீழேயும் தேடி பார்த்தேன் காணவில்லை என்றும் எதிரியின் வீடு பூட்டியிருந்தது என்றும், ரொம்ப நேரம் தேடி பார்த்தும் கிடைக்காததால் மாங்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பின்னர் 8.2.2017ம் தேதி அன்றுதான் எதிரி தன் மகள் உறாசினியை தூக்கிச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து கொன்றுவிட்டதும், அனகாபுத்தூர் பைபாஸ்ரோடு அருகே தன் மகள் உறாசினியை கொண்டு தீ வைத்து கொளுத்திவிட்டதாக தெரிய வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.முருகன் (எ) வெங்கட முருகன்குணா தனது சாட்சியத்தில், 5.2.2017ம் தேதி

WEB COPY

6.00மணியிலிருந்து 6.15 மணிக்குள்ளாக தான் மொட்டை மாடிக்கு போனதாகவும், அப்போது இரண்டாவது மாடியில், எதிரியும் அவரது நாயும், உறாசினியும் விளையாடிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு மேலே போனதாகவும் தான் மேலே இருந்த துணியை எடுத்துக் கொண்டு கீழே வரும் போதும் விளையாடிக் கொண்டிருந்ததை பார்த்துவிட்டு, கீழே வந்ததாகவும், அன்று மாலை 7.15 மணியிலிருந்து 7.30 மணிக்குள்ளாக உறாசினியின் அப்பா உறாசினியை தேடிக்கொண்டு முதல் தளத்தில் உள்ள தன் வீட்டிற்கு வந்ததாகவும், தன் வீட்டில் உறாசினி இல்லை என்றும் மேலே விளையாடிக் கொண்டிருந்தாள் அதனால் மேலே போய் பார்க்கும்படி சொன்னதாகவும் அடுத்த 5 நிமிடத்தில் மேலே போய் பார்த்துவிட்டு உறாசினியின் அப்பா கீழே வந்து பதற ஆரம்பித்தார் அதனால் அவரோடு சேர்ந்து தானும் தேடியதாகவும் அவரிடம் புகார் கொடுக்கும்படி சொன்னதாகவும், இரவு 9.00 மணி அல்லது 9.30 மணியளவில் சில போலிஸ்காரர்கள் தங்களுடைய அப்பார்ட்மெண்டிற்கு வந்தார்கள் என்றும் அவர்களிடம் மேற்கூறிய விவரங்களை கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திருமதி.துர்கா பவானி தனது சாட்சியத்தில், அ.சா.2ம், தானும் ஒரே பள்ளியில் பணிபுரிவதாகவும், அ.சா.2ன் மகள் உறாசினி தங்கள் பள்ளியில் 2வது வகுப்பு படித்து வந்ததாகவும், 5.2.2017ம் தேதி அன்று மாலை 8.00 மணியிலிருந்து, 8.20 மணிக்குள்ளாக அ.சா.2 தனக்கு போன் செய்து உறாசினியை காணவில்லை என்று பதற்றமாக பேசியதாகவும், அப்போது தானும் தன் கணவரும் பைக்கில், அவரது வீட்டிற்கு போய் சுற்றியுள்ள பகுதிகளில் தேடியதாகவும், 8.2.2017ம் தேதி உறாசினியை அந்த பிளாட்சில் வசிக்கும் ஒரு பையன் உறாசினியை தூக்கிச் சென்று ரேப் செய்து பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிட்டதாக கேள்விபட்டதாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என

WEB COPY

சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு.ரகுராம் சித்தார்த்தன் தனது சாட்சியத்தில், 5.2.2017ம் தேதி இரவு 10.30 மணி அளவில் தானும் தன் நண்பர் உதயகுமாரும், வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு போய்க்கொண்டிருந்த போது மாதா நகரில் நிகிதா பிளாட்சில் ஒரே கூட்டமாக இருந்தது என்றும் போலிசார் வண்டி நின்றிருந்தது என்றும் தாங்கள் என்ன என்று விசாரித்த போது, உறாசினி என்ற பெண்ணை காணவில்லை என்று அவர் அப்பா புகார் கொடுத்ததாகவும் அது சம்மந்தமாக போலிசார் விசாரித்துக் கொண்டிருப்பதாக சொன்னார்கள் என்றும், அந்த நேரத்தில் போலிசார் அந்த இடத்தில் மார்க் செய்து விசாரித்து உறாசினி காணவில்லை என்ற வழக்கு சம்மந்தமாக புலன்விசாரணை செய்து தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.2ல் தான் சாட்சியாக இருந்து அன்று இரவு 11.15 மணிக்கு கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(vi) அ.சா.6 திரு.துரைவேலு தனது சாட்சியத்தில், 5.2.2017ம் தேதி நிகிதா பிளாட்சில் வசிக்கும் உறாசினி என்ற பெண்ணை காணவில்லை என்று தேடிக் கொண்டிருந்ததாகவும், தான் அந்த பகுதியில் உள்ள கற்பக விநாயகர் கோயிலில் பொறுப்பாளராக இருப்பதாகவும், 6.2.2017ம் தேதி அன்று உறாசினியின் தந்தை அ.சா.1 பாபு என்பவர் தங்கள் கோயிலுக்கு வந்து தங்கள் கோயிலில் இருந்த சி.சி.டி.வி. கேமராவில் தன்னுடைய குழந்தை உறாசினி காணாமல் போனது குறித்து ஏதாவது பதிவு இருக்கிறதா? என்று பார்க்க வேண்டுமென்று கேட்டதால் தங்களிடம் உள்ள கேமிராவில் 5.2.2017ம் தேதி அன்று மாலை 6.00 மணியிலிருந்து 7.15 மணிக்குள்ளான பதிவை பார்த்தோம் என்றும் அதில் ஒரு நபர் பைக்கில், முன் பகுதியில் ஒரு பேக்கை வைத்து ஓட்டிச் செல்லுகின்ற காட்சி பதிவாகியிருந்ததாகவும் அந்த விவரத்தை போலிசாரிடம் சொல்லி தேவையான நடவடிக்கை எடுப்பதாக சொல்லிவிட்டு சென்றதாகவும்

7.2.2017ம் தேதி மாங்காடு போலிசார் வந்து மாலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை தங்கள் கோயிலில் இருந்த சிசிடிவி கேமிராவின் பதிவுகளை திரும்ப திரும்ப போட்டு பார்த்துக் கொண்டிருந்தார்கள் இது சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) அ.சா.7 திருமதி.சுமதி தனது சாட்சியத்தில் தான் மதனந்தபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக 2016ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருவதாகவும், 08.02.2017ம் தேதி அன்று மாங்காடு காவல் ஆய்வாளர் தன்னை போனில் தொடர்பு கொண்டு ஒரு முக்கியமான வழக்கு சம்மந்தமாக ஒரு தகவல் இருக்கிறது என்றும், அதனால் நீங்கள் உடனே புறப்பட்டு ஏஜிஎஸ் பார்க் முகலிவாக்கம் என்ற இடத்திற்கு வரும்படி காலை 8.15 மணியளவில் சொன்னார் என்றும் தான் தன்னுடைய உதவியார் மோகன்தாஸ் அவர்களுக்கு தகவல் சொல்லி வரவைத்து அவருடைய இருசக்கர வாகனத்தில் ஏஜிஎஸ் பார்க்கிற்கு போனதாகவும், அங்கு போலிசார் கும்பலாக இருந்தார்கள். அந்த இடத்தில் எதிரி இருந்ததாகவும், அப்போது அவர் உறாசினி என்ற 7 வயது பெண் குழந்தையை பாலியியல் பலாத்காரம் செய்து கொலை செய்து எரித்து கொன்றதை ஒப்புதல் வாக்குமூலமாக சொன்னார் என்றும் அந்த வாக்குமூலம் கொடுத்த இடத்திலேயே எதிரி ஒரு அப்பாச்சி பைக்கையும் ஒரு ஓப்போ செல்போனையும் எடுத்து போலிசாரிடம் கொடுத்ததாகவும், அதை ஆய்வாளர் அ.சா.ஆ.3கைப்பற்றுதல் மகசரில் தங்கள் முன்பு கைப்பற்றியதாகவும் அதன்பிறகு அங்கு இருந்து சென்று எதிரி அடையாளம் காட்டிய இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் ஆய்வாளர் தயார் செய்தார் என்றும் அதற்கும் தானும் தன் உதவியாளரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 என்றும், அந்த சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் இருந்த சாம்பல் மண், தலை முடி

WEB COPY

கொஞ்சம், கருகிய மண், சாதாரணமண், இரண்டு பெட்ரோல் வாசனையுடன் கூடிய பாட்டில்கள், கருப்பு புளூ கலா் கலந்த டிராவல் பேக், அதற்குள் இருந்த உறாசினியின் புளூ கலா் ஜட்டி ஆகியவற்றையும் போலிசாா் எதிரி காட்டிய இடத்தில் இருந்து எடுத்து அ.த.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசா் மூலம் கைப்பற்றியதாகவும பிறகு அங்கு இருந்து புறப்பட்டு எதிரி சிறுமியிடம் பாலியியல் பலாத்காரம் செய்து கொலை செய்த இடத்தை காட்டியதாகவும், அந்த இடத்தையும் ஆய்வாளா் பாா்வையிட்டு படம் வரைந்து மகசா் தயாா் செய்ததாகவும், அந்த பாா்வை மகசா் அ.த.சா.ஆ.6 என்றும் அந்த இடத்தில் உறாசினி சிறுநீா் கழித்திருந்தது என்றும், அந்த துணியின் ஒரு பகுதியை தடய அறிவியல் நிபுணா் மற்றும் ஆய்வாளா் வெட்டி எடுத்துக்கொண்டாா்கள் என்றும், சம்பவத்தின்போது எதிரி அணிந்திருந்த புளூ கலா் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றும் வெள்ளை மற்றும் சாம்பல் நிறமுடைய டீ சாா்ட் முழுக்கையுடன் கூடிய ஒன்று எதிரியுடைய பா்ஸை எடுத்து அதற்குள் இருந்து காது வளையம் இரண்டும், கொலுசு அருந்த நிலையில் இரண்டும், ஆக்ஸிஸ் பேங்கின் ஏடிஎம் காா்டு, பேன் காா்டு ஒன்று, எஸ்ஆா்எம் யூனிவா்சிட்டி வழங்கிய எதிரியின் அடையாள அட்டை ஆகியவைகளையும் எடுத்து கொடுத்தாா் என்றும் அவைகளையும் தங்கள் முன்பாக ஆய்வாளா் மகசரில் அ.த.சா.ஆ.7 கைப்பற்றதல் மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ளாா்.

(viii)அசா8 திரு.மோகன்தாஸ் தனது சாட்சியத்தில் அசா7ன் சாட்சியத்தை ஒத்துறைத்து சாட்சியம் அளித்துள்ளாா்.

(ix) அ.சா.9 திரு.செல்வகுமாா் தனது சாட்சியத்தில் தான் மாங்காடு கிராம நிா்வாக அதிகாாியாக பணியாற்றுவதாகவும், கடந்த 18.2.2017ம் தேதி அன்று மாங்காடு காவல் ஆய்வாளா் தனக்கு போன்

செய்து ஒரு வழக்கு சம்மந்தமாக ஒரு நபரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியிருப்பதால் தன்னை அழைத்ததாகவும் தான் தன்னுடைய உதவியாளர் பாஸ்கரன் என்பவரும் காலை 10.30 மணிக்கு சென்றதாகவும், தான் போன போது எதிரி தானாக முன் வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.10 என்றும், அதன்பிறகு எதிரியின் வீட்டின் மாடியில் தண்ணீர் டேங்கிற்கு அருகே மறைத்து வைத்திருந்த ஒரு எல்மெட்டை எதிரி நீர் எடுத்து ஆஜர் செய்தததாகவும், அதை ஆய்வாளர் மகசரில் அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(x)அ.சா.10.திரு.பாஸ்கரன் தனது சாட்சியத்தில் அசா9ன் சாட்சியத்தை ஒத்துறைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(xi) அ.சா.11 திருமதி.புஷ்பா தனது சாட்சியத்தில் 5.2.2017ம் தேதி மாலை 6.30 மணியளவில் தான் வளர்க்கும் நாயை வாக்கிங் கூட்டி போகும் போது வேலம்மாள் போதி காம்பஸ் அருகே நின்று கொண்டிருந்ததாகவும் அங்கிருந்து 5 முதல் 10 அடி தூரம் தான் நிகிதா பிளாட்ஸ் இருக்கும் என்றும் அப்போது நிகிதா பிளாட்சின் மெயின் கேட்டை வேமாக திறந்த சத்தம் கேட்டு திரும்பி பார்த்த போது எதிரி பிளாட்சிலிருந்து ஒரு பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு, முதுகில் ஒரு பையை மாட்டிக்கொண்டு அதை சரி செய்துக்கொண்டு வண்டியின் முன்பக்கத்தில் ஹெல்மெட்டை வைத்துக்கொண்டு டென்ஷனாக கேட்டை தள்ளிக்கொண்டு சர்ரென்று போனதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xii)அ.சா.12 திரு.மோகன் தனது சாட்சியத்தில், 8.2.2017ம் தேதி காலை 9.30 மணியளவில்

மாங்காடு காவல்நிலையத்தில் இருந்து தன்னை தொலைபேசியில் அழைத்ததாகவும், தாம்பரம் நெடுஞ்சாலை அனகாபுத்தூரில் ஒரு குழந்தை எரிந்த நிலையில் கிடந்த பிணத்தை புகைப்படம் எடுத்ததாகவும் பிறகு அங்கிருந்து மதனந்தபுரம் நிகிதா பிளாட்சிற்கு வந்து சம்பவம் நடந்த இடத்தை புகைப்படம் எடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xiii) அ.சா.13 திரு.ரகுராம் தனது சாட்சியத்தில் 20.2.2017ம் தேதி மாங்காடு காவல் ஆய்வாளர் தான் அப்போது வேலை செய்த ராமாபுரம் வங்கி கிளைக்கு வந்து எதிரியின் கிரெடிட் கார்டு ஸ்டேட்மெண்ட் கேட்டு கடிதம் கொடுத்ததாகவும், அந்த கடிதத்தை பெற்றுக்கொண்டு தான் கவரிங் லெட்டருடன் மேற்படி ஸ்டேட்மெண்ட்டை கொடுத்ததாகவும் அவைகள் இரண்டும் அ.சா.ஆ.14 வரிசை என்றும் அந்த ஸ்டேட்மெண்ட்படி 5.2.2017ம் தேதி அன்று ஐ.ஓ.சி.எஸ் பெட்ரோல் நிலையம் மாதா நகரில் ரூ.333.73/—பணத்திற்கு பெட்ரோல் வாங்கியிருக்கிறார் என்றும் இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(xiv)அ.சா.14 திரு.முனிசேகர் தனது சாட்சியத்தில் 8.2.2017ம் தேதி அன்று மதுரவாயல் டோல்கேட் — தாம்பரம் மெயின் ரோட்டில் பிணத்தை எரித்த இடத்திற்கு போய்விட்டதாகவும் அந்த இடத்தில் எிதிரி பிணத்தை எரித்த இடத்தை காண்பித்துக் கொண்டிருந்ததாகவும், அந்த எரிந்த நிலையிலிருந்த சிறுமியின் பிணத்தை பார்த்து இது உறாசினியினுடையது தான் என தான் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xv)அ.சா.15 திரு.வெங்கட்ராமன் தனது சாட்சியத்தில், 5.2.2017ம் தேதி அன்று மாலை சுமார் 7.00 அல்லது 8.00 மணியளவில் தங்கள் பள்ளியில் படித்த உறாசினி என்ற பெண் குழந்தையை

காணவில்லை என்ற தகவல் கிடைத்தது என்றும் 7.8.2017ம் தேதியன்று மாங்காடு காவல் ஆய்வாளர் தன்னை பள்ளியில் வந்து விசாரித்து, உறாசினியின் பிறந்த நாளை உறுதிபடுத்துவதற்காக ஒரு சான்றிதழ் கேட்டதாகவும் தான் கொடுத்த போனபைடு சான்றிதழ் அ.சா.ஆ.15 என சாட்சியம் அளித்துள்ளார்.

(xvi)அ.சா.16 மருத்துவர் திருமதி.கார்த்திகாதேவி தனது சாட்சியத்தில், கடந்த 9.2.2017ம் தேத காலை 11.50 மணியளவில், பணியிலிருந்த போது மாங்காடு காவல்நிலைய கு.எண்.285/2017 என்ற வழக்கு சம்மந்தப்பட்ட உறாசினி வயது 7 என்ற சிறுமியின் பிரேதத்தை பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்கி மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ததாகவும், இறந்தவருடைய உடல் முழுவதும் எரிந்து கருகி இருந்தபடியால் இறப்பிற்கான காரணம் கண்டறிய இயலவில்லை என தான் வழங்கிய உடல் கூராய்வு அறிக்கை மற்றும் தன்னுடைய இறுதி கருத்து அறிக்கை அ.த.சா.ஆ.20 வரிசை என்றும் தனது இறுதி அறிக்கையை 26.4.2017ம் தேதி பெற்றுச் சென்ற ஆய்வாளர் மீண்டும் தன்னை 1.8.2017ம் சந்தித்து சில கேள்விகளை எழுத்து வடிவில் கொடுத்து பதில் கேட்டதாகவும் அதற்கான எழுத்துமூலமான பதிலை தான் கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

(xvii) அ.சா.17 திரு.மோகன் தனது சாட்சியத்தில் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் நஞ்சியியல் பிரிவில் இளநிலை அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் கடந்த 10.2.2017ம் தேதி அன்று தான் பணியிலிருந்த போது, மாங்காடு காவல் நிலைய குற்ற எண்.285/2017 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் உறாசினி என்ற பெண் வயது 7 அவர்களின் பிரேத பரிசோதனையின் உள் உறுப்புகள் நான்கு குப்பிகளில் பேராசிரியர், சட்டம் சார்ந்த மருத்துவம், கீழ்பாக்கம் மருத்துவ கல்லாரி மருத்துவமனை, சென்னை-10 அவர்களிடம் இருந்து சரியான முத்திரையுடன் திரு.எம்.முருகன் சிறப்பு உதவி ஆய்வாளர்

WEB COPY

மூலமாக இரசாயண பரிசோதனைக்கு இவ்வாகத்தில் பெறப்பட்டு, தான் பகுப்பாய்வு செய்ததில் மூளை, குருதி, நுரையீரலின் வலது பகுதி மற்றும் உப்பு கரைசலில் விஷம் ஏதும் கண்டறியப்படவில்லை என்றும் இதற்கான நஞ்சியியல் அறிக்கை எண் TOX.H.No.331/2017, dated: 21.02.2017 என்று நாளிட்ட அறிக்கையை தயார் செய்து சம்மந்தப்பட்ட சட்டம் சார்ந்த மருத்துவ துறைக்கு அனுப்பிவைத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.த.சா.ஆ.18 ஆன டாக்ஸிகாலாஜி அறிக்கைதான் என்றால் சரிதான் என்றும் இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

(xviii)அ.சா.18 திரு.சந்தோஷ்குமார் தனது சாட்சியத்தில் 5.2.2017ம் தேதி மாலை 8.30, 9.00 மணியளவில் இரண்டு பாட்டில்களில் பெட்ரோல் வாங்க நெம்பர் இல்லாத அப்பாச்சி புது வண்டியில், ஹெல்மெட்டு போட்டு ஒருவர் வந்து பாட்டில்களில், பெட்ரோல் கேட்டதாகவும், தான் பாட்டில்களில் பெட்ரோல் கொடுக்க முடியாது என்று சொன்னதால் அந்த நபர் ஹெல்மெட்டை கழற்றி விட்டு வீட்டில் உள்ள காருக்கு பெட்ரோல் போடுவதற்கு கட்டாயம் தேவைப்படுகிறது என்று வலியுறுத்தி கேட்டதாலும், கூட்டமாக இருந்ததாலும், அந்த பாட்டில்களில் பெட்ரோல் கொடுத்ததாகவும், அந்த பெட்ரோலுக்கு ரூ.322 சில்லரை வந்தது என்றும் தான் ரூ.323ஐ கேட்ட போது அதற்கு பதிலாக அந்த நபர் ஏ.டி.எம்.கார்டை கொடுதததாகவும் அப்போதும் தான் பாட்டில்களில் பெட்ரோல் கொடுக்கும்போது, ஏ.டி.எம்.கார்டு வாங்கமாட்டோம் என்று சொன்ன போது, அவர் தன்னிடம் பணம் இல்லை, ஏ.டி.எம். கார்டு தான் இருக்கிறது. என்று சொன்னதால் கூட்டமாக இருந்ததால் தான் ஏ.டி.எம்.கார்டை சுவைப் செய்து இரண்டு பில் எடுத்து ஒரு பில்லை அவரிடம் கொடுத்ததாகவும் மற்றொன்றை தான் வைத்துக்கொண்டதாகவும்

WEB COPY

சாட்சியம் அளித்துள்ளார்.

(xix) அ.சா.19 மருத்துவர் திரு.செந்தில்குமார் தனது சாட்சியத்தில், தகடந்த 16.2.2017ம் தேதி அன்று தான் பணியிலிருந்த போது காலை 11.30 மணியளவில் தலைமை காவலர் சாமிநாதன் என்பவரால் 22 வயது மதிக்கத்தக்க எதிரியின் ஆண்மைதன்மை பரிசோதனைக்காக நீதிமன்ற கடிதத்துடன் அழைத்து வரப்பட்டதாகவும் பரிசோதனை பார்த்தும், மேலும் சிறப்பு பரிசோதனை நடத்தியதில் அவர் ஆண்மைதன்மை உடையவர் என்று அ.சா.ஆ.23 சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(xx) அ.சா.20 திரு.குருசாமி தனது சாட்சியத்தில், 8.1.2017ம் தேதி அன்று சேகர் என்பவர் எண்.28, மாதா நகர், மதனந்தபுரம் என்ற விலாசத்தின் பெயரில் இருசக்கர வாகனம் எச்.டி.எப்.சி. லோன் மூலம் அப்பாச்சி, 200 கிரே கலர் என்ற வண்டியை தங்களிடமிருந்த டெலிவரி பெற்றுக்கொண்டதாகவும் இங்கு தன்னிடம் காட்டப்படும் வண்டிதான் அது என்றும் அந்த வண்டி தங்களிடம் மீண்டும் 2.2.2017 அன்று முதல் சர்வீசுக்கு வந்தது என்றும் அந்த இரண்டு ரசீதுகளும் அ.சா.ஆ.24 வரிசை என்றும் இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xxi) அ.சா.21 திருமதி.சோபியா ஜோசப் தனது சாட்சியத்தில், 8.2.2017 அன்று, காலை 10.00 மணிக்கு மாங்காடு காவல்நிலைய சட்ட ஒழுங்கு ஆய்வாளர் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனே சம்பவ இடத்திற்கு வருமென கேட்டுக் கொண்டதால் தனது அரசு வாகனத்தில் அந்த இடத்திற்கு சென்றதாகவும் அந்த இடத்தை எதிரி அடையாளம் காட்ட சிறுமியின் உடல் எரிந்த நிலையில் காணப்பட்டது என்றும், அவ்விடத்திலிருந்து டிராவல்பேக், அதில் சிறுமியின் நீலக்கலர் ஜட்டி,

WEB COPY

கருகிய சாம்பல், சிறுமியின் கருகிய தலைமுடி, கருகிய தரைமண், சாதாரணமண், கூல்டிரிங்ஸ்பாட்டில் இரண்டு ஆகியவற்றை சேகரிக்க அதை ஆய்வாளர் கைப்பற்றிக்கொண்டதாகவும் அதன் பிறகு சிறுமியை பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தி, கொலை செய்ததாக எதிரி காட்டிய மதனந்தபுரத்தில் உள்ள நிகிதா பிளாட்சில் உள்ள எதிரியின் வீட்டின் எதிரியின் படுக்கையறையை காட்யடிதாகவும் அங்கிருந்து எதிரி சம்பவத்தன்று அணிந்திருந்த உடைகள் ஜீன்ஸ்பேண்ட், முழுக்கை சர்ட், பெட்கவரின் சிறியபகுதி, சிறுமியின் ஆபரணங்கள் (காதுவளையம், கால்கொலுசு) ஏ.டி.எம்.கார்ட்ஸ் மற்றும் சில கார்டுகள் ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றிக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xxii)அ.சா.22 திரு.மணிவண்ணன் தனது சாட்சியத்தில், கடந்த 23.2.2017 அன்று செங்கல்பட்டு மகிளா நீதிமன்ற நீதிபதி அவர்களால், அனுப்பப்பட்ட Oppa நிறுவன கைப்பேசி ஒன்று முத்திரையிடப்பட்ட காகித பொட்டலம் ஒன்றில் சரியான முத்திரையுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் மூலம் எங்கள் ஆய்வகத்தில் ஆய்வுக்காக பெறப்பட்டது என்றும் இந்த கைப்பேசியின் உள்நினைவகத்தில் இரண்டு ஆபாசமான படங்கள் பதிவாகியிருந்தன என்றும், மேலும் ஆபாசமான இணையதளங்களை பார்வையிட்டதற்கான தடயங்கள் பிரவுசர் வரலாற்று பக்கங்களின் பகுதியில் பதிவாகியிருந்தன என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(xxiii)அ.சா.23 திரு.ராஜாராம் தனது சாட்சியத்தில், கடந்த 10.2.2017ம் தேதி அன்று திருமதி.கார்த்திகா தேவி, சட்டம் சார்ந்த மருத்துவர் கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி சென்னை அவர்களிடம் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு பிளாஸ்டிக் குப்பிகள் ஆய்விற்காக மாங்காடு காவல் நிலையம் அவர்களிடம் இருந்து ஆய்விற்காக பெறப்பட்டது என்றும் தன்னுடைய அறிக்கையின்படி இரண்டு இன

சொத்துக்களிலும் பெட்ரோல் இருந்ததை கண்டுபிடித்ததாகவும் பெட்ரோல் என்பது எளிதில் தீ பிடிக்ககூடிய பொருள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(xxiv)அ.சா.24 திருமதி.தரணி, சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் உயிரியல் பிரிவில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்த போது, முத்திரையிடப்பட்ட காகித உறைகள் இரண்டு பேராசிரியர் அ.சா.16 மருத்துவர் திருமதி.கார்த்திகா தேவி, சட்டம் சார்ந்த மருத்துவம், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி சென்னை-10 அவர்களிடம் இருந்து 10.02.2017ம் தேதி அன்று பெறப்பட்டது என்றும், இந்த காகித உறையின் மேல் பிரேத பரிசோதனை எண்.298/2017 நாள்-09.02.2017 குற்ற எண்.285/2017 மாங்காடு காவல் நிலையம் என எழுதப்பட்டிருந்தது என்றும், இந்த காகித உறையில் கீழ் வரும் வழக்கு பொருட்கள் பெறப்பட்டன என்றும், இனம் 1. கண்ணாடி சோதனை குழாய் இரண்டு இவற்றின் மேல் "VAGINAL SWAB" என எழுதப்பட்டிருந்தது என்றும், இதனுள் பஞ்சால் ஆன ஸ்வாப் (பூச்சு) காணப்பட்டது என்றும், இனம் 2. கண்ணாடி சோதனை குழாயின் மேல் ''ANAL SWAB" என எழுதப்பட்டிருந்தது என்றும், இதனுள் பஞ்சால் ஆன ஸ்வாப் (பூச்சு) காணப்பட்டது என்றும், இனம் 3. கண்ணாடி சோதனை குழாயில் "BUCCAL" என எழுதப்பட்டிருந்தது என்றும், இதனுள் பஞ்சால் ஆன ஸ்வாப் (பூச்சு) காணப்பட்டது என்றும் இனம் 4. மூன்று நுண்நோக்கி கண்ணாடி வில்லை அதன் மேல் வெண்மை நிற பூச்சு காணப்பட்டது என்றும், அறிக்கை இனம் 1, 2 மற்றும் 3 இவற்றில் விந்துக்கறை ஏதும் கண்டறியப்படவில்லை என்றும் இனம் 4ல் விந்தணு மற்றும் கோனோகாக்கை எதுவும் கண்டறியப்படவில்லை என்றும், குறிப்பு- வழக்கு பொருள் அனைத்தும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றும் எதுவும் திருப்பி கொடுக்கவில்லை. இந்த ஆய்வு அறிக்கை உயிரியல் பிரிவு எண்.49/2017 நாள்-

WEB COPY

14.03.2017 என்றும் இந்த ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.17 பேராசிரியர் திருமதி.கார்த்திகா தேவி, சட்டம் சார்ந்த மருத்துவம், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி சென்னை-10 அவர்களுக்கு அனுப்பப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(xxv) அ.சா.25 திருமதி.புஉஷ்பராணி தனது சாட்சியத்தில், கடந்த 23.2.2017ம் தேதி அன்று தான் பணியிலிருந்த போது, அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம், செங்கல்பட்டு அவர்களின் கடிதத்துடன் மாங்காடு காவல் நிலைய குற்ற எண்.285/2017 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு பொருட்களை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.எம்.முருகன் அவர்களின் மூலம் பெற்று, அவற்றுள் முத்திரையிடப்பட்ட காகித உறையினுள் இருந்த உறாசினி என்ற சிறுமியின் வண்ணபுகைப்படத்தை அளவிட்டு அதனை பொருள் எண்1 என்று எண்ணிட்டதாகவும், பின்பு முத்திரையிடப்பட்ட பிளாஸ்டிக் பக்கெட் ஒன்றினுள் துண்டிக்கப்பட்ட மனித தலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது என்றும், அது மேற்புறமாக எரிக்கப்பட்டிருந்ததை பொருள் எண்.2 என்று எண்ணிட்டதாகவும், பின்பு 14.03.2017ம் தேதி அன்று மேலே குறிப்பிட்ட அதே சிறப்பு உதவி ஆய்வாளர் மூலம் உறாசினி என்ற சிறுமியின் நான்கு வண்ணப்புகைப்படங்களை பெற்று அவற்றை முறையே பொருள் எண்.3 முதல் 6 வரை என எண்ணிட்டதாகவும், துண்டிக்கப்பட்ட தலையானது தமது ஆய்வகத்தில் தனது பார்வையின் முன் சுத்தம் செய்யப்பட்டு ஆய்விற்கு உகந்தவாறு சீராமைக்கப்பட்டது என்றும், புகைப்படங்கள் எல்லாம் போட்டோஉஷாப் என்ற சாப்ட்வேர் மூலம் பெரிதுபடுத்தப்பட்டு ஆய்விற்கு தயார் செய்யப்பட்டது என்றும், பின்பு மண்டை ஓடும், சிறுமியின் புகைப்படங்களும் கணிணியின் உதவியுடன் கூடிய வீடியோ மேற்பதிவு முறையில் பிம்ப கலவை ஆய்வு (Superimposition) செய்யப்பட்டு, இந்த ஆய்வானது

WEB COPY

புகைப்படத்தில் காணப்பட்ட சிறுமி தன்னுடைய முகத்தை எந்த கோணத்தில் வைத்துள்ளாரோ அதற்கு ஏற்றவாறு மண்டை ஓட்டை அதனுள் மேற்பதிவு செய்து மானுடவியல் ரீதியான அமைப்புகள் ஆய்வு செய்யப்பட்டது என்றும் இந்த ஆய்வில் மண்டை ஓடானது பொருள் எண். 5, 6 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள சிறுமியின் முகத்தினுள் சதை கனத்திற்கு உட்பட்டும் மானுடவியல் ரீதியான வடிவமைப்புக்களுக்கு உட்பட்டும் வெகுவாக பொருந்தி இருந்தது என்றும், தனது ஆய்வின் முடிவில் 20.03.2017 நாளியிடப்பட்ட மானுடவியல் ஆய்வு அறிக்கை எண்.23, 24, 31/2017 பொருள் எண்.2 மண்டை ஓடானது, பொருள் எண்.5, 6ல் காணப்பட்ட, சிறுமியினுடையதுதான் என்பதற்கு சாத்தியங்கள் உள்ளது என்று குறிப்பிட்டு அத்துடன் தனது ஆய்வின்போது எடுக்கப்பட்ட எட்டு கணிணி லேசர் பிரதிகளையும் இணைத்து 28.04.2017ம் தேதி அன்று மாங்காடு காவல் நிலையத்தை சேர்ந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இருதயராஜ் என்பவர் மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அந்த அறிக்கை அ.த.சா.ஆ.28 என்றும், அறிக்கை நான்கு பக்கங்கள், படங்கள் 8 பக்கங்கள்) இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(xxvi)அ.சா.26 திரு.முருகன் தனது சாட்சியத்தில், கடந்த 9.2.2017ம் தேதி அதே பணியிலிருந்த போது, மாங்காடு காவல்நிலைய கு.எண்.285/2017 என்ற வழக்கில் இறந்து போன சிறுமி உறாசினி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி தக்க ஆவணங்களுடன் அரசு பொது மருத்துவமனை கீழ்பாக்கம் சென்னை அரசு மருத்துவரிடம் அறிக்கை செய்ததாகவும், பிரேத பரிசோதனை நெம்பர்,298/2017ல் பதிவு செய்து பிரேதத்தை அடையாளம் காட்ட சொன்னதாகவும் தான் பிரேதத்தை அடையாளம் காட்டியதாகவும் பிரேத பரிசோதனை முடித்த பின்னர் நல்லடக்கம் செய்ய வேண்டி இறந்து



WEB COPY

போன உறாசினியின் உறவினரிடம் பிரேதத்தை ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(xxvii)அ.சா.27 திரு.ஆனந்தகுமார் தனது சாட்சியத்தில், தற்போது மாங்காடு காவல்நிலையத்தில், உதவி ஆய்வாளராக சட்டம் ஒழுங்கு பிரிவில் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 5.2.2017ம் தேதி இரவு 22.00 மணிக்கு பணியிலிருந்த போது அ.சா.1 சி.எஸ்.டி.பாபு என்பவர் நிலையம் ஆஜராகி தனது மகள் உறாசினி வயது 7 என்பவர் 5.2.2017ம் தேதி அன்று மாலை 6.00 மணிக்கு கீழே விளையாடிக் கொண்டிருந்தவரை மாலையிலிருந்து காணவில்லை என்று கொடுத்த புகார் மனுவை பெற்று, மாங்காடு காவல்நிலைய கு.எண்.285/2017 பிரிவு சிறுமி காணவில்லை என்று வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளரின் புலன் விசாரணைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(xxviii)அ.சா.28 திருமதி.நிர்மலாபாய் தனது சாட்சியத்தில், கடந்த 10.02.2017ம் தேதி அன்று சென்னை தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது பேராசிரியர் எஸ்.கார்த்திகா தேவி, சட்டம் சார்ந்த மருத்துவம், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி அவர்களிடம் இருந்து மாங்காடு காவல் நிலைய குற்ற எண்.285/2017ல் சம்மந்தப்பட்ட பிரேத பரிசோதனை எண்.298/2017 சேகரிக்கப்பட்ட பொருட்கள் 1. இரண்டு பற்கள், 2. இரண்டு தொடை எலும்புகள் ஆகியவைகளை டி.என்.ஏ ஆய்விற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகன் என்பவர் மூலம் டி.என்.ஏ பகுப்பாய்விற்கு பெறப்பட்டது என்றும், மேற்கொள்ளப்பட்ட டிஎன்ஏ ஆய்வில் இருந்து பொருட்கள் 1. இரண்டு பற்கள் மற்றும் 2. தொடை எலும்புகள் இரண்டு ஆகியவை ஒரே பெண் நபருடையது என்று பற்கள் மற்றும் எலும்புக்குரிய நபர் திரு.பாபு மற்றும் திருமதி.ஸ்ரீதேவி ஆகியோரின் உயிரியல் மகள்தான் என்று

தீர்மானிக்கப்பட்ட டிஎன்ஏ ஆய்வு அறிக்கை அளித்ததாகவும் வழக்கு பொருள் எண்.2 ஜட்டியில் விந்து கண்டறியப்பட்ட பகுதி டிஎன்ஏ ஆய்விற்காக 07.04.2017ம் தேதி அன்று டிஎன்ஏ பிரிவில் பெறப்பட்டது என்றும் இதன் தொடர்ச்சியாக 08.06.2017ம் தேதி அன்று அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம், செங்கல்பட்டு அவர்களிடம் இருந்து இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபராகிய உம்மிடமிருந்து இரத்த அட்டையில் சேகரிக்கப்பட்ட மாதிரி இரத்தம் டிஎன்ஏ ஆய்விற்காக டிஎன்ஏ பிரிவில் பெறப்பட்டது என்றும் மேற்கண்ட டிஎன்ஏ ஆய்வில் இருந்து ஐயிட்டம் 2 ஜட்டியில் காணப்பட்ட விந்து கறை குற்றம் சாட்டப்பட்ட நபர் திரு.தஉஷ்வந்தத் என்ற எதிரியதுதான் என்று தீர்மானிக்கப்பட்ட டிஎன்ஏ ஆய்வு அறிக்கை டிஎன்ஏ 166/2017 என்று இலக்கம் இடப்பட்டு 06.07.2017ம் தேதியிட்ட அறிக்கை அ.த.சா.ஆ.32 என்றும் இது சம்மந்தமாக மாங்காடு ஆய்வாளர் தன்னை விசாரித்தபோது இந்த விவரங்களை சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(xxix)அ.சா.29 திரு.ரவிக்குமார் மாங்காடு காவல்நிலைய ஆய்வாளர் தனது சாட்சியத்தில், அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, உதவி ஆய்வாளர் அச்சப்படிவ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்ததை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் அ.சா..ஆ.33 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னிட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி தலைமறைவாகிவிட்டதாகவும், பின்னர் தக்க புலனாளி கொடுத்த தகவலின் பேரில், 8.2.2017ம் தேதி காலை 9.00 மணிக்கு ஏ.ஜி.எஸ். பார்க், முகலிவாக்கம் என்ற இடத்திலிருந்த எதிரியை பிடித்து அ.சா.7

திருமதி.சுமதி, முகலிவாக்கம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அ.சா.8 திரு.மோகன்தாஸ், முகலிவாக்கம் கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் விசாரித்ததில், எதிரி, சிறுமி ஹாசினியை, தன்னுடைய வீட்டில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்து, அவளை கொலை செய்து, தாம்பரம்—மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் டெலிபோன்பூத் அருகே உள்ள முட்புதரில் வைத்து பெட்ரோல் ஊற்றி எரித்துவிட்டதாக சொன்னதாகவும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை, அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து கொண்டு மேற்படி இடத்திற்கு சென்று அந்த சிறுமியின் சடலத்தையும் மற்றும் சில சான்று பொருள்களை அந்த இடத்திலும், மேலும் எதிரி கொடுத்த அதே வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருடைய வீட்டிற்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் சிறுமிக்கு சொந்தமான தங்க கம்மல், கொலுசு, மற்றும் வேறு சில சான்று பொருட்களை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சிறுமியின் சடலத்தையும், சிறுமிக்கு சொந்தமான கம்மல் கொலுசு ஆகியவற்றையும் வேறு பல சான்று பொருள்களான டிராவல் பேக், 2 1/2 லிட்டர் பிடிக்கக்கூடிய பாட்டில்கள் இரண்டு, அப்பாச்சி பைக், ஹெல்மட், பர்ஸ், ஏ.டி.எம். கார்டு, பான் கார்டு, ஐ.டி. கார்டு ஆகியவற்றை அ.சா.7, அ.சா.8 மற்றும் அ.சா.21 முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்.

(XXX) பின்னிட்டு அ.சா.29 ஆய்வாளர் 8.2.2017ம் தேதி அன்றே மாலை சுமார் 16.30 மணிக்கு அரசு கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று, 16.30 மணியிலிருந்து 18.30 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.37 தயார் செய்து, அ.சா.26 திரு.முருகன் உதவி ஆய்வாளர் மூலம், பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய கே.எம்.சி. அரசு

WEB COPY

மருத்துவமனை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி அ.சா.26 உதவி ஆய்வாளர் அந்த வேண்டுகோளுடன் அரசு பொது மருத்துவமனை கீழ்பாக்கம் சென்னை மருத்துவரிடம் சென்று பிரேதத்தை அடையாளம் காட்டியுள்ளார். பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் நல்லடக்கம் செய்ய வேண்டி இறந்து போன உறாசினியின் உறவினரிடம் பிரேத்தை ஒப்படைத்துள்ளார். அ.சா.16 உடற்கூராய்வு பரிசோதனை மேற்கொண்டு இறப்பிற்கான காரணத்தை கண்டறிய இயலவில்லை என்று பிரேத பரிசோதனை சான்றிதழ் வழங்கியுள்ளார். அவர் அனுப்பிய உள்ளூறுப்புகளை பெற்ற தடய அறிவயில் துறை நிபுணர்கள் அ.சா.23 முதல் அ.சா.26 வரையுள்ளவர்கள் உள்ளூறுப்புகளை பரிசோதனை செய்தும், அனுப்பப்பட்ட சிறுமியின் மண்டை ஓட்டை ஆய்வு செய்தும், மரப ணு பரிசோதனை செய்தும், அந்த சிறுமியின் பிணம் உறாசினியின் பிணம் தான் என்பதை உறுதிபடுத்தியுள்ளனர். மேலும், அ.சா.22 கணிணி நிபுணர், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ.5 செல்போனை ஆய்வு செய்து, அதில் ஆபாச படங்கள் பார்க்கப்பட்டதற்கான தடயம் இருப்பதாக சான்று அளித்துள்ளார்.

(xxxi) பின்னிட்டு, அ.சா.29 ஆய்வாளர் 13.12.2017ம் தேதி எதிரியை நீதிமன்றம் மூலம் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டி அ.சா.ஆ.38 வேண்டுகோள் கடிதம் கொடுத்து, அதன் பேரில் அ.சா.19 மருத்துவர் திரு.செந்தில்குமார், எதிரியை பரிசோதனை செய்து, அவர் ஆண்மைதன்மை உடையவர் என அ.சா.ஆ.23 சான்றிதழ் வழங்கியுள்ளார். அதன் பிறகு அ.சா.29 ஆய்வாளர் எதிரியை போலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று, எதிரியை இரண்டு நாட்கள் காவலுக்கு எடுத்து, 18.2.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு சாட்சிகள் அ.சா.9 செல்வகுமார் மாங்காடு கிராம நிர்வாக அதிகாரி, அவரது உதவியாளர் அ.சா.10 பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் எதிரியை

விசாரித்த போது, எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சா.பொ.19 ஹெறல்மெட்டை சாட்சிகள் அ.சா.9 மற்றும் அ.சா.10 முன்னிலையில் அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

(xxxii) பின்னிட்டு அ.சா.29 ஆய்வாளர் எதிரி சம்பவத்தின் போது, இருசக்கர வாகனத்தை விற்பனை செய்த லட்சுமி மோட்டார்ஸ் மேலாளர் அ.சா.24 குருசாமி, மற்றும் மேற்படி எதிரி, சிறுமியின் உடலை எரிக்க பெட்ரோல் வாங்கிய, போரூர் மாதா இன்டியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்த அ.சா.18 திரு.சந்தோஉஷ்குமார், மேற்படி பெட்ரோல் போட்டதற்கு பணம் கொடுப்பதற்கு பதிலாக எதிரியின் ஆக்சிஸ் பேங்க் ஏ.டி.எம். கார் ஸ்வைப் செய்யப்பட்டதற்கு, ஆக்சிஸ் பேங்க மேனேஜர் அ.சா.13 திரு.ரகுராம் ஆகியரோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் பின்னர் அவர் பணிமாறுதலில் சென்றுவிட்டார்.

WEB COPY

(xxxiii) அ.சா.30 திரு.விவேகானந்தன், மாங்காடு காவல்நிலைய ஆய்வாளர், தனது சாட்சியத்தில், 22.4.2017ம் தேதி மாங்காடு காவல்நிலைய ஆய்வாளராக பணிக்கு வந்து, தனக்கு முன்னால் பணியிலிருந்த அ.சா.29 ஆய்வாளர் புலன் விசாரணை செய்து நிலுவையில் வைத்திருந்த வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, புகார்தாரர் மற்றும் எதிரி வசித்து வந்த நிகிதா பிளாட்சிற்கு சென்று அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.11 மற்றும் சாட்சிகள் ஸ்ரீவத்சன், லதாகுருஉஷ் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அவர்களது மகள் உறாசினி காணாமல் போன அன்று அணிந்திருந்த அணிகலன்களான, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ.2 மற்றும் சா.பொ.3 ஆகியவற்றை அடையாளம் காட்டியுள்ளனர். அதே போல்

அ.சா.3 முருகன் (எ) வெங்கட்டமுருகன் என்பவரும், உறாசினி காணாமல் போவதற்கு முன்பு, எதிரியுடனும், எதிரியின் நாயுடனும் விளையாடிக்கொண்டிருந்ததை பார்த்ததாக வாக்குமூலம் அளித்துள்ளதை பதிவு செய்துள்ளார். அ.சா.11 புஉஷ்பா என்பவர் எதிரி குழந்தை காணாமல் போன அன்று மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு அவரது முதுகில் ஒரு டிராவல் பேக்கை மாட்டிக்கொண்டு சென்றதை பார்த்ததாக கூறியதை பதிவு செய்துள்ளார். 27.05.2017ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.16ஐ விசாரித்து உடல் கூராய்வு சம்மந்தமாக ஆய்வாளருக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் குறித்து எட்டு கேள்விகள் வனைந்து அதற்குரிய விளக்கத்தை எழுதிக் கொடுக்கும்படி வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.43 கொடுத்துள்ளார். அந்த வேண்டுகோளின் படி மருத்துவர் 1.7.2017ம் தேதி அன்று எழுத்துமூலமான பதிலை கொடுத்துள்ளார். பின்னிட்டு 6.6.2017ம் தேதி அன்று நீதிமன்ற உத்தரவை பெற்று எதிரியை புழல் சிறையிலிருந்து எடுத்து செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவரிடம் ஆஜர் செய்து எதிரியின் இரத்தமாதிரியை சேகரித்து அதை நீதிமன்ற உத்தரவு மூலம் டி.என்.ஏ. பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளார்.

(xxxiv) பின்னிட்டு 1.7.2017ம் தேதி சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்த அ.சா.17 மோகன் என்பவரை விசாரித்து, அவர் ஏற்கனவே சம்பவ இடத்தில் எடுத்த புகைப்படங்கள் அவருடைய கம்ப்யூட்டரில் சி.டி.யாக பதிவு செய்து கொடுத்ததை அ.சா.ஆ.44 கடிதம் மூலம் பெற்றுள்ளார். பின்னர் இவ்வழக்கில் சான்று பொருள்களை பகுப்பாய்வு செய்த சென்னை தடய அறிவியல் துறை நிபுணர்கள் அ.சா.22, அ.சா.23, அ.சா.24, அ.சா.25, அ.சா.27 அ.சா.28 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிக்கு ஆண்மைதன்மை குறித்து பரிசோதனை செய்த அ.சா.19

WEB COPY

மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 7.8.2017ம் தேதி அன்று சிறுமி எரிக்கப்பட்ட இடத்தில் கிடந்த பிணம் சிறுமி உறாசினிதான் என்று அ.சா.29 ஆய்வாளரிடம் அடையாளம் காட்டிய அ.சா.14 முனிசேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். உறாசினி படித்த பள்ளியில் முதல்வர் அ.சா.15 திரு.வெங்கட்ராமன் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து உறாசினியின் வயதிற்கான சான்றிதழ் அ.சா.ஆ.15 பெற்றுள்ளார். பின்னிட்டு 16.8.2017ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, டி.டி.பி. காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து வரைவு குற்றப்பத்திரிக்கை பெற்று அன்றைய தினமே பிரிவுகள் 4 மற்றும் 8 போக்சோ ஆக்ட் 2012 மற்றும் இதச பிரிவு 302, 201 ஆகிய பிரிவிலிருந்து, இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7, பிரிவு 6 உ/இ.5 (எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் பிரிவு மாற்றம் செய்து அறிக்கை அ.சா.ஆ.45ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின்பு 17.8.2017ம் தேதி எதிரியின் மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

6. மேற்படி அரசுத் தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமானவைகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. 313(1)(பி) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி அவற்றை மறுத்து தன் மீது பொய் வழக்கு புனையப்பட்டதாக தெரிவித்து, தனது எழுத்துமூலமான பதிலை தாக்கல் செய்துள்ளார். அதில் அவர், காவல்துறையின் மேலதிகாரிகள் மற்றும் ஊடகத்தில் வந்த செய்திகளின் அழுத்தத்தின் காரணமாக தன் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், 7.2.2017 அன்று காலை 5.00 மணியளவில் தன்னுடைய அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த பிறகு காலை 7.30 மணியளவில் மாங்காடு போலிசார் தன்னுடைய வீட்டிற்கு வந்து தன்னையும், தன் குடும்பத்தாரையும் 30 நிமிடங்களுக்கு மேலாக விசாரித்து

விட்டு சென்றதாகவும், அதன்பிறகு தான் தூங்க சென்றதாகவும் மீண்டும் பகல் 11.00 மணியிலிருந்து 12.00மணிக்குள்ளாக மீண்டும் ஆய்வாளர் அழைப்பதாக தூங்கி கொண்டிருந்த தன்னை வந்து அழைத்துச் சென்றதாகவும், தன்னுடைய குடியிருப்பின் கீழ்தளத்திற்கு சென்ற பிறகு வெளியே ஜீப்பிலிருந்த ஆய்வாளர் தன்னிடம் தன்மீது குற்றவழக்கு ஏதேனும் உள்ளதா? என்று கேட்டதாகவும் அப்போது அவரிடம் ஒரு பெண்ணை காதல் செய்தது சம்மந்தமாக ஒரு புகார் வந்து அந்த காவல்நிலைய உதவி ஆய்வாளார் தன்னை எச்சரித்து அனுப்பியதாக சொன்னதாகவும், பிறகு தனது தந்தையிடமிருந்து தன்னுடைய செல்போனை வாங்கி பார்த்ததாகவும், அதன் பிறகு தன்னை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அடித்து துன்புறுத்தி சில தாள்களில் கையெழுத்து வாங்கி கொண்டு அங்கிருந்து சிறுமியின் பிணம் கிடந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், பிறகு அங்கிருந்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகவும் பிறகு 9.2.2017 அன்று நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், கூறியிருக்கின்றார். ஆனால் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

WEB COPY

7. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து, தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு

(i) இவ்வழக்கில் இறந்து போன சிறுமி உறாசினியின் தகப்பனார் அ.சா.1 திரு.பாபு, தாயார் அ.சா.2 திருமதி.ஸ்ரீதேவி ஆவார்கள். அ.சா.1 பெருங்கொளத்தூரில் சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரிந்து வந்துள்ளார். அ.சா.2 மதனந்தபுரத்தில் உள்ள நாராயணா எக்னோ பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அவர்களது குழந்தைகள் உறாசினி மற்றும் தேஜஸ்

ஆகியோர்களுடன் மதனந்தபுரத்தில் உள்ள மாதா நகர், 10வது குறுக்குத் தெருவில் உள்ள எப்.2 நிகிதா பிளாட்சில் குடியிருந்து வந்துள்ளனர். 5.2.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு மேற்படி நிகிதா பிளாட்சில் கீழ்தளத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி உறாசினியை அவரது தாயார் பால்குடிப்பதற்காக அழைத்து, சிறுமி உறாசினிக்கு பால் கொடுத்து குடிக்க வைத்துள்ளார். பிறகு மீண்டும் சிறுமி உறாசினி அவள் நண்பர்களுடன் விளையாட போவதாக சொல்லிவிட்டு கீழ்தளத்திற்கு சென்றுள்ளார். அதன் பிறகு அ.சா.1, அ.சா.2 ஆகியோர் அவர்களது மகன் தேஜஸ் என்ற 5 வயது சிறுவனுடன் பாய்கடை என்ற இடத்திற்கு சென்று காய்கறிகள் வாங்கச் சென்றுள்ளனர். திரும்பி 7.15 மணிக்கு வந்து உறாசினியை கூப்பிட்டு பார்த்த போது, அவள் வரவில்லை. அக்கம் பக்கம் தேடி பார்த்தும், அவள் கிடைக்காததால் இரவு 10.00 மணிக்கு மாங்காடு காவல்நிலையம் சென்று, அ.சா.1 பாபு புகார் அ.சா.ஆ.1 கொடுத்துள்ளார்.

WEB COPY

(ii) மேற்படி புகாரைப் பெற்ற அ.சா.27 உதவி ஆய்வாளர், கு.எண்.285/2017ல் சிறுமி காணவில்லை என்ற பிரிவின் கீழ் அன்றே அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.29 பதிவு செய்து, புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார்.

அ.சா.29 ஆய்வாளர் அ.சா.ஆ.29ஐ பெற்று புலன் விசாரணைக்காக அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள், அ.சா.1 அ.சா.2 அ.சா.3 அ.சா.4 ஆகியோர்களை விசாரித்துள்ளார். அன்று 23.15 மணிக்கு, அ.சா.5 அ.சா.6 ஆகியோர்கள் முன்னிலையில், அடுக்குமாடி குடியிருப்பிலிருந்த விளக்கு வெளிச்சத்தில், அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.33 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

(iii) மேற்படி அ.சா.3 எதிரியும், சிறுமி உறாசினியும், எதிரியின் நாயும் அதே அடுக்குமாடி குடியிருப்பில் எதிரியின் வீட்டிற்கு முன்பு அன்று மாலை 6.00 மணியிலிருந்து 6.15 மணிக்குள்

விளையாடிக்கொண்டிருந்ததை கடைசியாக நேரில் பார்த்துள்ளார்.

(iv) இந்த சூழ்நிலையில், நிகிதா பிளாட்ஸ் அருகே இருக்கும் கற்பக விநாயகர் கோயிலில் உள்ள சி.சி.டி.வி. கேமராவை அ.சா.1, அ.சா.6 ஆகியோர்கள் பார்த்து, அதில் எதிரியின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கையை பார்த்ததாக அ.சா.29 ஆய்வாளரிடம் சொல்லியுள்ளனர்.

(v) இதற்கிடையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களிடம், அவர்கள் வீட்டின் எதிரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் அ.சா.11 திருமதி.புஷ்பா என்பவர், 5.2.2017ம் தேதி மாலை 6.30 மணியளவில், அவர் வளர்க்கும் நாயை நடைபயிற்சிக்காக கூட்டிப் போகும் போது, இவ்வழக்கின் எதிரி தஸ்வந்த் பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தில் மேல் உட்கார்ந்து கொண்டு, முதுகில் ஒரு பையை மாட்டிக்கொண்டு, வண்டியின் முன்பக்கத்தில் ஹெல்மெட்டை வைத்துக்கொண்டு, டென்ஷனாக சென்றதை பார்த்துள்ளார்.

WEB COPY

(vi) அ.சா.29 காவல் ஆய்வாளர், மேற்படி சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும், அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையிலும், எதிரி தஸ்வந்தின் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில், எதிரியை விசாரணை செய்ய தேடிய போது எதிரி தலைமறைவாகி விட்டதாகவும், பின்னர் தக்க புலனாளி கொடுத்த தகவலின் பேரில், 8.2.2017ம் தேதி காலை 9.00 மணிக்கு ஏ.ஜி.எஸ். பார்க், முகலிவாக்கம் என்ற இடத்திலிருந்த எதிரியை பிடித்து அ.சா.7 திருமதி.சுமதி, முகலிவாக்கம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அ.சா.8 திரு.மோகன்தாஸ், முகலிவாக்கம் கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் விசாரித்ததில், எதிரி, சிறுமி ஹாசினியை, தன்னுடைய வீட்டில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்து, அவளை கொலை செய்து, தாம்பரம்–மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் டெலிபோன்பூத்

அருகே உள்ள முட்புதரில் வைத்து பெட்ரோல் ஊற்றி எரித்துவிட்டதாக சொன்னதாகவும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை, அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து கொண்டு மேற்படி இடத்திற்கு சென்று அந்த சிறுமியின் சடலத்தையும் மற்றும் சில சான்று பொருள்களை அந்த இடத்திலும், மேலும் எதிரி கொடுத்த அதே வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருடைய வீட்டிற்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் சிறுமிக்கு சொந்தமான தங்க கம்மல், கொலுசு, மற்றும் வேறு சில சான்று பொருட்களை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சிறுமியின் சடலத்தையும், சிறுமிக்கு சொந்தமான கம்மல் கொலுசு ஆகியவற்றையும் வேறு பல சான்று பொருள்களான டிராவல் பேக், 2 1/2 லிட்டர் பிடிக்கக்கூடிய பாட்டில்கள் இரண்டு, அப்பாச்சி பைக், ஹெல்மட், பர்ஸ், ஏ.டி.எம். கார்டு, பான் கார்டு, ஐ.டி. கார்டு ஆகியவற்றை அ.சா.7, அ.சா.8 மற்றும் அ.சா.21 முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்.

WEB COPY

(vii) பின்னிட்டு அ.சா.29 ஆய்வாளர் 8.2.2017ம் தேதி அன்றே மாலை சுமார் 16.30 மணிக்கு அரசு கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று, 16.30 மணியிலிருந்து 18.30 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.37 தயார் செய்து, அ.சா.26 திரு.முருகன் உதவி ஆய்வாளர் மூலம், பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய கே.எம்.சி. அரசு மருத்துவமனை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி அ.சா.26 உதவி ஆய்வாளர் அந்த வேண்டுகோளுடன் அரசு பொது மருத்துவமனை கீழ்பாக்கம் சென்னை மருத்துவரிடம் சென்று பிரேதத்தை அடையாளம் காட்டியுள்ளார். பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் நல்லடக்கம் செய்ய வேண்டி இறந்து போன உறாசினியின் உறவினரிடம் பிரேத்தை ஒப்படைத்துள்ளார். அ.சா.16

உடற்கூராய்வு பரிசோதனை மேற்கொண்டு இறப்பிற்கான காரணத்தை கண்டறிய இயலவில்லை என்று பிரேத பரிசோதனை சான்றிதழ் வழங்கியுள்ளார். அவர் அனுப்பிய உள்ளுறுப்புகளை பெற்ற தடய அறிவயில் துறை நிபுணர்கள் அ.சா.23 முதல் அ.சா.26 வரையுள்ளவர்கள் உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்தும், அனுப்பப்பட்ட சிறுமியின் மண்டை ஓட்டை ஆய்வு செய்தும், மரப ணு பரிசோதனை செய்தும், அந்த சிறுமியின் பிணம் உறாசினியின் பிணம் தான் என்பதை உறுதிபடுத்தியுள்ளனர். மேலும், அ.சா.22 கணினி நிபுணர், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ.5 செல்போனை ஆய்வு செய்து, அதில் ஆபாச படங்கள் பார்க்கப்பட்டதற்கான தடயம் இருப்பதாக சான்று அளித்துள்ளார்.

(viii) பின்னிட்டு, அ.சா.29 ஆய்வாளர் 13.12.2017ம் தேதி எதிரியை நீதிமன்றம் மூலம் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டி அ.சா.ஆ.38 வேண்டுகோள் கடிதம் கொடுத்து, அதன் பேரில் அ.சா.19 மருத்துவர் திரு.செந்தில்குமார், எதிரியை பரிசோதனை செய்து, அவர் ஆண்மைதன்மை உடையவர் என அ.சா.ஆ.23 சான்றிதழ் வழங்கியுள்ளார்.

WEB COPY

(ix) அதன் பிறகு அ.சா.29 ஆய்வாளர் எதிரியை போலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று, எதிரியை இரண்டு நாட்கள் காவலுக்கு எடுத்து, 18.2.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு சாட்சிகள் அ.சா.9 செல்வகுமார் மாங்காடு கிராம நிர்வாக அதிகாரி, அவரது உதவியாளர் அ.சா.10 பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரித்த போது, எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சா.பொ.19 ஹெறல்மெட்டை சாட்சிகள் அ.சா.9 மற்றும் அ.சா.10 முன்னிலையில் அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

(x) பின்னிட்டு அ.சா.29 ஆய்வாளர் எதிரி சம்பவத்தின் போது, இருசக்கர வாகனத்தை விற்பனை

செய்த லட்சுமி மோட்டார்ஸ் மேலாளர் அ.சா.24 குருசாமி, மற்றும் மேற்படி எதிரி, சிறுமியின் உடலை எரிக்க பெட்ரோல் வாங்கிய, போரூர் மாதா இன்டியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்த அ.சா.18 திரு.சந்தோஉஷ்குமார், மேற்படி பெட்ரோல் போட்டதற்கு பணம் கொடுப்பதற்கு பதிலாக எதிரியின் ஆக்சிஸ் பேங்க் ஏ.டி.எம். கார்ர் ஸ்வைப் செய்யப்பட்டதற்கு, ஆக்சிஸ் பேங்க மேனேஜர் அ.சா.13 திரு.ரகுராம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் பின்னர் அவர் பணிமாறுதலில் சென்றுவிட்டார்.

(xi) அதன் பின்னர் அந்த பணிக்கு வந்த அ.சா.30 திரு.விவேகானந்தன், மாங்காடு காவல்நிலைய ஆய்வாளர், 22.4.2017ம் தேதி மாங்காடு காவல்நிலைய ஆய்வாளராக பணிக்கு வந்து, தனக்கு முன்னால் பணியிலிருந்த அ.சா.29 ஆய்வாளர் புலன் விசாரணை செய்து நிலுவையில் வைத்திருந்த வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, புகார்தாரர் மற்றும் எதிரி வசித்து வந்த நிகிதா பிளாட்சிற்கு சென்று அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.11 மற்றும் சாட்சிகள் ஸ்ரீவத்சன், லதாகுருஉஷ் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அவர்களது மகள் உறாசினி காணாமல் போன அன்று அணிந்திருந்த அணிகலன்களான, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ.2 மற்றும் சா.பொ.3 ஆகியவற்றை அடையாளம் காட்டியுள்ளனர். அதே போல் அ.சா.3 முருகன் (எ) வெங்கட்டமுருகன் என்பவரும், உறாசினி காணாமல் போவதற்கு முன்பு, எதிரியுடனும், எதிரியின் நாயுடனும் விளையாடிக்கொண்டிருந்ததை பார்த்ததாக வாக்குமூலம் அளித்துள்ளதை பதிவு செய்துள்ளார். அ.சா.11 புஉஷ்பா என்பவர் எதிரி குழந்தை காணாமல் போன அன்று மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு அவரது முதுகில் ஒரு டிராவல் பேக்கை

WEB COPY

மாட்டிக்கொண்டு சென்றதை பார்த்ததாக கூறியதை பதிவு செய்துள்ளார். 27.05.2017ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.16ஐ விசாரித்து உடல் கூராய்வு சம்மந்தமாக ஆய்வாளருக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் குறித்து எட்டு கேள்விகள் வனைந்து அதற்குரிய விளக்கத்தை எழுதிக் கொடுக்கும்படி வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.43 கொடுத்துள்ளார். அந்த வேண்டுகோளின் படி மருத்துவர் 1.7.2017ம் தேதி அன்று எழுத்துமூலமான பதிலை கொடுத்துள்ளார். பின்னிட்டு 6.6.2017ம் தேதி அன்று நீதிமன்ற உத்தரவை பெற்று எதிரியை புழல் சிறையிலிருந்து எடுத்து செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவரிடம் ஆஜர் செய்து எதிரியின் இரத்தமாதிரியை சேகரித்து அதை நீதிமன்ற உத்தரவு மூலம் டி.என்.ஏ. பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளார்.

(xii) பின்னிட்டு 1.7.2017ம் தேதி சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்த அ.சா.17 மோகன் என்பவரை விசாரித்து, அவர் ஏற்கனவே சம்பவ இடத்தில் எடுத்த புகைப்படங்கள் அவருடைய கம்ப்யூட்டரில் சி.டி.யாக பதிவு செய்து கொடுத்ததை அ.சா.ஆ.44 கடிதம் மூலம் பெற்றுள்ளார். பின்னர் இவ்வழக்கில் சான்று பொருள்களை பகுப்பாய்வு செய்த சென்னை தடய அறிவியல் துறை நிபுணர்கள் அ.சா.22, அ.சா.23, அ.சா.24, அ.சா.25, அ.சா.27 அ.சா.28 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிக்கு ஆண்மைதன்மை குறித்து பரிசோதனை செய்த அ.சா.19 மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 7.8.2017ம் தேதி அன்று சிறுமி எரிக்கப்பட்ட இடத்தில் கிடந்த பிணம் சிறுமி உறாசினிதான் என்று அ.சா.29 ஆய்வாளரிடம் அடையாளம் காட்டிய அ.சா.14 முனிசேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். உறாசினி படித்த பள்ளியில் முதல்வர் அ.சா.15 திரு.வெங்கட்ராமன் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து உறாசினியின்

WEB COPY

வயதிற்கான சான்றிதழ் அ.சா.ஆ.15 பெற்றுள்ளார். பின்னிட்டு 16.8.2017ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, டி.டி.பி. காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து வரைவு குற்றப்பத்திரிக்கை பெற்று அன்றைய தினமே பிரிவுகள் 4 மற்றும் 8 போக்சோ ஆக்ட் 2012 மற்றும் இதச பிரிவு 302, 201 ஆகிய பிரிவிலிருந்து, இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7, பிரிவு 6 உ/இ.5 (எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் பிரிவு மாற்றம் செய்து அறிக்கை அ.சா.ஆ.45ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின்பு 17.8.2017ம் தேதி எதிரியின் மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 363, 366, 354 (பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7, 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் சம்பவத்தை கண் ணுற்ற சாட்சிகள் இல்லையென்றாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் எதிரியின் மீதான குற்றச்செய்கையை உறுதிபடுத்துவதாக அமைந்துள்ளது என்றும், மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டுமென்று வாதிட்டதோடு, தன்னுடைய எழுத்துமூலமான வாதுரையையும் சமர்ப்பித்துள்ளார்.

WEB COPY

9. மேலும் இவ்வழக்கில் அரசு தரப்புக்கு உதவியாக வழக்கறிஞர்கள் திரு.வி.கண்ணதாசன் மற்றும் திரு.பி.ஜி.ராஜமகேந்திரபாண்டியன் ஆகியோர் ஆஜராகி குவிமுச பிரிவு 301(2)ன் கீழ் மனு தாக்கல் செய்து

அனுமதிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் எழுத்துமூல வாதுரை குவிமுச பிரிவு 314ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சங்கதிகளே புகார்வாதியின் தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசு தரப்பின் எழுத்துமூல வாதுரையின் சாராம்சம் பின்வருமாறு

10. அ.சா.3 தெலுங்கு பேசும் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2ம் அதே இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் என்று எதிரி தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், ஏனெனில், அ.சா.3 சம்பவத்தன்று சிறுமி காணாமல் போவதற்கு முன்பு எதிரியுடன் விளையாடிக்கொண்டிருந்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106ன் கீழ் அ.சா.3 பார்த்ததாக சொல்கின்ற நேரத்தில் எதிரி அங்கில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிரிக்கு உள்ளது என்று கூறி, அதற்கு ஆதாரமாக கீழ்கண்ட முன் தீர்ப்புகளை

WEB COPY

In Babu @ Balasubramaniam Vs. State of Tamilnadu (2013)8 SCC 60, the Hon'ble Apex Court has held that "incident especially within the knowledge of accused, burden of proof upon the accused – failure to prove, he must be held liable"

In State of West Bengal vs. Mir.Mohammed Omar and others AIR 2000 SC 2988:(2000) 8 SCC 382: LNIND 2000 SC 1163(2001) I MLJ (CRL) 34, the Hon'ble Apex Court has held that "Under section 106 of the Indian Evidence Act 1872, inference can be drawn against a person, who is having knowledge about particular facts."

In Paramasivam and others Vs. State through Inspector of Police AIR 2014 SC 2936: LNIND 2014 SC 617: (2014) 3 MLJ (CRL) 682, the Hon'ble Apex Court has held that "eye witnesses stated that the accused has updated the victim the entire burden lies upon the accused under section 106 of Indian Evidence Act 1872"

சுட்டிக்காட்டி, மேற்கண்ட தீர்ப்புகளின் அடிப்படையில், எதிரியை சிறுமியுடன் பார்த்ததாக கூறும் அ.சா.3ன் சாட்சியம் உண்மையல்ல என்பதை எதிரி நிரூபிக்கத் தவறிவிட்டார் என்றும், மேலும் எதிரிக்கு ஆபாச படங்கள் பார்க்கும் பழக்கம் உள்ளது என்பதும், எதிரி உடல்ரீதியான உறவுகளில் அதிக மோகம் கொண்டவர் என்பதும், எதிரியின் செல்போன் சா.பொ.5ஐ பகுப்பாய்வு செய்த அ.சா.22ன் சாட்சியத்தின் மூலமும், சிறுமி சம்பவத்தின் போது அணிந்திருந்த சா.பொ.1 ஐட்டியில் எதிரியின் விந்துக்கறை கண்டறியப்பட்டதன் மூலமும் தெளிவாகிறது என்றும், ஆகையால் எதிரி, மேற்படி சிறுமியை அவரது சட்டப்பூர்வ பாதுகாவலர்களான அ.சா.1 மற்றும் அ.சா.2 இடமிருந்து எதிரியின் வீட்டிற்கு கடத்திச் சென்று, சிறுமியின் ஆடைகளை கழற்றி வன்புணர்வு செய்து, கொலை செய்து, அதற்கான தடயங்களையும் அழிக்கும் பொருட்டு சிறுமியின் உடலை பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளார் என்ற எதிரியின் மீதான இதச பிரிவு 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 6, 7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மூலமும், வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயச் சொத்துக்கள் மூலமும், அதனை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய, தடய அறிவியல் துறை சாட்சிகள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஆதரவாக நமது உச்சநீதிமன்றம் அளித்துள்ள Trimukh Maroti Kirkman Vs State of Maharashtra (2006) 10 SCC 681: LNNIND 2006 SC 811, என்ற தீர்ப்பில் பாரா 12ல் கீழ்கண்டவாறு

"In the case in hand there is no eyewitness of the current and the case of the prosec\ rests on circumstantial evidence. The normal principle in a case based on circumstantial evidence is that the circumstances from which an inference of guilt is sought to be drawn must be cogently and firmly established; that those circumstances should be off a definite tendency and unerringly pointing towards the guilt of the accused; that the circumstances taken cumulatively should form a chain so complete

that there is no escape from the conclusions that within all human probability the crime was committed by the accused and they should be in capable of explanation on any hypothesis other than that of the guilt of the accused and inconsistent with his innocence."

சொல்லப்பட்டுள்ளது என்றும், மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில், எதிரியின் மீதான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சூழ்நிலை சாட்சியங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டுள்ளார்.

11. அதற்கு கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது எழுத்துமூல வாதுரையை தாக்கல் செய்து வாதிட்டார். அவர் தனது வாதுரையில் இவ்வழக்கில் இறந்து போன குழந்தையை எதிரி கடத்திச் சென்றார் என்பதற்கும், குழந்தையின் ஆடைகளை எதிரி கழற்றி வன்புணர்வுக்கு ஆட்படுத்தினார் என்பதற்கும் எந்தவொரு சாட்சியமும் அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் சம்பவத்தை கண் ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், சூழ்நிலைச் சாட்சிகளை கொண்டு விசாரணை செய்யப்பட்டுள்ளதால், சூழ்நிலை சாட்சியங்களுக்குரிய நான்கு கோட்பாடுகளின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் இறந்து போன சிறுமியின் தந்தை அ.சா.1 ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றும், அவருக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியாது என்பதை அவரது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள போது, அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.1ன் குவிமுச பிரிவு 161ன் கீழான வாக்குமூலம் தமிழில் உள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் வாதிட்டார்.

(i) மேலும் அவர் தனது வாதுரையில், அரசு தரப்பில் எதிரி எந்த காலத்திலும் தலைமறைவாகவில்லை என்றும், அவர் 5.2.2017, 6.2.2017, 7.2.2017 ஆகிய தேதிகளில் வழக்கம் போல் அலுவலகத்திற்கு தான் சென்றார் என்றும், மேற்படி தேதிகளில் எதிரி அலுவலகத்திற்கு செல்லாமல்

WEB COPY

தலைமறைவாக இருந்தார் என்பது குறித்து அரசு தரப்பில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், அ.சா.29 புலனாய்வு அதிகாரி தனது சாட்சியத்தில் 8.2.2017ம் தேதி காலை 9.00 மணிக்கு எதிரியை கைது செய்ததாகவும் காலை 9.05 மணி முதல் 10.00 மணிவரை எதிரியிடமிருந்து அ.சா.7 கிராம நிர்வாக அதிகாரி, அ.சா.8 கிராம நிர்வாக அதிகாரியின் உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக கூறியுள்ளார் என்றும், ஆனால் அ.சா.7 தனது சாட்சியத்தில் 8.2.2017ம் தேதி காலை 8.15 மணிக்கு விசாரணை அதிகாரி தொடர்பு கொண்டு ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சி கையெழுத்து போட வரச்சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எதிரியை காலை 9.00 மணிக்கு கைது செய்யும் போது, கிராம நிர்வாக அலுவலருக்கு காலை 8.15 மணிக்கு எப்படி தகவல் கொடுக்க முடியும். ஆகையால் இது எதிரியின் மீது பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும் வாதிட்டார்.

WEB COPY

(ii) மேலும் அவர் தனது வாதுரையில், காணாமல் போன சிறுமியின் பிரேதம் போலிசார் கண்டெடுத்த பிறகு, மேற்படி பிரேதம் யார் என்பதை உறுதி செய்ய புகார்தாரரையோ, பிரேதத்தின் பெற்றோரையோ அழைத்துச்செல்லவில்லை என்றும், மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் உண்மையில் எதிரியினுடையதானா? என்பதை நிரூபிக்கும் வகையில், அந்த செல்போனில் உள்ள சிம் கார்டின் உரிமையாளர் யார் என்பதையும், எந்த கம்பெனியை சார்ந்தது என்றும், யாரிடம் பேசினார் என்ற கால் விவரம் போன்ற எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் மேலும் அ.சா.6 சி.சி.டி.வி. காட்சிகளை பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி சி.சி.டி.வி. பதிவுகளை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3, அ.சா.4, அ.சா.11, அ.சா.14 ஆகியோர், அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு நெருங்கிய நண்பர்கள்

என்றும், அவர்களும் தெலுங்கு பேசபவர்கள் என்றும், அதனால் அ.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே அவர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அ.சா.16 உடற்கூராய்வு மருத்துவர் தனது சாட்சியத்தில் இறப்பிற்கான காரணம் இதுதான் என்று அறுதியிட்டு கூற இயலவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே அரசு தரப்பில் இறப்பிற்கான காரணம் நிரூபிக்கப்படவில்லை என்றும், அ.சா.18 பெட்ரோல் பங்க் ஊழியருக்கான அடையாள அட்டையை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை இரண்டு நாட்கள் காலதமாதமாக நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், எனவே அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் சாட்சியங்களுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் மேற்கண்ட தனது வாதுரைகளுக்கு ஆதரவாக கீழ்கண்ட முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதுரை செய்தார்.

1. (2012) 3 MLJ (Crl) 414 Kavitha and others Vs. State
2. 2016-1-L.W.(Crl) 145 Ramajayam @ Appu Vs. State
3. 2013-1-L.W. (Crl).134 Katturaja & anr. Vs. State
4. 2012-2-L.W. (Crl) 233 Sampathkumar vs. Inspector of Police Krishnagiri
5. 2015-1-L.W.(Crl)5 J.S. Tamil Selvan Vs. State.
6. 2014-1-L.W.(Crl.) 729 Karvendan Vs. State
7. Crl.Appeal No.639 of 2011 Sangili @ Sanganathan Vs. State
8. 2013-1-L.W. (Crl) 579 Balu @ Balamurugan Vs. Inspector of Police Permbalur District.



WEB COPY

எனவே மேற்கண்ட முன்தீர்ப்புகளின் அடிப்படையில், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

13. **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள்**

1, 05.02.2017 அன்று மாலை 7.00 மணிக்கு உறாசினி என்ற குழந்தை காணாமல் போனதாக அவருடைய பெற்றோர்கள் அ.சா.ஆ.1 புகாரில் சொல்வது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

2, ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட எரிந்து போன பிரேதம், சிறுமி உறாசினியினுடையதுதான் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

WEB COPY

3, காணாமல் போன உறாசினியை எதிரி, பாலியல் பலாத்காரம் செய்து, கொலை செய்து, அவரது சடலத்தை எரித்து, கொலைக்கான தடயங்களை மறைத்தாரா?

4. இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7 மற்றும் பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிருபிக்கப்பட்டுள்ளதா?

5, அரசு தரப்பு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது எனில் தண்டனையின் விவரம் என்ன?

6, இறந்து போன பெண்ணின் குடும்பத்திற்கு குவிமுச பிரிவு 357(2)ன் கீழ் இழப்பீடு கொடுக்க வேண்டுமா? இல்லையா?

7. எதிரிக்கு குவிமுச பிரிவு 358ன் கீழ் இழப்பீடு கொடுக்க வேண்டுமா? இல்லையா?

**14. பிரச்சனை எண்.1**

இந்த வழக்கின் உண்மையை தன்மையை ஆய்வு செய்வதற்கு முன்பாக சமா்பிக்கப்பட்டுள்ள சாட்சியங்களை எவ்வாறு மதிப்பிட வேண்டுமென்று மாண்புமிகு நமது உச்சநீதிமன்றம் கீழ்கண்ட தீா்ப்புகளில் சுட்டிக்காட்டியிருக்கிறது. அந்த தீா்ப்புகளின் விவரம் பின்வருமாறு

**AIR 2009 SC 152 In Saravanan (supra), reiterating the principle, the Court held:**
"Court that while appreciating the evidence of a witness, minor discrepancies on trivial matters without affecting the core of the prosecution case, ought not to prompt the court to reject evidence in its entirety. Further, on the general tenor of the evidence given by the witness, the trial court upon appreciation of evidence forms an opinion about the credibility thereof, in the normal circumstances the appellate court would not be justified to review it once again without justifiable reasons. It is the totality of the situation, which has to be taken note of. Difference in some minor detail, which does not otherwise affect the core of the prosecution case, even if present, that itself would not prompt the court to reject the evidence on minor variations and discrepancies."

WEB COPY

**In Inder Singh and another v.State (Delhi Administration) reported in 1978 4 SCC 161 held as follows:**
"2. Credibility of testimony, oral and circumstantial, depends considerably on a judicial evaluation of the totality, not isolated scrutiny. While it is necessary that proof beyond reasonable doubt should be adduced in all criminal cases, it is not necessary that it should be perfect." In the circumstance of the case, the Court, analyzing the evidence, opined:
"62. From the above discussion the eyewitnesses including injured witnesses,their evidence does not at all inspire confidence and their evidence is running in conflict and contradiction with the medical evidence and ballistic expert's report in regard to the weapon of offence, which was different from the one sealed in the police station. The High Court has, in our opinion, disregarded the rule of judicial prudence in converting the order

of acquittal to conviction.”

**In Sunil Kumar Sambhudayal Gupta (supra), reported in 2010 13 SCC 657 while dealing with the issue of material contradictions, the Court held:**

“30. While appreciating the evidence, the court has to take into consideration whether the contradictions/ omissions had been of such magnitude that they may materially affer the trial. Minor contradictions, inconsistencies, embellishments or improvements on trivial matters without effecting the core of the prosecution case should not be made a ground to reject the evidence in its entirety. The trial court,after going through the entire evidence, must form an opinion about the credibility of the witnesses and the appellate court in normal course would not be justified in reviewing the same again without justifiable reasons. (Vide State v. Saravanan)

31. Where the omission(s) amount to a contradiction, creating a serious doubt about the truthfulness of a witness and the other witness also makes material improvements before the court in order to make the evidence acceptable, it cannot be safe to rely upon such evidence. (Vide State of Rajasthan v. Rajendra Singh21.)

32. The discrepancies in the evidence of eyewitnesses, if found to be not minor in nature, may be a ground for disbelieving and discrediting their evidence. In such circumstances, witnesses may not inspire confidence and if their evidence is found to be in conflict and contradiction with other evidence or with the statement already recorded, in such a case it cannot be held that the prosecution proved its case beyond reasonable doubt.”

(Vide Mahendra Pratap Singh v. State of U.P. )” And again:

“35. The courts have to label the category to which a discrepancy belongs. While normal discrepancies do not corrode the credibility of a party’s case, material discrepancies do so.”

(See Syed Ibrahim v. State of A.P.22 and Arumugam v. State)

மேற்கண்ட முன்தீர்ப்புகளில் சொல்லப்பட்டுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் கவனமாக இந்நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.

(i) 5.2.2017 அன்று மாலை 6.00 மணியளவில் புகார்தாரரான அ.சா.1 திரு.பாபு என்பவரும்,



WEB COPY

அவரது மனைவியான அ.சா.2 திருமதி.ஸ்ரீதேவி என்பவரும், காய்கறிகள் வாங்குவதற்காக பாய்கடை என்ற இடத்திற்கு செல்வதற்கு முன்பாக, அவர்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் தரைதளத்தில் விளையாடிக்கொண்டிருந்த அவர்களது மகள் உறாசினியை அழைத்து, குடிப்பதற்கு பால் கொடுத்ததாகவும், குழந்தையும் அந்த பாலை குடித்துவிட்டு, அவரது நண்பர்களுடன் விளையாடுவதற்காக மீண்டும் தரைதளத்திற்கு சென்று விளையாடிக்கொண்டிருந்ததாகவும், அ.சா.1, அ.சா.2 ஆகிய இருவரும் அவர்களது மற்றொரு ஆண்குழந்தையுடன், தங்கள் வீட்டை பூட்டிவிட்டு தரைதளத்திற்கு வந்து இருசக்கர வாகனத்தில் பாய்கடைக்கு செல்வதற்கு முன்பாக உறாசினி மற்ற குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்ததை பார்த்துவிட்டு வெளியே சென்றதாகவும், மீண்டும் மாலை 7.00 மணிக்கு திரும்பி வந்து பார்த்த போது அங்கு விளையாடிக் கொண்டிருந்த அந்த குழந்தை உறாசினி காணவில்லை என்பதால் இரவு 9.00 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக புகார் அ.சா.ஆ.1 கொடுத்தார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

WEB COPY

(ii) மேற்படி அ.சா.ஆ.1 புகாரை பரிசீலனை செய்கையில், 5.2.2017ம் தேதி, அ.சா.1 திரு.சி.எஸ்.டி.பாபு என்பவரால், மாங்காடு காவல்நிலைய ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது. அதில், மேற்சொன்ன சங்கதிகள் குறிப்பிடப்பட்டு, அ.சா.1ன் மகள் உறாசினியை கண்டுபிடித்து தருமாறு கூறப்பட்டுள்ளது. அந்த புகாரை அ.சா.27 திரு.ஆனந்தகுமார், மாங்காடு காவல்நிலைய உதவி ஆய்வாளர், 5.2.2017ம் தேதி இரவு 22.00 மணிக்கு பெற்று, அக்காவல்நிலைய கு.எண்.285/2017 சிறுமி காணவில்லை என்ற பிரிவின் கீழ் அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்பதும், மேற்படி

அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1, அ.சா.26 ஆகியோரின் வாய்மொழி சாட்சியங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு சான்றாவணங்களான அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் அந்த அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையானது 7.2.2017ம் தேதி அன்று நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

(iii) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அ.சா.1 ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றும், அவரது தாய்மொழி தெலுங்கு என்றும், அவருக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாதென தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேலும் அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபோது ஆங்கிலத்தில்தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இந்நிலையில், அவர் 5.2.2017ம் தேதி கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகார் தமிழில் எழுதப்பட்டுள்ளதால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதே போன்று, அ.சா.1ன் குவிமுச பிரிவு 161ன் கீழான வாக்குமூலம் தமிழில் பதிவு செய்யப்பட்டுள்ளது நம்பக்கூடியதாக அமையவில்லை என்றும், அதே போன்று 5.2.2017 அன்று பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை 37 மணி நேரம் காலதாமதமாக, அதாவது 7.2.2017 அன்றுதான் நீதித்துறை நடுவர் அவர்களால் பெறப்பட்டுள்ளது என்றும், இந்த காலதாமதம் குறித்து அரசு தரப்பில் சரியான விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை என்றும் இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்றும் வாதிடப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்தது. அவ்வாறு பரிசீலிக்கும் போது, அ.சா.ஆ.1 புகாரை, தான் எழுதவில்லை என்றும், தான் காவல்நிலையம் சென்ற போது தன்னுடன் வந்த பக்கத்து வீட்டுக்காரர்

WEB COPY

எழுதிக்கொடுத்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எனவே தெலுங்கு மொழி மட்டும் எழுதபடிக்க தெரிந்த ஒருவர் தமிழில் எழுத வாய்ப்பில்லை என்பது உண்மையில் சரியான கூற்றாக இருந்தாலும், இந்த புகாரை அ.சா.1, தானே எழுதிக் கொடுத்ததாக எங்கும் சொல்லவில்லை. அவர் தன்னுடன் காவல்நிலையத்திற்கு வந்த ஒருவர் எழுதிக்கொடுத்து அதில் கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் அதை எழுதிக் கொடுத்த நபர் அ.சா.1 குடியிருக்கும் குடியிருப்பிலேயே இருக்கக்கூடிய ஒருவர் அவருடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க உதவியாக இருந்திருப்பார் என்பது யதார்த்தமான உண்மையாகும். எனவே அசா1 உடன் உதவிக்கு சென்ற ஒருவர் எழுதிக்கொடுத்த புகாரில் அ.சா.1 கையெழுத்து மட்டுமே போட்டுள்ளார் என்ற அரசு தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே அமைந்துள்ளதென இந்நீதமன்றம் கருதுகிறது.

WEB COPY

(iv) மேலும் அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை 37 மணிநேரம் காலதாமதமாக நீதித்துறை நடுவருக்குச் சென்றதாக எதிரி தரப்பில் சொல்லப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டுவதை போல அது உண்மையிலேயே 7ம் தேதி இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்பது உண்மையானால், அந்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் கண்டுள்ள சங்கதிகளில் 5.2.2017 அன்று சிறுமி காணாமல் போனதாக மட்டும் சங்கதிகள் அமைந்திருக்காது. ஏனெனில், எதிரியின் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழான பதிலின் படி 7.2.2017 அன்றே எதிரியை கைது செய்து கொண்டு போய் எதிரியை அடித்து கையெழுத்து வாங்கி கொண்டது உண்மையாக இருக்குமேயானால், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கத்திகளுக்கு ஏற்றவாறு அசாஆ1 புகாரும், அசாஆ29 அச்சுப்படிவ

முதல் தகவல் அறிக்கையும் தயார் செய்யப்பட்டிருக்குமே தவிர, சிறுமி காணாமல் போனதாக மட்டும், புகாரும், முதல் தகவல் அறிகக்கையும் பதிவு செய்யப்பட்டிருக்காது. காலதாமதத்திற்கான காரணம் குறித்து அரசு தரப்பில் புலனாய்வு அதிகாரி சரியான விளக்கம் அளிக்காததால் மட்டுமே, சிறுமி காணாமல் போனது குறித்து, அ.சா.1 கொடுத்த புகார் உண்மையில்லை என்று எடுத்துக்கொள்ள முடியாது. மேலும் நீதியை நிலைநிறுத்துவதற்காக, உண்மை இதுதான் என்று நீதிமன்றம் அறிந்த பிறகும், மேலும் எதிரிக்கு எதிராக பொய் வழக்கு புனையப்படவில்லை என்பது தெரிந்த பிறகு, எந்தவொரு காலதாமதத்தையும் மன்னித்து, ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என இந்நீதிமன்றம் நம்புகிறது. ஏனெனில் நீதிமன்றத்தின் உண்மையான பணியே உண்மையை கண்டறிவதும், கண்டறிந்த உண்மையின் அடிப்படையில் நீதியை நிலைநிறுத்துவதுமாகும். காலதாமதம் என்பதை வலுவான காரணமாக கருதி அநீதியை செய்வதற்கு யாருக்கும் சட்டப்படி அதிகாரமோ உரிமையோ கிடையாது. இந்த வழக்கை பொருத்தவரை சிறுமி 5.2.2017 அன்று காணாமல் போனது உண்மை என்பதால், காவல்துறையினால் ஏற்பட்ட இரண்டு நாள் காலதாமதத்தில் அசாஆ1 புகாரும் அசாஆ29 அச்சு முதல் தகவல் அறிக்கையும் 07.02.2017 அன்று தான் உருவாக்கப்பட்டது என்ற எதிரி தரப்பு வாதம் சட்டப்படி ஏற்று க்கொள்ள முடியாது வாதம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அந்த காலதாமதத்தை அந்த காவல் அதிகாரி வேண்டுமென்றே ஏதேனும் ஒரு உண்மையை மறைக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு செய்ததாக இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரவில்லை.

(v) மேலும், மேற்படி அ.சா.ஆ.1 புகாரையும் அ.சா.ஆ.29 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையையும் அன்றே பெற்ற அ.சா.29 திரு.ரவிக்குமார், மாங்காடு காவல்நிலைய ஆய்வாளர், காணாமல்



WEB COPY

போன சிறுமி உறாசினியை தேடுவதற்காக மேற்படி சம்பவ இடமான அ.சா.1ன் வீடான நிகிதா பிளாட்சிற்கு அன்று இரவு 23.15 மணிக்கு சென்று மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயாரித்து அங்கிருந்த சாட்சிகளை விசாரித்தார் என்பது உண்மைதான் என்பதை சாட்சிகள் அ.சா.5 ரகுராம் சித்தார்த்தன், அ.சா.6 உதயகுமார் ஆகியோருடைய சாட்சியங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, 05.02.2017 இரவு 23.15 மணியளவில் அ.சா.1ன் வீடான நிகிதா பிளாட்சிற்கு தரைதளத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் அ.சா.ஆ.2 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.33 தயார் செய்துள்ளார் என்பது உண்மையென தெரிய வருகிறது.

(vi) எனவே, மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக 05.02.2017 அன்று மாலை 7.00 மணிக்கு உறாசினி என்ற குழந்தை காணாமல் போனது உண்மையென அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

WEB COPY

**15. பிரச்சனை எண்.2**

ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட எரிந்து போன பிரேதம், சிறுமி உறாசினியினுடையதுதான் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை கவனமாக இந்நீதிமன்றம் பரிசீலித்து பார்த்தது.

(i) அவ்வாறு பார்க்கும் போது, அ.சா.29 ஆய்வாளர் மேற்படி உறாசினியை பற்றிய விவரங்களை சேகரிக்கும் பொருட்டு, அந்த நிகிதா பிளாட்சில் வசித்து வந்த நபர்களிடம் விசாரணையை 05.02.2017 அன்று துவக்கியுள்ளார். அப்படி விசாரணை செய்கையில், காணாமல் போன உறாசினியை கடைசியாக

பார்த்த சாட்சி அ.சா.3 ஆவார். அவர் தனது சாட்சியத்தில், 5.2.2017ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தான் கோயிலுக்கு போய்விட்டு மாலை 5.30 மணியளவில் வீட்டிற்கு வந்து, அப்பார்மெண்ட்டின் மொட்டைமாடியில் காயப்பட்டிருந்த துணிகளை எடுப்பதற்காக மாலை 6.00 மணியிலிருந்து 6.15 மணிக்குள்ளாக தான் மொட்டை மாடிக்கு போனதாகவும், அப்போது இரண்டாவது தளத்தில், எதிரியும், அவரது நாயும், உறாசினியும் விளையாடிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு மேலே போனதாகவும், தான் மேலே இருந்த துணியை எடுத்துக் கொண்டு கீழே வரும் போதும் அவர்களை மீண்டும் பார்த்ததாகவும், அன்று மாலை 7.00 மணியளவில் அ.சா.1 தன் குழந்தையை காணவில்லை என்று தேடிக் கொண்டு முதல் தளத்திற்கு வந்த போது, 2வது தளத்தில் பார்த்ததை அவரிடம் சொல்லி அங்கு போய் பார்க்கும்படி சொன்னதாகவும், அ.சா.1 மேலே போய் பார்த்துவிட்டு, பதட்டத்துடன் கீழே வந்ததை பார்த்து, அவருடன் சேர்ந்து குழந்தையை தேடி கிடைக்காததால், 8.30 மணியளவில் புகார் கொடுக்கச் சொன்னதாகவும், பின்னர் 9.30 மணியளவில் 6,7 போலிசார் அங்கு வந்து குழந்தையை தேடிய போது அவர்களிடம் 2வது தளத்தில் குழந்தையும், எதிரியும், நாயும் விளையாடிக்கொண்டிருந்ததை தான் பார்த்த விவரத்தை சொன்னதாகவும், அதன் பிறகு 6.2.2017, 7.2.2017 ஆகிய தேதிகளில் குழந்தையை தேடி கிடைக்கவில்லை என்பதையும், 8.2.2017ம்தேதி தன் மனைவி மூலம் எதிரிதான் அந்த குழந்தையை கற்பழித்துக் கொன்றுவிட்டார் என்ற விவரம் தனக்கு தெரிய வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அசா3ன் சாட்சியத்தின் படி 05.02.2017 அன்று மாலை 6 முதல் 6.15 மணிக்குள்ளாக அந்த குழந்தையை அ.சா.3 பார்த்த பிறகு அந்தக் குழந்தையை உயிருடன் யாரும் பார்க்கவில்லை என்பதால் அ.சா.3ன் சாட்சியத்தின்படி எதிரியையும், சிறுமியையும், எதிரியின் நாயையும் ஒன்றாக கடைசியாக பார்த்திருக்கிறார்

WEB COPY

என்பது தெரிய வருகிறது. அதே போல் அ.சா.11 அன்று மாலை 6.30 மணிக்கு மேலாக எதிரி அவருடைய அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து தன்னுடைய இருசக்கர வாகனத்தில், தன்னுடைய முதுகில் ஒரு டிராவல்பேக்கை மாட்டிக்கொண்டு பதட்டத்துடன் வெளியே சென்றதை பார்த்திருக்கிறார் என்பது அவருடைய சாட்சியத்தின் வாயிலாக தெரிய வருகிறது.

(ii) அதன் பிறகு 8.2.2017ம் தேதி எதிரியை கைது செய்த பிறகு, அவர் அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அதே தினம் பகல் 11.35 மணிக்கு தாம்பரம்—மதுரவாயில் பைபாஸ் ரோட்டில், அனகாபுத்தூர் அருகே உபயோகம் இல்லாத டெலிபோன் பூத் அருகே உள்ள முட்புதரில் எதிரி அடையாளம் காட்ட ஒரு குழந்தையின் உடல் எரிந்து போன நிலையிலும், அடையாளம் காண முடியாத நிலையிலும் கண்டெடுக்கப்படுகிறது. அந்த உடல் 5.2.2017ம் தேதியன்று காணாமல் போன மேற்படி சிறுமி உறாசினியின் உடல் தான் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

WEB COPY

(iii) அந்த சங்கதியை நிரூபிப்பதற்கு சிறுமி படித்த பள்ளியின் நிர்வாக அதிகாரியான அ.சா.14 முனிசேகரும், மானுடவியல் நிபுணர் அ.சா.25 திருமதி.புஷ்பராணியும், டி.என்.எ நிபுணர் அ.சா..28 திருமதி.நிர்மலாபாய் என்பவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளித்து, அ.சா.29ஆல் 8.2.2017 அன்று கைப்பற்றிய பிரேதம், காணாமல் போன சிறுமி உறாசினியின் பிரேதம்தான் என்று சாட்சியம் அளித்திருக்கின்றார்கள்.

(iv) அவர்களுடைய சாட்சியத்தை ஆய்வு செய்வதற்கு முன்பாக கீழ்கண்ட சட்ட பிரிவுகளும், வழிகாட்டு தீர்ப்புகளும் மேற்படி நிபுணர்களின் சாட்சியங்களை பற்றி மதிப்பிடுவதற்கு முன்பாக

இந்நீதிமன்றம் கருத்தில் கொள்வது சரியான முடிவை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**This Court had the occasion to consider various aspects of DNA profiling and DNA reports. K.T. Thomas, J. in Kamti Devi (Smt.) and another v. Poshi Ram, observed:**

"10. We may remember that Section 112 of the Evidence Act was enacted at a time when the modern scientific advancements with deoxyribonucleic acid (DNA) as well as ribonucleic acid (RNA) tests were not even in contemplation of the legislature. The result of a genuine DNA test is said to be scientifically accurate. …"

**In Pantangi Balarama Venkata Ganesh v. State of Andhra Pradesh, a two-Judge Bench had explained as to what is DNA in the following manner:**

"41. Submission of Mr Sachar that the report of DNA should not be relied upon, cannot be accepted. What is DNA? It means: "Deoxyribonucleic acid, which is found in the chromosomes of the cells of living beings is the blueprint of an individual. DNA decides the characteristics of the person such as the colour of the skin, type of hair, nails and so on. Using this genetic fingerprinting, identification of an individual is done like in the traditional method of identifying fingerprints of offenders.The identification is hundred per cent precise, experts opine."

WEB COPY

**87 (2001) 5 SCC 311, 88 (2009) 14 SCC 607**

178. There cannot be any doubt whatsoever that there is a need of quality control. Precautions are required to be taken to ensure preparation of high molecular weight DNA, complete digestion of the samples with appropriate enzymes, and perfect transfer and hybridization of the blot to obtain distinct bands with appropriate control. (See article of Lalji Singh, Centre for Cellular and Molecular Biology, Hyderabad in DNA profiling and its applications.) But in this case there is nothing to show that such precautions were not taken.

42. Indisputably, the evidence of the experts is admissible in evidence in terms of Section 45 of the Evidence Act, 1872. In cross-examination, PW46 had stated as under: “If the DNA fingerprint of a person matches with that of a sample, it means that the sample has come from that person only. The probability of two persons except identical twins having the same DNA fingerprint is around 1 in 30 billion world population.””

217. In Santosh Kumar Singh v. State Through CBI89, which was a case of a young girl who was raped and murdered, the DNA reports were relied upon by the High Court which were approved by this Court and it was held thus:

“71. We feel that the trial court was not justified in rejecting the DNA report, as nothing adverse could be pointed out against the two experts who had submitted it. We must, therefore, accept the DNA report as being scientifically accurate and an exact science as held by this Court in Kamti Devi v. Poshi Ram (supra). In arriving at its conclusions the trial court was also influenced by the fact that the semen swabs and slides and the blood samples of the appellant had not been kept in proper custody and had been tampered with, as already indicated above. We are of the opinion that the trial court was in error on this score. We, accordingly, endorse the conclusions of the High Court on Circumstance 9.”

WEB COPY

**In Inspector of Police, Tamil Nadu v. John David 90**, a young boy studying in MBBS Course was brutally murdered by his senior. The torso and head were recovered from different places which were identified by the father of the deceased. For confirming the said facts, the blood samples of the father and mother of the deceased were taken which were subject to DNA test. From the DNA, the identification of the deceased was proved. Paragraph 60 of the decision is reproduced below:

“60. … The said fact was also proved from the DNA test conducted by PW 77. PW 77 had compared the tissues taken from the severed head, torso and limbs and on scientific analysis he has found that the same gene found in the blood of PW1 and Baby Ponnusamy was found in the recovered parts of the body and that therefore they should belong to the only missing son of PW1.”

**90 (2011) 5 SCC 509 180**

219. In Krishan Kumar Malik v. State of Haryana91, in a gang rape case when the prosecution did not conduct DNA test or analysis and matching of semen of the appellant-accused with that found on the undergarments of the prosecutrix, this Court held that after the incorporation of Section 53-A in CrPC, it has become necessary for the prosecution to go in for DNA test in such type of cases. The relevant paragraph is reproduced below:

"44. Now, after the incorporation of Section 53-A in the Cr.P.C w.e.f 23.06.2006, brought to our notice by the learned counsel for the respondent State, it has become necessary for the prosecution to go in for DNA test in such type of cases, facilitating the prosecution to prove its case against the accused. Prior to 2006, even without the aforesaid specific provision in CrPC the prosecution could have still restored to this procedure of getting the DNA test or analysis and matching of semen of the appellant with that found on the undergarments of the prosecutrix to make it a foolproof case, but they did not do so, thus they must face the consequences."

WEB COPY

**In Surendra Koli v. State of Uttar Pradesh and others92,** the appellant, a serial killer, was awarded death sentence which was confirmed by the High Court. While confirming the death sentence, this Court relied on 91 (2011) 7 SCC 130 92 (2011) 4 SCC 80 181 the result of the DNA test conducted on the part of the body of the deceased girl. Para 12 is reproduced below:-

"12. The DNA test of Rimpa by CDFD, a pioneer institute in Hyderabad matched with that of blood of her parents and brother. The doctors at AIIMS have put the parts of the deceased girls which have been recovered by the doctors of AIIMS together. These bodies have been recovered in the presence of the doctors of AIIMS at the pointing out by the accused Surendra Koli. Thus, recovery is admissible under Section 27 of the Evidence Act."

**In Mohammed Ajmal Mohammad Amir Kasab alias Abu Mujahid v. State of**

**Maharashtra93,** the accused was awarded death sentence on charges of killing large number of innocent persons on 26th November, 2008 at Bombay. The accused with others had come from Pakistan using a boat ‘Kuber’ and several articles were recovered from ‘Kuber’. The stains of sweat, saliva and other bodily secretions on those articles were subjected to DNA test and the DNA test matched with several accused. The Court observed:

“333. It is seen above that among the articles recovered from Kuber were a number of blankets, shawls and many other items of clothing. The stains of sweat, saliva and other bodily secretions on those articles were subjected to DNA profiling and, excepting Imran Babar (deceased Accused 2), Abdul Rahman Bada (deceased Accused 5), Fahadullah (deceased Accused 7) and Shoaib 93 (2012) 9 SCC 1182 (deceased Accused 9), the rest of six accused were connected with various articles found and recovered from the Kuber. The appellant’s DNA matched the DNA profile from a sweat stain detected on one of the jackets. A chart showing the matching of the DNA of the different accused with DNA profiles from stains on different articles found and recovered from the Kuber is annexed at the end of the judgment as Schedule III.”

WEB COPY

222. In Sandeep v. State of Uttar Pradesh94, the facts related to the murder of pregnant paramour/girlfriend and unborn child of the accused. The DNA report confirmed that the appellant was the father of the unborn child. The Court, relying on the DNA report, stated as follows:

“67. In the light of the said expert evidence of the Junior Scientific Officer it is too late in the day for the appellant Sandeep to contend that improper preservation of the foetus would have resulted in a wrong report to the effect that the accused Sandeep was found to be the biological father of the foetus received from the deceased Jyoti. As the said submission is not supported by any relevant material on record and as the appellant was not able to substantiate the said argument with any other supporting material, we do not find any substance in the said submission. The circumstance, namely, the report of DNA in

having concluded that accused Sandeep was the biological father of the recovered foetus of Jyoti was one other relevant circumstance to prove the guilt of the said accused."

**94 (2012) 6 SCC 107 183**

In Rajkumar v. State of Madhya Pradesh95, the Court was dealing with a case of rape and murder of a 14 year old girl. The DNA report established the presence of semen of the appellant in the vaginal swab of the prosecutrix. The conviction was recorded relying on the DNA report. In the said context, the following was stated:

"8. The deceased was 14 years of age and a student in VIth standard which was proved from the school register and the statement of her father Iknis Jojo (PW1). Her age has also been mentioned in the FIR as 14 years. So far as medical evidence is concerned, it was mentioned that the deceased prosecutrix was about 16 years of age. So far as the analysis report of the material sent and the DNA report is concerned, it revealed that semen of the appellant was found on the vaginal swab of the deceased. The clothes of the deceased were also found having appellant's semen spots. The hair which were found near the place of occurrence were found to be that of the appellant."

WEB COPY

**In Nandlal Wasudeo Badwaik v. Lata Nandlal Badwaik and another96**, the appellant, father of the child born to his wife, questioned the paternity of the child on the ground that she did not stay with him for the last two years. The Court directed for DNA test. The DNA result opined that the appellant was not the biological father of the child.

95 (2014) 5 SCC 353

96 (2014) 2 SCC 576

The Court also had the occasion to consider Section 112 of the Evidence Act which raises a presumption that birth during marriage is conclusive proof of legitimacy. The Court relied on the DNA test holding the DNA test to be scientifically accurate. The pertinent observations are extracted below:

"19. The husband's plea that he had no access to the wife when the child was begotten

stands proved by the DNA test report and in the face of it, we cannot compel the appellant to bear the fatherhood of a child, when the scientific reports prove to the contrary. We are conscious that an innocent child may not be bastardised as the marriage between her mother and father was subsisting at the time of her birth, but in view of the DNA test reports and what we have observed above, we cannot forestall the consequence. It is denying the truth. “Truth must triumph” is the hallmark of justice.

20. As regards the authority of this Court in Kamti Devi, this Court on appreciation of evidence came to the conclusion that the husband had no opportunity whatsoever to have liaison with the wife. There was no DNA test held in the case. In the said background i.e. non-access of the husband to the wife, this Court held that the result of DNA test “is not enough to escape from the conclusiveness of Section 112 of the Act.” The judgment has to be understood in the factual scenario of the said case. The said judgment has not held that DNA test is to be ignored. In fact, this Court has taken note of the fact that DNA test is scientifically accurate. We hasten to add that in none of the cases referred to above, this Court confronted with a situation in which a DNA 185 test report, in fact, was available and was in conflict with the presumption of conclusive proof of legitimacy of the child under Section 112 of the Evidence Act. In view of what we have observed above, these judgments in no way advance the case of the respondents.”

WEB COPY

(v) மேற்படி அ.சா.14 திரு.முனிசேகர் தனது சாட்சியத்தில், ஆய்வாளரிடம் சிறுமியின் பிணத்தை கண்டெடுத்த இடத்தில் பார்த்து, அந்த குழந்தையின் முகத்திலிருந்த இரண்டு பற்களை வைத்து அது குழந்தை உறாசினியின் பிரேதம் என்று அடையாளம் காட்டியிருக்கிறார்.

(vi) மேற்படி பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்ட இரண்டு பற்கள், (2). இரண்டு தொடை எலும்புகள் ஆகியவற்றையும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் இரத்த மாதிரியையும் ஒப்பிட்டு பார்த்து, அந்த பற்கள் மற்றும் எலும்புகளுக்குரிய பெண் நபர், அ.சா.1 திரு.பாபு மற்றும் அ.சா.2 திருமதி.ஸ்ரீதேவி ஆகியோருடைய உயிரியல் மகள்தான் என்று அ.சா.28 டி.என்.எ பரிசோதனை நிபுணர்

சான்று வழங்கியுள்ளார்.

(vii) மேற்படி பிரேதத்தின் மண்டைஓடு மற்றும் சிறுமி உறாசினியின் புகைப்படம் ஆகியவற்றை விஞ்ஞான ரீதியாக ஒப்பிட்டு பார்த்து உரிய ஆய்வுகளை செய்து, அ.சா.25 மானுடவியல் நிபுணர், அந்த மண்டை ஓடு சிறுமி உறாசினியினடையதுதான் என்று முடிவு செய்து சான்றிதழ் வழங்கியுள்ளார்.

(viii) மேற்கண்ட மூவரின் சாட்சியத்திலிருந்தும், மேற்படி வழிகாட்டுதல் தீர்ப்புகளின் அடிப்படையிலும், ஆய்வு செய்து பார்த்ததில், அ.சா.25 புஷ்பராணி தனக்கு வந்த சிறுமியின் மண்டை ஓட்டையும், சிறுமி உறாசினியின் புகைப்படங்களையும் அறிவியல் பூர்வமாக ஒப்பிட்டு பார்த்து, தன்னுடைய ஆய்வுக்கு வந்த மண்டைஓடு சிறுமி உறாசினியின் மண்டைஓடுதான் என்பதை உறுதி செய்திருக்கிறார். அதே போல் அ.சா.28 திருமதி.நிர்மலாபாய் என்பவரும் தன்னிடம் ஆய்வுக்கு வந்த பற்கள் மற்றும் தொடை எலும்புகளையும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் இரத்த மாதிரிகளையும் ஒப்பிட்டு பார்த்து, அவைகள் இறந்த சிறுமியின் உடல் பாகங்கள் தான் என்பதையும், அ.சா.1, அ.சா.2ன் உயிரியல் மகள் தான் அந்த பற்கள் மற்றும் தொடை எலும்புக்குரியவர் என்றும் அறிவியல்பூர்வமாக உறுதி செய்திருக்கிறார். எனவே 8.2.2017 அன்று அ.சா.29 ஆய்வாளரால் மதுரவாயல்—தாம்பரம் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் அருகே கைப்பற்றிய அடையாளம் தெரியாத பிணத்தை அ.சா.14 அந்த பிணத்தின் முகத்திலிருந்த பற்களை வைத்து அது உறாசினிதான் என்று ஆய்வாளரிடம் சொன்ன சங்கதியை அ.சா.25 மற்றும் அ.சா.28 ஆகியோர்களின் அறிவியல்பூர்வமான முடிவுகள் உறுதிசெய்வதாக அமைந்துள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 8.2.2017 அன்று அ.சா.29 ஆய்வாளரால் மதுரவாயல்—தாம்பரம் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் அருகே கைப்பற்றிய அடையாளம் தெரியாத

WEB COPY

பிணம் 5.2.2017 அன்று மதனந்தபுரத்தில் வாதியின் வீட்டின் தரைதளத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது, மாலை 7.00 மணியளவில் காணாமல் போன சிறுமி உறாசினிதான் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(ix) எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட காரணங்களான, அ.சா.1, 2ன் இரத்த மாதிரிகள் அதை பகுப்பாய்வு செய்த அ.சா.28 முன்னிலையில் எடுக்கப்படவில்லை என்ற காரணம் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத காரணமாக இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது. ஏனெனில் யார் முன்னிலையில் எடுத்தாலும், இரத்தத்தில் உள்ள குணநலன்கள் ஒரே மாதிரியாகத்தான் இருக்குமே தவிர, அ.சா.28 முன்னிலையில் எடுக்கவில்லை என்பதால், அந்த இரத்தத்தின் குணநலன்கள் மாறிவிடும் என்று கருத முடியாது. மேலும், அ.சா.28 ஆய்வு செய்த இரத்தம் அ.சா.1ன் இரத்தம் அல்ல என்பது எதிரி தரப்பு வழக்கு அல்ல. எனவே அந்த காரணங்கள் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத காரணம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

(x) அதே போல் எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்படும் மற்றொரு காரணமான சிறுமியின் பிரேதத்தை கைபற்றிய இடத்தில் அதன் பெற்றோர்கள் சென்று அடையாளம் காட்டவில்லை என்றும், நடைமுறைக்கு முரணாக பள்ளி நிர்வாக அதிகாரி போய் அடையாளம் காட்டியிருப்பதால் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என வாதிட்ட காரணங்களை கவனமாக பரிசீலித்து பார்க்கையில், 5.2.2017 அன்று மாலை 7.00 மணியிலிருந்து குழந்தையை காணாமல் அதன் பெற்றோர்களான அ.சா.1ம், அ.சா.2ம் தேடி அலைந்து கொண்டிருக்கும் போது, உயிருடன் கிடைத்துவிட மாட்டாரா என்ற ஏக்கத்துடிப்பில் ஒவ்வொரு நிமிடத்தையும், அவர்கள் கழித்துக் கொண்டிருப்பார்களே

தவிர, அவள் பிணமாக கிடைப்பாள் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். 8.2.2017 அன்று காலை 9.30 மணிக்கு மேலாக எதிரியிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், அந்த குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற தகவல் பெற்றோர்களுக்கும் தெரிந்த பிறகு, அ.சா.29 புலனாய்வு அதிகாரி அந்த பிணத்தைக் கைப்பற்றப் போகும் போது அந்த பெற்றோர்களை உடன் அழைத்துச் சென்றிருந்தால் அவர்களுடைய மனநிலை எந்த அளவிற்கு துயரப்பட்டிருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்கும் போது மனித இதயம் கொண்ட யாரும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றே தோன்றுகிறது. எந்த ஒரு பெற்றோராலும், தன்னுடைய குழந்தை தீயில் எரிந்து கருகிய கட்டையாக 3 நாட்களுக்கு பிறகு கிடைத்தது என்பதை கேட்டவுடன் அவர்கள் சாதாரண மனநிலையிலிருந்து மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு துயரமான மனநிலைக்குச் சென்று அடக்க முடியாத துயரத்துடன் போராடிக்கொணடிருந்திருப்பார்களே தவிர, புலனாய்வு அதிகாரியுடன் சென்று அடையாளம் காட்டக்கூடிய மனநிலையில் அந்த குழந்தையின் பெற்றோர்கள் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. அதனால் தான் புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில், இந்த வழக்கில் காணாமல் போன சிறுமியின் பெற்றோர்கள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி இருந்ததாலும், மயக்க நிலையில் இருந்ததாலும், மேலும் எரிந்த போன சிறுமியின் பிரேதத்தை பார்த்தால் மேலும் அவர்கள் பாதிக்கப்படலாம் என்பதாலும் பெற்றோர்களை அழைத்து உறுதி செய்யவில்லை என்று கூறியிருக்கின்ற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே புலனாய்வு அதிகாரியின் செயல்மீது களங்கம் காண இயலவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(xi) எனவே, மேற்படி சாட்சிகளான அ.சா.14 முனிசேகர், மற்றும் அ.சா.25 திருமதி.புஷ்பாராணி,

WEB COPY

சென்னை தடயவியல் துறை மானுடவியல் நிபுணர், அ.சா.28 திருமதி.நிர்மலாபாய், சென்னை தயடவியல் துறை டி.என்.எ.பரிசோதனை நிபுணர் ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் அவர்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட, அ.சா.ஆ.28 ஆந்த்ரோபோலாஜி ரிப்போர்ட் மற்றும் அ.சா.ஆ.30 டி.என்.ஏ பரிசோதனை அறிக்கை ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, 8.2.2017 அன்று எதிரி போலிசாரால் கைது செய்யப்பட்டு, அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர் முன்னிலையில், தாம்பரம்—மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் அருகே உபயோகப்படுத்தப்படாத எமர்ஜென்சி பூத் அருகே உள்ள முட்புதரில், எதிரியால் அடையாளம் காட்டப்பட்ட எரிந்த நிலையிலிருந்த பிரேதம், 5.2.2017 அன்று மாலை 6.45 மணிக்கு மேல் காணாமல் போன குழந்தை சிறுமி உறாசினியின் உடல்தான் என்பதும், அது அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் குழந்தைதான் என்பதும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கின்றது.

WEB COPY

16. **<u>பிரச்சனை எண்.3 மற்றும் 4</u>**

மேற்படி சிறுமி உறாசினியை எதிரிதான் கடத்திச் சென்று, பாலியல் வன்புணர்வு செய்து, கொலை செய்தாரா? என்பதும், அதற்கான தடயங்களை அழிக்கும் பொருட்டு மேற்படி சிறுமியின் உடலை பெட்ரோல் ஊற்றி எரித்தாரா? என்பதும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்துப் பார்த்தது.

(i) இந்த வழக்கை பொருத்தவரை, குழந்தையை கடத்தியதற்கும், அந்த குழந்தையை வன்புணர்வு செய்ததற்கும், கொலை செய்ததற்கும், அந்த குழந்தையின் பிரேதத்தை எரித்ததற்கும் நேரடியாக

கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை. எனவே அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சூழ்நிலை சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வகையிலும், அந்த அனைத்து சூழ்நிலைகளும் எதிரிதான் இந்த குற்றங்களைப் புரிந்திருக்கிறார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபிக்கக்கூடியதாக அமைந்துள்ளதா? என்பதை கீழ்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்து பார்த்தது.

**Cr.Appeal No.1316/2008 Munnakumar Upadhyaya@ Munna Upadhyaya vs. The State of Andhra Pradesh**

10. There can be no doubt that the present case is one of circumstantial evidence. There is no witness to the commission of crime. Thus, there is a definite requirement of law that a heavy onus upon the prosecution be discharged to prove the complete chain of events and circumstances which will establish the offence and would undoubtedly only point towards the guilt of the accused. To prove this chain of events, prosecution had examined as many as 49 witnesses. This included the persons who were working at the bungalow, neighbours, the worker at the petrol pump from which Accused no.2 purchased petrol, the doctors, forensic experts, fingerprint expert and the only surviving member of the family i.e., daughter Meenal Seth, PW12. This ocular evidence is obviously in addition to the documentary and expert evidence brought by the prosecution on record. A case of circumstantial evidence is primarily dependent upon the prosecution story being established by cogent, reliable and admissible evidence. Each circumstance must be proved like any other fact which will, upon their composite reading, completely demonstrate how and by whom the offence had been committed. This Court has clearly stated the principles and the factors that would govern judicial determination of such cases. Reference can be made to the case of Sanatan Naskar and Anr. Vs. State of West Bengal [(2010) 8 SCC 249], where the Court held as follows:-

27. There cannot be any dispute to the fact that it is a case of circumstantial evidence as there was no eyewitness to the occurrence. It is a settled principle of law that an accused can be punished if he is found guilty even in cases of circumstantial evidence provided, the

WEB COPY

prosecution is able to prove beyond reasonable doubt complete chain of events and circumstances which definitely points towards the involvement and guilt of the suspect or accused, as the case may be. The accused will not be entitled to acquittal merely because there is no eyewitness in the case. It is also equally true that an accused can be convicted on the basis of circumstantial evidence subject to satisfaction of the accepted principles in that regard.

28. A three-Judge Bench of this Court in Sharad Birdhichand Sarda v. State of Maharashtra held as under: (SCC pp. 184-85, paras 152-54) 152. Before discussing the cases relied upon by the High Court we would like to cite a few decisions on the nature, character and essential proof required in a criminal case which rests on circumstantial evidence alone. The most fundamental and basic decision of this Court is HanumanGovind Nargundkar v. State of M.P. This case has been uniformly followed and applied by this Court in a large number of later decisions up-to-date, for instance, the cases of Tufail v. State of U.P. and Ram Gopal v. State of Maharashtra. It may be useful to extract what Mahajan, J. has laid down in Hanumant case: (AIR pp. 345-46, para 10) 10. It is well to remember that in cases where the evidence is of a circumstantial nature, the circumstances from which the conclusion of guilt is to be drawn should in the first instance be fully established, and all the facts so established should be consistent only with the hypothesis of the guilt of the accused. Again, the circumstances should be of a conclusive nature and tendency and they should be such as to exclude every hypothesis but the one proposed to be proved. In other words, there must be a chain of evidence so far complete as not to leave any reasonable ground for a conclusion consistent with the innocence of the accused and it must be such as to show that within all human probability the act must have been done by the accused.

153. A close analysis of this decision would show that the following conditions must be fulfilled before a case against an accused can be said to be fully established:

(1) the circumstances from which the conclusion of guilt is to be drawn should be fully established.

It may be noted here that this Court indicated that the circumstances concerned must or should and not may be established. There is not only a grammatical but a legal distinction

WEB COPY

between may be proved and must be or should be proved as was held by this Court in Shivaji Sahabrao Bobade v. State of Maharashtra where the observations were made: [SCC p. 807, para 19 : SCC (Cri) p. 1047] 19. Certainly, it is a primary principle that the accused must be and not merely may be guilty before a court can convict and the mental distance between may be and must be is long and divides vague conjectures from sure conclusions. (emphasis in original) (2) the facts so established should be consistent only with the hypothesis of the guilt of the accused, that is to say, they should not be explainable on any other hypothesis except that the accused is guilty, (3) the circumstances should be of a conclusive nature and tendency, (4) they should exclude every possible hypothesis except the one to be proved, and (5) there must be a chain of evidence so complete as not to leave any reasonable ground for the conclusion consistent with the innocence of the accused and must show that in all human probability the act must have been done by the accused.

154. These five golden principles, if we may say so, constitute the panchsheel of the proof of a case based on circumstantial evidence of the statement of the accused and find him guilty in consideration of the other evidence against him led by the prosecution, however, such statements made under this section should not be considered in isolation but in conjunction with evidence adduced by the prosecution.

WEB COPY

50. In view of the above principles, it was expected of the accused to render proper explanation for his injuries and his conduct. However, he opted to deny the same and in fact even gave false replies to the questions posed to him.

(ii) மேற்கண்ட வழிகாட்டுத் தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலித்து பார்க்கும் போது, அந்த குழந்தை காணாமல் போன தினமான 5.2.2017 அன்றே அங்கிருந்தவர்கள் எல்லோரும் அந்த குழந்தையின் பெற்றோர்களுடன் சேர்ந்து பல இடங்களில் குழந்தையை தேடிய போது, எதிரியும் சேர்ந்து குழந்தையை தேடினார் என்பதை அ.சா.3 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். அந்த விவரத்தை எதிரியும் தனது குவிமுச பிரிவு 313(1)(பி)ன் கீழான விசாரணையின் போது, அ.சா.1க்கும், போலிசுக்கும் குழந்தையை தேடும் போது

உதவியாக இருந்ததாக பதில் அளித்துள்ளார். ஆகவே அவரும் அந்த குழந்தையை 5.2.2017 அன்று இரவு 8.30 மணியளவில் அந்த இடத்தில் தேடிக் கொண்டிருந்துள்ளார் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(iii) 6.2.2017, 7.2.2017 மற்றும் 8.2.2017 ஆகிய தேதிகளில் எதிரி தலைமறைவாகிவிட்டதாக அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகிய சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் அந்த நேரங்களில் எதிரி பணிக்கு சென்று விட்டதாகவும் பணிக்கு சென்றுவிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர்களுடன் சேர்ந்து குழந்தையை தேடியதாக குவிமுச பிரிவு 313(1)(பி) பிரிவின் கீழான விசாரணையின் போது எதிரி பதில் அளித்துள்ளார். அவ்வாறு எதிரி பணிக்கு சென்றிருந்தால் அதை நிரூபிக்க வேண்டிய கடமை எதிரியையே சாரும். எதிரி அந்த தேதிகளில் அலுவலகத்திற்கு சென்றார் என்பதற்கு அவரது அலுவலக அதிகாரிகளையோ அல்லது அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களையோ எதிரி தரப்பில் விசாரித்து, எதிரி அந்த தேதிகளில் பணிக்கு சென்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு எதுவும் செய்யாமல், தான் அந்த தேதிகளில் பணிக்கு சென்றதாக வாய்மொழியாக எதிரி சொல்வது, அவர் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை என்பதை மற்றவர்கள் நம்ப வேண்டுமென்ற நோக்கத்திலும், தனக்கும், காணாமல் போன அந்த குழந்தைக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று மற்றவர்களை நம்பும்படி செய்ய வேண்டும் என்பதற்காகவும், சொல்லுகின்ற ஒரு தற்காப்புக் காரணமாக தோன்றுகிறதே தவிர அதில் உண்மையிருப்பதாக தோன்றவில்லை. ஏனெனில், 5.2.2017ம் தேதி மாலை அந்த குழந்தை காணாமல் போவதற்கு முன்பு எதிரியுடனும், அவரது நாயுடனும் விளையாடிக் கொண்டிருந்துள்ளதை அ.சா.3 பார்த்துள்ளார். எனவே சிறுமி உறாசினியை எல்லோரும்

WEB COPY

தேடும் போது அவர் அங்கு இல்லை என்றால் அவர்மீது சந்தேகம் வரும் என்பதால், அப்படி யாரும் தன்மீது சந்தேகம்படக் கூடாது என்பதாலேயே எதிரியும் எல்லோருடனும் சேர்ந்து குழந்தையை தேடுவது போல் நடித்துக் கொண்டிருந்துள்ளார் என்றும், எதிரியின் நடத்தை மீது சந்தேகம் வந்ததும், எதிரி அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார் என்பது உண்மைதான் என்பதும் இந்நீதிமன்றத்திற்கு மேற்படி சாட்சியங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது.

(iv) அடுத்ததாக, சந்தேகத்தின் அடிப்படையிலும், இரகசிய புலனாளி கொடுத்த தகவலின் அடிப்படையிலும், எதிரியை 8.2.2017 அன்று, காலை 9.00 மணிக்கு முகலிவாக்கம் ஏ.ஜி.எஸ். பார்க் அருகே, சாட்சிகள் அ.சா.7 திருமதி.சுமதி, முகலிவாக்கம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரான அ.சா.8 மோகன்தாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை கைது செய்து, அவரிடமிருந்து சா.பொ.4 பைக் மற்றும், சா.பொ.5 செல்போன் ஆகியவற்றை ஆ.சா.ஆ.3 மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் அந்த வாக்குமூலத்தில் எதிரி “தான் சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்து, தாம்பரம்=மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர் டெலிபோன்பூத் அருகே உள்ள முட்புதரில் வைத்து பெட்ரோல் ஊற்றி எரித்துவிட்டதாகவும் மேலும் மறைத்துவைத்துள்ள உறாசினியின் நகைகளையும் தனது துணிகளையும் எடுத்துத்தருவதாக சொன்னதன் அடிப்படையில், எதிரி சிறுமியின் உடலை எரித்த இடத்தை அடையாளம் காட்டுவதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதன் பேரில், அ.சா.29 ஆய்வாளர், இயங்கும் தடய அறிவியல் துறை நிபுணர் அ.சா.21 திருமதி.சோபியா ஜோசப் என்பவருக்கு தகவல் அளித்து, அவரையும் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைத்து, எதிரி

WEB COPY

அடையாளம் காட்டிய தாம்பரம்=மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூரில் உள்ள உபயோகமில்லாத எமர்ஜென்சி பூத் அருகே உள்ள முட்புதரில் எரிந்த நிலையில் இருந்த ஒரு குழந்தையின் பிரேதத்தை சாட்சிகள் அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் முன்னிலையில், போலிசார் கண்டெடுக்கிறார்கள். அங்குள்ள தடய பொருள்களான சா.பொ.1 உறாசினியின் நீலக்கலர் ஜட்டி, சா.பொ.6 டிராவல்பேக், சா.பொ.7 சிறுமி உறாசினி எரிக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பல் சிறிதளவு, சா.பொ.8 எரிந்து போன பிரேதத்தின் கருகிய தலைமுடி, சா.பொ.9 கருகிய தரைமண், சா.பொ.10, பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட தரைமண், சா.பொ.11 சுமார் 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்ரோல் வாடையுடன் கூடிய கூல்டிரிங்ஸ் பாட்டில்கள் இரண்டு ஆகியவற்றை, மேற்படி அ.சா.21 தடய அறிவியல் நிபுணரின் வழிகாட்டுதலின் அடிப்படையில், ஆய்வாளர் மேற்படி அ.சா7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், மேலும் எதிரி, சிறுமி உறாசினியை கொலை செய்த இடத்தை காட்டுவதாக சொன்னதன் பேரில், மேற்படி சாட்சிகளான அ.சா.7,அ.சா.8 மற்றும் அ.சா.21 தடய அறிவியல் நிபுணர், ஆகியோருடன் எதிரி அடையாளம் காட்டிய மதனந்தபுரம், நிகிதா பிளாட்சில் உள்ள எதிரியின் வீட்டின் படுக்கையறைக்குச் சென்று, அங்கு எதிரி சிறுமியை கொலை செய்யும் போது, சிறுமி சிறுநீர் கழித்த பெட்உஷீட் கவர் ஒருபகுதி சா.பொ.15, எதிரியின் உடைகள் சா.பொ.12 மற்றும் சா.பொ.13, எதிரியின் ஏ.டி.எம்.கார்டு, பான் கார்டு, ஐ.டி. கார்டு சா.பொ.16 முதல் சா.பொ.17 மற்றும், எதிரியின் கருப்பு கலர் பர்ஸ் சா.பொ.14, அதிலிருந்த இறந்து போன சிறுமியின் பொன் கம்மல் ஒரு ஜோடி சா.பொ2, சிறுமியின் கால் கொலுசு சா.பொ.3 ஆகியவற்றை அ.சா.21 தடய அறிவியல் நிபுனரின் வழிகாட்டுதலின் அடிப்படையில்,

WEB COPY

ஆய்வாளர் அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.7 மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்பதும் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் ஆகும்.

(v) கற்றறிந்தத எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரியிடம் பெற்றதாக சொல்லப்படும் வாக்குமூலம், அதனடிப்படையில், கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்று பொருள்கள், மற்றும் அவைகள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக அ.சா.7, அ.சா.8 ஆகியோர்களின் உதவியுடன் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.29 தயாரித்துக் கொண்டுள்ளார் என்றும், அதனால்தான் சில ஆவணங்களில் தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றும் அதை அந்த புலன்விசாரணை அதிகாரியே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதிடப்பட்டது.

(vi) ஆகவே இந்த மேற்படி சாட்சியங்களை கீழ்கண்ட இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 மற்றும் கீழ்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுத் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்துப் பார்த்தது.

WEB COPY

**Sec.27 of Indian Evidence Act.** How much of information received from accused may be proved:- Provided that, when any fact is deposed to as discovered in consequence of information received from a person accused of any offence, in the custody of a police officer, so much of such information, whether it amounts to a confession or not, as relates distinctly to the fact thereby discovered, may be proved."

**Crl. Appeal 607-608 of 2017(S.L.P.(Criminal No.3119-3120 of 2014) Mukesh & Anr. Vs. State of NCT of Delhi & ors.**

Having reproduced the chart, now we shall refer to certain authorities on how a statement of disclosure is to be appreciated. In Pulukuri Kottaya v. Emperor50, it has been observed: “[I]t is fallacious to treat the ‘fact discovered’ within the section as equivalent to the object produced; the fact discovered embraces the place from which the object is produced and the knowledge of the accused as to this, and the information given must relate distinctly to this fact. Information as to past user, or the past history, of the object produced is not related to its discovery in the setting in which it is discovered. Information supplied by a person in custody that ‘I will produce a knife concealed in the roof of my house’ does not lead to the discovery of a knife; knives were discovered many years ago. It leads to the discovery of the fact that a knife is concealed in the house of the informant to his knowledge, and if the knife is proved to have been used in the commission of the offence, the fact discovered is very relevant. But if to the statement the words be added ‘with which I stabbed A’, these words are inadmissible since they do not relate to the discovery of the knife in the house of the informant.”

WEB COPY

129. In Delhi Administration v. Bal Krishan and others, the Court, analyzing the concept, use and evidentiary value of recovered articles, expressed thus:

“7. ... Section 27 of the Evidence Act permits proof of so much of the information which is given by persons accused of an offence when in the custody of a police officer as relates distinctly to the fact thereby discovered, irrespective of whether such information amounts to a confession or not. Under Sections 25 and 26 of the Evidence Act, no confession made to a police officer whether in custody or not can be proved as against the accused. But Section 27 is by way of a proviso to these sections and a statement, even by way of confession, which distinctly relates to the fact discovered is admissible as evidence against the accused in the circumstances stated in Section 27….”

130. In Mohd. Inayatullah v. State of Maharashtra52, dealing with the scope and object of Section 27 of the Evidence Act, the Court held:

“12. The expression “provided that” together with the phrase “whether it amounts to a confession or not” show that the section is in the nature of an exception to the preceding provisions particularly Sections 25 and 26. It is not necessary in this case to consider if this section qualifies, to any extent, Section 24, also. It will be seen that the first condition necessary for bringing this section into operation is the discovery of a fact, albeit a relevant fact, in consequence of the information received from a person accused of an offence. The second is that the discovery of such fact must be deposed to. The third is that at the time of the receipt of the information the accused must be in police custody. The last but the most important condition is that only “so much of the information” as relates distinctly to the fact thereby discovered is admissible. The rest of the information has to be excluded. The word “distinctly” means “directly”, “indubitably”, “strictly”, “unmistakably”. The word has been advisedly used to limit and define the scope of the provable information. The phrase “distinctly relates to the fact thereby discovered” is the linchpin of the provision. This phrase refers to that part of the information supplied by the accused which is the direct and immediate cause of the discovery. The reason behind this partial lifting of the ban against confessions and statements made to the police, is that if a fact is actually discovered in consequence of information given by the accused, it affords some guarantee of truth of that part, and that part only, of the information which was the clear, immediate and proximate cause of the discovery. No such guarantee or assurance attaches to the rest of the statement which may be indirectly or remotely related to the fact discovered.

13. At one time it was held that the expression “fact discovered” in the section is restricted to a physical or material fact which can be perceived by the senses, and that it does not include a mental fact (see Sukhan v. Crown53; Rex v. Ganee54). Now it is fairly settled that the expression “fact discovered” includes not only the physical object produced, but also the place from which it is produced and the knowledge of the accused as to this (see Palukuri Kotayya v. Emperor; Udai Bhan v. State of Uttar Pradesh55).

WEB COPY

131. Analysing the earlier decisions, in Anter Singh v. State of Rajasthan, the Court summed up the various requirements of Section 27 as follows:

“(1) The fact of which evidence is sought to be given must be relevant to the issue. It must be

borne in mind that the provision has nothing to
do with the question of relevancy. The relevancy of the fact discovered must be established according to the prescriptions relating to relevancy of other evidence connecting it with the crime in order to make the fact discovered admissible.

(2) The fact must have been discovered.

(3) The discovery must have been in consequence of some information received from the accused and not by the accused’s own act.

(4) The person giving the information must be accused of any offence.

(5) He must be in the custody of a police officer.

(6) The discovery of a fact in consequence of information received from an accused in custody must be deposed to.

(7) Thereupon only that portion of the information which relates distinctly or strictly to the fact discovered can be proved. The rest is inadmissible.”

WEB COPY

132. In State (NCT of Delhi) v. Navjot Sandhu alias Afsan Guru57, the Court referred to the initial prevalence of divergent views and approaches and the same being put to rest in Pulukuri Kottaya case (supra) which has been described as locus classicus, relying on the said authority, observed:

“120. To a great extent the legal position has got crystallized with the rendering of this decision. The authority of the Privy Council’s decision has not been questioned in any of the decisions of the
highest court either in the pre-or post-independence era. Right from the 1950s, till the advent of the new century and till date, the passages in this famous decision are being approvingly quoted and reiterated by the Judges of this Apex Court. Yet, there remain certain grey areas as demonstrated by the arguments advanced on behalf of the State.”

133. Explaining the said facet, the Court proceeded to state thus:

“121. The first requisite condition for utilising Section 27 in support of the prosecution case is that the investigating police officer should depose that he discovered a fact in consequence

of the information received from an accused person in police custody. Thus, there must be a discovery of fact not within the knowledge of police officer as a consequence of information received. Of course, it is axiomatic that the information or disclosure should be free from any element of compulsion. The next component of Section 27 relates to the nature and extent of information that can be proved. It is only so much of the information as relates distinctly to the fact thereby discovered that can be proved and nothing more. It is explicitly clarified in the section that there is no taboo against receiving such information in evidence merely because it amounts to a confession. At the same time, the last clause makes it clear that it is not the confessional part that is admissible but it is only such information or part of it, which relates distinctly to the fact discovered by means of the information furnished. Thus, the information conveyed in the statement to the police ought to be dissected if necessary so as to admit only the information of the nature mentioned in the section. The rationale behind this provision is that, if a fact is actually discovered in consequence of the information supplied, it affords some guarantee that the information is true and can therefore be safely allowed to be admitted in evidence as an incriminating factor against the accused. As pointed out by the Privy Council in Kottaya case:

106 "clearly the extent of the information admissible must depend on the exact nature of the fact discovered" and the information must distinctly relate to that fact. Elucidating the scope of this section, the Privy Council speaking through Sir John Beaumont

said:

"Normally the section is brought intooperation when a person in police custody produces from some place of concealment some object, such as a dead body, a weapon, or ornaments, said to be connected with the crime of which the informant is accused.""

134. Expatriating the idea further, the Court proceeded to lay down:

"121. …. We have emphasised the word "normally" because the illustrations given by thelearned Judge are not exhaustive. The next point to be noted is that the Privy Council rejected the argument of the counsel appearing for the Crown that the fact discovered is the physical object produced and that any and every information which relates distinctly to that object can be proved. Upon this view, the information given by a person that the weapon

produced is the one used by him in the commission of the murder will be admissible in its entirety. Such contention of the Crown's counsel was emphatically rejected
with the following words:

"If this be the effect of Section 27, little substance would remain in the ban imposed by the two preceding sections on confessions made to the police, or by persons in police custody. That ban was presumably inspired by the fear of the legislature that a person under police influence might be induced to confess by the exercise of undue pressure. But if all that is required to lift the ban be the inclusion in the confession of information relating to an object subsequently produced, it seems reasonable to suppose that the persuasive powers of the police will prove equal to the occasion, and that in practice the ban will lose its effect."

Then, Their Lordships proceeded to give a lucid exposition of the expression "fact discovered" in the following passage, which is quoted time and again by this Court: "In Their Lordships' view it is fallacious to treat the 'fact discovered' within the section as equivalent to the object produced; the fact discovered embraces the place from which the object is produced and the knowledge of the accused as to this, and the information given must relate distinctly to this fact. Information as to past user, or the past history, of the object produced is not related to its discovery in the setting in which it is discovered. Information supplied by a person in custody that 'I will produce a knife concealed in the roof of my house' does not lead to the discovery of a knife; knives were discovered many years ago. It leads to the discovery of the fact that a knife is concealed in the house of the informant to his knowledge, and if the knife is proved to have been used in the commission of the offence, the fact discovered is very relevant. But if to the statement the words be added 'with which I stabbed A' these words are inadmissible since they do not relate to the discovery of the knife in the house of the informant." (emphasis supplied)

122. The approach of the Privy Council in the light of the above exposition of law can best be understood by referring to the statement made by one of the accused to the police officer. It reads thus:

"… About 14 days ago, I, Kottaya and people of my party lay in wait for Sivayya and others at about sunset time at the corner of Pulipad tank. We, all beat Beddupati China Sivayya and Subayya, to death. The remaining persons, Pullayya, Kottaya and Narayana ran away.

WEB COPY

Dondapati Ramayya who was in our party received blows on his hands. He had a spear in his hands. He gave it to me then. I hid it and my stick in the rick of Venkatanarasu in the village. I will show if you come. We did all this at the instigation of Pulukuri Kottaya."

The Privy Council held that:

"14. The whole of that statement except the passage 'I hid it (a spear) and my stick in the rick of Venkatanarasu in the village. I will show if you come' is inadmissible." (emphasis supplied) There is another important observation at para 11 which needs to be noticed. The Privy Council explained the probative force of the information made admissible under Section 27 in the following words:

"Except in cases in which the possession, or concealment, of an object constitutes the 109 gist of the offence charged, it can seldom happen that information relating to the discovery of a fact forms the foundation of the prosecution case. It is only one link in the chain of proof, and the other links must be forged in manner allowed by law."

Section 27 has prescribed two limitations for determining how much of the information received from the accused can be proved against him:

WEB COPY

(i) The information must be such as the accused has caused discovery of the fact, i.e. the fact must be the consequence, and the information the cause of its discovery; (ii) The information must 'relate distinctly' to the fact discovered. Both the conditions must be satisfied. Various requirements of Section 27 of the Evidence Act are succinctly summed up in Anter Singh v. State of Rajasthan (2004) 10 SCC 657:-

"16. The various requirements of the section can be summed up as follows:

(1) The fact of which evidence is sought to be given must be relevant to the issue. It must be borne in mind that the provision has relevancy. The relevancy of the fact discovered must be established according to the prescriptions relating to relevancy of other evidence connecting it with the crime in order to make the fact discovered admissible.

(2) The fact must have been discovered.

(3) The discovery must have been in consequence of some information received from the accused and not by the accused's own act.

(4) The person giving the information must be accused of any offence.

(5) He must be in the custody of a police officer.

(6) The discovery of a fact in consequence of information received from an accused in custody must be deposed to.

(7) Thereupon only that portion of the information which relates distinctly or strictly to the fact discovered can be proved. The rest is inadmissible."

76. Appending a note of caution to prevent the misuse of the provision of Section 27 of the Evidence Act, this Court in Geejaganda Somaiah v.

State of Karnataka (2007) 9 SCC 315, observed that the courts need to be vigilant about application of Section 27 of the Evidence Act. Relevant extract from the judgment is as under:-

"22. As the section is alleged to be frequently misused by the police, the courts are required to be vigilant about its application. The court must ensure the credibility of evidence by police because this provision is vulnerable to abuse. It does not, however, mean that any statement made in terms of the aforesaid section should be seen with suspicion and it cannot be discarded only on the ground that it was made to a police officer during investigation. The court has to be cautious that no effort is made by the prosecution to make out a statement of the accused with a simple case of recovery as a case of discovery of fact in order to attract the provisions of Section 27 of the Evidence Act."

WEB COPY

77. Even though, the arrest and recovery under Section 27 of the Evidence Act is often sought to be misused, the courts cannot be expected to completely ignore how crucial are the recoveries made under Section 27 in an investigation. The legislature while incorporating Section 27, as an exception to Sections 24, 25 and 26 of the Evidence Act, was convinced of the quintessential purpose Section 27 would serve in an investigation process. The recovery made under Section 27 of the Evidence Act not only acts as the foundation stone for proceeding with an investigation, but also completes the chain of circumstances. Once the recovery is proved by the prosecution, burden of proof on the defence to rebut the same is very strict, which cannot be discharged merely by pointing at procedural irregularities in making the recoveries, especially when the recovery is corroborated by direct as well as circumstantial evidence, especially when the investigating officer assures that failure in examining independent witness while making the recoveries was not a deliberate or mala fide, rather it was on account of exceptional circumstances attending the investigation

process.

(vii) அவ்வாறு இவ்வழக்கில் உள்ள மேற்படி சாட்சியங்களை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 மற்றும் மேற்கண்ட வழிகாட்டுத் தீர்ப்புகளின் அடிப்படையில் கவனமாக பரிசீலித்துப் பார்க்கும் போது, பொது மக்களை தவிர்த்து, அரசு ஊழியர்களை சாட்சியாக இருக்கக்கேட்டு, அவர்கள் ஒப்புக்கொண்டு ஏ. ஜி.எஸ். பார்க்கிற்கு வந்ததை அரசு தரப்பில் மிகப்பெரிய குறையாக கருத முடியாது. ஏனெனில், காவல்துறை அதிகாரியான அ.சா.29க்கு காணாமல் போன குழந்தையை கண்டுபிடிக்க வேண்டிய மிகப்பெரிய சட்டக்கடமை இருக்கும் போது, அந்த பணியில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு செயல்படும் போது தனக்கு கிடைக்கக்கூடிய ரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்குரிய சிலரை, உதாரணமாக அந்த குடியிருப்பிற்கு செய்தி தாள், பால் பாக்கெட் போடக்கூடிய நபர்கள், காய்கறி விற்பவர்கள், சலவை தொழிலாளி, காவலாளி போன்ற பலரை சந்தேக நபர்களாக அவர் கண்காணித்துக் கொண்டிருந்திருப்பார், அவர்களில் எதிரியின் நடவடிக்கையையும் அவர் கண்காணித்துக் கொண்டிருந்திருப்பார்.

(vii) இங்கு மிகவும் கவனிக்கத்தக்க சங்கதி என்னவெனில், **05.02.2017** அன்று எதிரியின் அத்தை மகளுக்கு பல்லாவரத்தில் திருமணம் நடந்தது என்பதும், அந்த திருமணத்திற்கு எதிரியின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர் ஏற்கனவே சென்றுவிட்டபடியால் எதிரி தனது வீட்டில் தனியாக அன்று மாலை **6** மணியளவில் இருந்தார் என்பதும், அதே நேரத்தில் சிறுமி **உறா** சினியை அவரது பெற்றோர்கள் தரை தளத்தில் விளையாட விட்டுவிட்டு பாய்கடை என்ற இடத்திற்கு காய்கறி வாங்க போய்விட்டு இரவு ஏழு மணியளவில் திரும்பி வந்த போது **உறா** சினியை காணவில்லை என்று தேடிப்பார்த்தபோது எதிரியின் வீடு பூட்டியிருந்தது என்பதேயாகும்,

(viii) அன்று மாலை **6.00** மணியளவில் எதிரியின் பெற்றோர்கள் அல்லது சகோதரர் அவரது வீட்டில்

WEB COPY

இருந்திருந்தால் இப்படி ஒரு **துயர** சம்பவம் நடந்திருக்க வாய்ப்பிருந்திருக்காது, அதேபோல் மாலை **7.00** மணிக்கு சிறுமியின் பெற்றோர்கள் திரும்பி வந்து சிறுமியை தேடும்போது எதிரியின் வீடு பூட்டப்படாமல் திறந்த நிலையில் இருந்திந்தாலோ அல்லது எதிரி அந்த சமயத்தில் அங்கு இருந்திருந்தாலோ எதிரியின் மீது சந்தேக நிழல் படிந்திருக்காது. ஆனால் எதிரி அன்று இரவு போலிசார் வந்து தேடும்போது அவர்களோடும் அங்கிருந்தவர்களோடும் சேர்ந்து குழந்தையை தேடியதாக சொல்லுகிறாரே தவிர மாலை **7.00** மணியளவில் அவர் எங்கிருந்தார் என்பததையும் அதே போல் அ.சா.ஆ.**22** ல் பதிவாகியிருக்கின்ற நேரமான **05.02.2017** இரவு **09.20** மணிக்கு பெட்ரோல் வாங்கிய பிறகு அவர் எங்கு சென்றார் என்பதையும் எதிரி இந்த நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை. மேலும் குவிமுச **313 (1)** (ஆ) கீழ் தாக்கல் செய்த தனது எழுத்து மூலமான விளக்க உரையில் கூட **07.02.2017** அன்று போலிசார் தன்னை வீட்டிலிருந்து அழைத்து சென்று அடித்து துன்புறுத்தி வாக்குமூலம் பெற்று சான்று பொருட்களை உருவாக்கினார்கள் என்று தான் சொல்லுகிறாரே தவிர மேற்கண்ட **05.02.2017** இரவு **7.00** மணியளவிலும், **9.20** மணிக்கு பிறகும் அவர் எங்கே இருந்தார் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை.

WEB COPY

(ix) எனவே, அவர் சந்தேகத்திற்குரிய நபராக இருந்திருக்கிறார் என்ப தோடு, அவரே திட்டமிட்டு மற்றவர்களோடு சேர்ந்து குழந்தையை தேடுவது போலவும், காவல் துறைக்கு தகவல் கொடுப்பது போலவும் செயல்பட்டுக்கொண்டிருந்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

(x) மேலும் எதிரி தலைமறைவாகி அவர் மீதிருந்த சந்தேகத்தை உறுதிபடுத்தியிருக்கும் நிலையில், அவா் எந்த இடத்தில் இருந்து இயங்கிக் கொண்டிருக்கிறாா் என்பதை கூட கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு காவல் ஆய்வாளர் மிகச் சாதாரணமான மனிதா் அல்ல. அவருடைய கண்காணிப்பும் எதிரியின் செயல்கள் எவ்வாறு இருந்தது என்பதும், அவருக்கு மட்டுமே தெரியும். எதிரியுடைய நடமாட்டத்தை கண்காணித்துக் கொண்டிருக்கும் போது, அவா் ஏ.ஜி.எஸ். பாா்க் அருகில் இருக்கிறாா் என்பது தெரிந்ததால், அவரை மடக்கிப்பிடித்து விசாரித்தால் உண்மை தெரியும் என்ற நம்பிக்கையில், அ.சா.7, அ.சா.8 ஆகியோருக்கு 8.2.2017 அன்று காலை 8.15 மணிக்கு தகவல் சொல்லி, அவா்களும்

அங்கு வர தயார் நிலையில் இருந்திருக்கிறார்கள் என்றும், அதனால்தான் எதிரியை ஆய்வாளர் காலை 9.00 மணிக்கு பிடித்த 5 நிமிடத்தில் அவர்கள் அங்கு வந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. எதிரி தரப்பில் கூறுவதை போல எதிரியை பிடித்து வைத்துக்கொண்டு அதன் பிறகு அவர்களுக்கு தகவல் சொல்லி அவர்கள் அங்கு வரவில்லை. 6.2.2017, 7.2.2017 ஆகிய தேதிகளில் எதிரியின் நடவடிக்கை முழுவதும் காவல்துறையின் இரகசிய கண்காணிப்பில் இருந்தது என்பது எதிரிக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் தன் மீது போலிசார் சந்தேகப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தில் 5.2.2017, 6.2.2017 ஆகிய தேதிகளில், செயல்பட்டிருக்கிறார் என்பதும் அதே போல் போலிசாரும் அவர் நம்புவது போலவே அவரை கண்காணித்து கொண்டிருந்துள்ளார்கள் என்பதும், அந்த சமயத்தில் அவர் தலைமறைவாகியிருக்கிறார் என்பதும் மேற்படி காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

(xi) மேலும் பிரேதத்தை கைப்பற்றிய இடத்தில் கிடைத்த தடய பொருள்களான சா.பொ.1 உறாசினியின் நீலக்கலர் ஜட்டி, சா.பொ.6 டிராவல்பேக், சா.பொ.7 சிறுமி உறாசினி எரிக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பல் சிறிதளவு, சா.பொ.8 எரிந்து போன பிரேதத்தின் கருகிய தலைமுடி, சா.பொ.9 கருகிய தரைமண், சா.பொ.10, பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட தரைமண், சா.பொ.11 சுமார் 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்ரோல் வாடையுடன் கூடிய கூல்டிரிங்ஸ் பாட்டில்கள் இரண்டு ஆகியவற்றை, மேற்படி அ.சா.21 தடய அறிவியல் நிபுணரின் வழிகாட்டுதலின் அடிப்படையில், ஆய்வாளர் மேற்படி அ.சா7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்பது மேற்படி சாட்சிகளின்

வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் உறுதியூட்டக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

(xii) அதேபோல் எதிரியின் வீட்டின் படுக்கையறைக்குச் சென்று, அங்கு சிறுமி உறாசினி சிறுநீர் கழித்த பெட்ஷீட் கவர் ஒருபகுதி சா.பொ.15, எதிரியின் உடைகள் சா.பொ.12, எதிரியின் ஏ.டி.எம.கார்டு சா.பொ.13, பான் கார்டு சா.பொ.16, ஐ.டி. கார்டு சா.பொ.17 மற்றும், எதிரியின் கருப்பு கலர் பர்ஸ் சா.பொ.14, அதிலிருந்த இறந்து போன சிறுமியின் பொன் கம்மல் ஒரு ஜோடி சா.பொ2, சிறுமியின் கால் கொலுசு சா.பொ.3 ஆகியவற்றை மேற்படி அ.சா.21 தடய அறிவியல் நிபுணரின் வழிகாட்டுதலின் அடிப்படையில், ஆய்வாளர் அவர்கள் மேற்படி அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்பது மேற்படி சாட்சிகளின் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் உறுதியூட்டக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

(xiii) எனவே பொதுமக்களை சாட்சியாக முன்னிறுத்தவில்லை என்ற எதிரியின் கூற்றும், 7.02.2017 அன்றே தன்னை அடித்து துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய கையெழுத்தை பெற்று மேற்படி சான்றுபொருட்களை தன்னுடைய வீட்டிலிருந்து எடுத்து சென்று சாட்சியமாக உருவாக்கினார்கள் என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்று கொள்ளக்கூடியதாக அமையவில்லை. அவற்றில் உண்மை இருந்திருந்தால் 09.02.2017 அன்று நீதித்துறை நடுவர் முன்பு எதிரியை முன்னிலை படுத்தியபோது தன்னை போலிசார் அடித்து துன்புறுத்தி கையெழுத்து பெற்ற விவரத்தையும் தன்னுடைய வீட்டிலிருந்து சான்று பொருட்களை 7.2.2017 அன்று எடுத்துச் சென்ற விவரத்தையும் சொல்லியிருப்பார். ஆனால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை.

WEB COPY

(xiv) மேற்கண்ட சாட்சியத்தை கீழ்கண்ட வழிகாட்டு தீர்ப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்துப்பார்த்தது, இந்த வழிகாட்டு தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் குற்றவாளி தருகின்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எரிக்கப்பட்ட பிணம் மற்றும் சில சான்று பொருட்களை கைப்பற்றுவது குற்ற செயலை உறுதி படுத்துவதற்கு போதுமான சங்கதி என்று கூறப்பட்டுள்ளது.

**(2017) 4 MLJ (Crl) 23 (SC) Sonu @ Amar vs. State of Haryana**

The arrest of A1 to A3 from Tibetan Market. Delhi at 11.45 pm on 20.01.2006 led to several disclosure statements made by the accused pursuant to which relevant material was recovered. The details of recoveries made from each of the accused will be discussed later. The dead body of the deceased Ramesh Jain was also recovered pursuant to a disclosure statement made by A2 to A4. The CDRs that were obtained from the Nodal officers of the telephone companies which were exhibited in the Court without objection clearly prove the complicity of all the accused. A number of calls that were made between the accused furing the period 25.12.2005 to 20.01.2006 was made by the Courts below to hold the accused guilty of committing the offences. We do not see any reason to differ from the conclusions of the Courts below on the basis of the evidence available on record. Neither do we see any perversity in the reasons and the conclusions of the Courts below on the basis of the evidence available on record. Neither do we see any perversity in the reasons and the conclusion of the Courts below. The Jurisdiction of this Court in criminal appeals filed against concurrent findings is circumscribed by principles summarised by this court in Dalbir Kaur Vs. State of Punjab (1976) 4 SCC 158 at Para 8 as follows:

"8. Thus the principles governing interference by this court in a criminal appeal by special leave may be summarised as follows:

"(1) that this Court would not interfere with the concurrent finding of fact based on pure appreciation of evidence even if it were to take a different view on the evidence;

(2) that the Court will not normally enter into a re-appraisement or review of the evidence, unless the assessment of the High Court is vitiated by an error of law or procedure or is based on error of law or procedure or is based on error of record, misreading of evidence or is inconsistent with the evidence, for instance, where the ocular

WEB COPY

evidence is totally inconsistent with the medical evidence and so on;

(3) that the court would not enter into credibility of the evidence with a view to substitute its own opinion for that of the High Court;

(4) that the Court would interfere where the High Court has arrived at a finding of fact in disregard of a judicial process, principles of natural justice or a fair hearing or has acted in violation of a mandatory provision of law or procedure resulting in serious prejudice or injustice to the accused;

(5) this Court might also interfere where on the proved facts wording inferences of law have been drawn or where the conclusions of the High Court are manifestly perverse and based on no evidence."

15. Admittedly, there is no direct evidence of kidnapping or the murder of Ramesh Jain. This is a case of circumstantial evidence. In a catena of cases, this court has liad down certain principles to be followed in cases of circumstantial evidence. They are as under

(1) The circumstances from which an inference of guilt is sought to be proved must be cogently or firmly established.

2. The circumstances should be of a definite tendency unerringly pointing towards the guilt of the accused.

3.The circumstances taken cumulatively must form a chain so complete that there is no escape from the conclusion that within all human probability, the crime was committed by the accused and non else.

4. The circumstantial evidence in order to sustain conviction must be complete and incapable of explanation of any other hypothesis than that of the guilt of the accused and such evidence should not only be consistent with the guilt of the accused but should be inconsistent with his innocence. (See Shanti Devi vs. State of Rajasthan (2012) 12 SCC 158 at p.10; LNIND 2012 SC 655); (See also; Hanumant vs. State of Madhya Pradesh AIR 1952 SC 343; (1852) SCR 1091 (P.1097): LNIND 1952 SC 48: (1952) 2 MLJ 631 Sharad Birdhichand Sarda vs. State of Maharashtra AIR 1984 SC 1622: (1984) 4 SCC 116 at p.153: LNIND 1984 SC 450).

16. Applying the above prinicples to the facts of this case, we find that the following circumstances would lead to the conclusion of guilt against the accused.

WEB COPY

A. The deceased was missing from 23.12.2015 and his dead body was dug out from the premises of a temple on 23.01.2006.

B. Demand of ransom for the relase of the deceased is proved by the oral testimonies of PW1 and PW3.

C.Disclosure statements made by the accused pursuant to which there was recovery of several articles belonging to the deceased including the SIM Card of his mobile number, wallet containing his personal belongings, etc.

E. The CDRs of the mobile which clearly show the interaction of the accused during the period form 25.12.2005 to 20.01.2006 as well as the calls made to PW1 including the calls made from the mobile phone of the deceased.

F.The silver ring, key ring of the motor cycle and a piece of cloth worn by the deceased on 25.12.2005 which were sent to PW1 by the accused.

WEB COPY

(xv) மேலே விரிவாக விவாதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், அங்கே கூறப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையிலும், நமது உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள மேற்கண்ட சாராம்சங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, மேற்படி சிறுமியின் பிரேதம் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவனங்கள் கைப்பற்றிய விதம், நேரம், தேதி, இடம் ஆகியவை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xvi) ஆகையால், எதிரியை 8.2.2017ம் தேதி கைது செய்து விசாரிக்கும் போதுதான் குழந்தை உறாசினியின் உடலை எரித்த இடத்தை போலிசாருக்கு எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லி அடையாளம் காட்டுகிறார் என்பதும், அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் முன்னிலையில் அவர் உண்மையை சொன்ன பிறகுதான் அந்த இடத்திற்கு சென்று அந்த குழந்தையின் உடலை போலிசார் கண்டுபிடிக்கிறார்கள் என்பதும், அ.சா.21 இயங்கும் தடயஅறிவியல்துறை நிபுணர், அ.சா.7 கிராம நிர்வாக அதிகாரி, அவரது உதவியாளரான அ.சா.8 ஆகியோர்களின் சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் உறுதி

செய்யப்பட்டுள்ளது. எதிரியை தவிர வேறு யாரும் சொல்லி போலிசார் அங்கு போனதாக எந்த ஒரு சாட்சியமும் எதிரி தரப்பில் முன்னிலைபடுத்தவில்லை. ஆகவே அந்த இடத்தில் தான் குழந்தையின் உடல் உள்ளது என்பது எதிரியை தவிர வேறு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. எதிரிக்கு மட்டுமே தெரிந்த அந்த ஒரு தகவல், எதிரியால் மட்டுமே புலனாய்வு அதிகாரியிடம் சொல்லப்பட்டு, அந்த இடத்தில் காவல்துறையினர் சென்ற பிறகுதான் அந்த உடலை காவல்துறையினர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கண்டுபிடித்திருக்கின்றனர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேற்படி சான்று பொருட்களான சா.பொ.1 உறாசினியின் நீலக்கலர் ஜட்டி, சா.பொ.6 டிராவல்பேக், சா.பொ.7 சிறுமி உறாசினி எரிக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பல் சிறிதளவு, சா.பொ.8 எரிந்து போன பிரேதத்தின் கருகிய தலைமுடி, சா.பொ.9 கருகிய தரைமண், சா.பொ.10, பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட தரைமண், சா.பொ.11 சுமார் 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்ரோல் வாடையுடன் கூடிய கூல்டிரிங்ஸ் பாட்டில்கள் இரண்டு மேலும் எதிரியின் வீட்டிலிருந்து சிறுமி உறாசினி சிறுநீர் கழித்த பெட்ஷீட் கவர் ஒருபகுதி சா.பொ.15, எதிரியின் உடைகள் சா.பொ.12, எதிரியின் ஏ.டி.எம்.கார்டு சா.பொ.13, பான் கார்டு சா.பொ.16, ஐ.டி. கார்டு சா.பொ.17 மற்றும், எதிரியின் கருப்பு கலர் பர்ஸ் சா.பொ.14, அதிலிருந்த இறந்து போன சிறுமியின் பொன் கம்மல் ஒரு ஜோடி சா.பொ2, சிறுமியின் கால் கொலுசு சா.பொ.3 ஆகியவற்றை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே போலிசார் கைப்பற்றியுள்ளனர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(xvii) மேலும் **18.02.2017** அன்று எதிரி நீதிமன்ற காவலில் இருந்தபோது நீதிமன்ற உத்தரவின் பேரில் அ.சா.**29** புலனாய்வு அதிகாரி தன்னுடைய பாதுகாப்பில் எடுத்த சாட்சிகள் **அ.சா.9** செல்வகுமார் கிராம நிர்வாக அலுவலர், மாங்காடு மற்றும் அ.சா.**10** பாஸ்கரன் கிராம உதவியாளர் ஆகியோர்

WEB COPY

முன்னிலையில் விசாரித்தபோது எதிரி எந்தவித துன்புறத்தலுமின்றி தானாகவே முன்வந்து மீண்டும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதியின் வாயிலாக எதிரியின் வீட்டின் மொட்டை மாடியில் ஒளித்து வைத்திருந்த சா.பொ.19 கருப்பு நிற எல்மெட்டை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சாஆ,11 கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள் என்பது அரசு தரப்பு வழக்கு. அந்த எல்மட் தன்னுடையது அல்ல என்பது எதிரியின் வாதம் ஆகும். இவ்வழக்கில் மேற்படி அசா9 மற்றும் அசா10 ஆகியோர்களின் வாய்மொழி சாட்சியம் மேற்படி சாபொ19 ஐ அன்றைய தினம் ஆய்வாளர் கைப்பற்றிய சங்கதியை உறுதிபடுத்துவதாக அமைந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து காவல்துறை பாதுகாப்பிற்கு நீதிமன்ற உத்தரவின்பேரில் வந்த பிறகு அந்த எதிரியை காவல் ஆய்வாளர் அடித்து துன்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை அவர் ஒரு வேலை அப்படி செய்திருந்ததால் அது அப்பொழுதே நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்து நீதிமன்ற கண்டனத்திற்கு புலன் விசாரனை அதிகாரி ஆளாகியிருப்பார். மேலும் இருசக்கர வாகனம் ஓட்டும் அனைவரும் தலைகவசம் அணிந்து ஓட்ட வேண்டுமென்பது மோட்டார் வாகன சட்டம் என்பதும், நமது சென்னை உயர் நீதிமன்றமும் தலைகவசம் அணியாமல் ஓட்டுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை வேண்டுமென்று காவல்துறையினரை வலியுறுத்தி வந்த காரணத்தினால், தற்போது இருசக்கர வாகன ஓட்டிகள் பெரும்பாலும் தலைகவசம் அணிந்தே ஓட்டுகின்றனர், அதைப்போல எதிரியிடம் புதிய இருசக்கர வாகனம் வாங்குவதற்கு முன்பே பழைய இருசக்கர வாகனம் அவரிடம் இருந்திருக்கிறது என்பது அது அடிக்கடி பழுதான காரணத்தினால் தான் இந்த வழக்கின் சான்றுபொருளான புதிதாக வாங்கி இருக்கிறார் என்பதும் அந்த புது வாகனம் பதிவுக்காக இருந்த சமயங்களில் இந்த சா.பொ.19 தலைகவசத்தை அணிந்து எதிரி வாகனத்தை ஓட்டியிருக்கிறார் என்பதால் தான் அந்த தலைக்கவசத்தை அவருடைய வீட்டின் மொட்டை மாடியில் இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்பு மறைத்து வைத்திருக்கிறார் என்பதும் அதை பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து கொடுத்திருக்கிறார் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது, இந்த வழக்கிலிருந்த தப்பிப்பதற்காகவே அந்த தலைகவசம் தன்னுடையது அல்ல என்று எதிரி பொய் சொல்லுவதாக

WEB COPY

இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, சா.பொ.19 கருப்பு நிற ஹெறல்மெட்டை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் போலிசார் கைப்பற்றினர் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபனம் செய்யப்பட்டுள்ளது.

(xviii) அடுத்ததாக, எதிரி அந்த சிறுமியின் உடலை 5.2.2017ம் தேதி இரவு 10.00 மணிக்கு பெட்ரோல் ஊற்றி எரித்தார் என்பது அரசு தரப்பு வழக்கு. இறந்து போன சிறுமியின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.16 தனது சாட்சியத்தில், பிரேத பரிசோதனை முடித்து இறந்து போன பிரேதத்தின் உடல் உறுப்புகளை இராசாயண பகுப்பாய்விற்கு அனுப்பியதாக கூறியுள்ளார். மேற்படி உடல் உறுப்புகளை இராசாயண பகுப்பாய்வு செய்த, அ.சா.23 சென்னை தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவு அலுவலர் தனது சாட்சியத்தில் 10.2.2017ம் தேதி அன்று திருமதி.கார்த்திகா தேவி, சட்டம் சார்ந்த மருத்துவர் கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூாி சென்னை அவர்களிடம் பெறப்பட்ட, வெப்பத்தால் சுருங்கிய நிலையில் முடி கற்றையும் (பகுதி எரிந்த நிலையில்) மற்றும் துணி துண்டும் (பகுதி எரிந்த நிலையில்) இருந்தது, என்றும் இதை ஆய்வு செய்ததில் பெட்ரோல் இருப்பது கண்டறியப்பட்டது என்றும், மேலும் அவரிடமிருந்து பெறப்பட்ட தோல் என்று குறிப்பிடபட்டிருந்த ஒரு திசு துண்டு வெள்ளை நிற படிகங்களுடன் வைக்கப்பட்டிருந்ததை ஆய்வு செய்ததில் அதிலும் பெட்ரோல் இருப்பது கண்டறியப்பட்டது என்றும் இதற்குரிய ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.16 வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தன்னுடைய அறிக்கையின்படி இரண்டு இன சொத்துக்களிலும் பெட்ரோல் இருந்ததை கண்டுபிடித்ததாகவும் பெட்ரோல் என்பது எளிதில் தீ பிடிக்ககூடிய பொருள் என்றும் கூறியுள்ளார். மேற்படி அ.சா.16 மருத்துவர் மற்றும் அ.சா.23 தடயஅறிவியல்துறை வேதியல் பிரிவு அலுவலரின் சாட்சியத்திலிருந்து இறந்து போன உறாசினியின் உடல் மீது பெட்ரோல் ஊற்றி

WEB COPY

எரிக்கப்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xix) அந்த சிறுமியின் உடலை எரிக்க பயன்படுத்திய பெட்ரோல் எதிரியால், சம்பவத்தன்று இரவு வாங்கப்பட்டது என்பது அரசு தரப்பு வழக்கு. அதை உறுதிபடுத்தும் விதத்தில் அரசு தரப்பில் அ.சா.18 திரு.சந்தோஉஷ்குமார், மாதா நகர், பெட்ரோல்பங்கில் பெட்ரோல் போடும் ஊழியர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தின் மூலம் எதிரி 5.2.2017ம் தேதி இரவு 9.20 மணிக்கு மாதாநகர் பெட்ரோல்பங்கில் ரூ.333/=க்கு பெட்ரோல் இரண்டு பாட்டில்களில் வாங்கிக்கொண்டு, அதற்கான பணத்தை அவரது ஏ.டி.எம். கார்டு மூலம் ஸ்வைப் செய்துள்ளார் என்பது, அ.சா.ஆ.22 ரசீது மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் எதிரியின் வங்கி கணக்கு உள்ள வங்கியின் மேலாளர் அ.சா.13 வழங்கிய 5.2.2017 தேதியிட்ட எதிரியின் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.14 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

(xx) கற்றிறந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அ.சா.18 சந்தோஉஷ்குமார் என்பவர் பெட்ரோல்பங்க் ஊழியர் என்பதற்கு எந்தவித அடையாள அட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றும், இது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக கூறியிருந்தாலும், எதிரி குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழான விசாரணையின் போது, தான் மேற்படி நபரிடம் பெட்ரோல் வாங்கியது உண்மை என்று ஒத்துக்கொண்டுள்ளார். ஆனால் எதிரி தனது குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழான விசாரணையின் போது, அரசு தரப்பில் அந்த தேதியில், அந்த நேரத்தில் அ.சா.18 இடம் பெட்ரோல் வாங்கியதாக ஒப்புக்கொண்டாலும், அதை தனது வணடிக்குத்தான் போட்டதாகவும் பாட்டில்களில் வாங்கவில்லை என்றும் அப்படியே பாட்டில்களில் வாங்கியதாக எடுத்துக்கொண்டாலும் கூட 4 1/2 லிட்டர் தான் வாங்க முடியும்

என்றும், அந்த 4 1/2 லிட்டர் பெட்ரோல் விலை ரூ.333/= இருக்காது என்றும் ஆகவே போலிசார் தன் மீது பொய்வழக்கு போட்டுள்ளதாக கூறியுள்ளார். அன்றைக்கு அவருடைய வண்டியில் எவ்வளவு பெட்ரோல் இருந்தது என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை. மேலும் அரசு தரப்பில் பிணத்தை எரித்த இடத்திலிருந்து, அ.சா.21 இயங்கும் தடய அறிவியல் துறை நிபுணரால் சேகரிக்கப்பட்ட இரண்டு லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்கள் சா.பொ.11 வரிசையாக குறியிடப்பட்டுள்ளது. அந்த சா.பொ.11 வரிசை பாட்டில்களை இந்நீதிமன்றம் நேரடியாக கவனமாக பரிசீலித்து பார்த்ததில், அந்த பாட்டில்கள் ஒவ்வொன்றும் சுமார் இரண்டேகால் லிட்டர் கொள்ளளவு பிடிக்கக்கூடிய பாட்டில்களாக இருப்பது தெரிய வருகிறது. ஆனால் எதிரி 08.02.2017 அன்று கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான்கு லிட்டர் பெட்ரோலை இரண்டு பாட்டில்களில் வாங்கியதாக ஆய்வாளரிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்கு முரனாக இந்த இரண்டு பாட்டில்களிலும் 4 1/2 லிட்டர் பெட்ரோல் தான் பிடிக்கும் என்றும் 5 லிட்டர் பிடிக்காது என்ற ஒரு வலிமையில்லாத காரணத்தை இந்த நீதிமன்றத்தில் தெரிவித்து இந்த வழக்கிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார் என்றே இந்த நீதிமன்றதிற்கு தோன்றுகிறது. ஏனெனில், அவர் சம்பவ தினத்தன்று ரூ.333/=க்கு பெட்ரோல் வாங்கியிருக்கிறார் என்பது அ.சா.18 மற்றும் அ.சா.13 ஆகியோரின் வாய்மொழி சாட்சியங்கள் வாயிலாகவும், மேலும் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட, எதிரி பெட்ரோல் வாங்கியதற்கான ரசீது அ.சா.ஆ.22 மற்றும் அந்த ரசீதிற்கான பணம் எதிரியின் வங்கி கணக்கிலிருந்து, ஏ.டி.எம்.கார்டு மூலம் ஸ்வைப் செய்யப்பட்டதற்கான ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.14 சான்றவாணங்கள் வாயிலாகவும் அவ்வாறு எதிரி 5 லிட்டர் பெட்ரோல் வாங்கியிருக்கிறார் என்பது உறுதியாகிறது. ஆகையால் அந்த

WEB COPY

இரண்டு பாட்டில்களிலும் சுமார் 4 1/2 லிட்டர் பெட்ரோல் வாங்கியது போக மீதமுள்ள பெட்ரோலை அவரது வண்டியில் போட்டிருக்கலாம். ஆகையால் அவ்வாறு வாங்கிய பெட்ரோலைத்தான் சிறுமி உறாசினியின் உடல் மீது ஊற்றி எதிரியால் எரிக்கப்பட்டுள்ளது என்பது அ.சா.23 இராசாயண பகுப்பாய்வாளர் சாட்சியத்தின் மூலமும், அவர் வழங்கிய அ.சா.ஆ.16 இரசாயண பகுப்பாய்வு அறிக்கை மூலமும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxi) அடுத்ததாக, எதிரி இறந்து போன உறாசினியை பாலியல் பலாத்காரம் செய்து, அதன் பின் கொலை செய்துள்ளார் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்து பார்த்தது. அவ்வாறு பரிசீலித்து பார்க்கும் போது, சிறுமியின் உடற்கூறாய்வு செய்த மருத்துவர் அ.சா.**16** தான் பெற்ற அ.சா.ஆ.**17** ன் படி ஆ**ணி**ன் விந்து உயிர**ணு**க்கள் கண்டறியப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் சிறுமியின் இடுப்பு பகுதி எரிந்து காணப்பட்டது என்றும் கருப்பை சிறுநீர்ப்பை கண்டறிய இயலவில்லை என்றும் பெண் பிறப்புறுப்பு எரிந்து காணப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார், அவருடைய சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது **09.2.2017** அன்று காலை **11.50** மணிக்கு உடற்கூறாய்வு பரிசோதனை மேற்கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது, **05.02.2017** அன்று அந்த சிறுமியின் பிறப்புறுப்பில் விந்துக்கறைப்பட்டிருந்தால் அன்று இரவு **10** மணியளவில் எரிக்கப்பட்ட பின்பு குறிப்பாக அந்த குழந்தையின் பிறப்புறுப்பு முழுமையாக எரிக்கப்பட்ட பின்பு அந்த இடத்திலிருந்த உயிர் விந்த**ணுக்**கள் அறிவியல் பூர்வமாக கண்டறிவதற்கு கூட வாய்ப்பு இல்லை. அதனால் அந்த குழந்தையை எதிரி வன்புணர்வு செய்யவில்லை என்று முடிவு செய்து விடலாமா என்று ஆய்வு செய்து பார்க்கும்போது அவ்வாறு முடிவு செய்ய தேவையில்லை என்று இந்நீதிமன்றம் கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில் குழந்தையின் பிரேதம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சிறுமியின் நீல நிற ஜட்டியில் காணப்பட்ட விந்துக்கறை எதிரியின் விந்து என்று அ.சா.24 அ.சா.28 ஆகியோர் தங்களுடைய

சாட்சியத்தில் கீழ்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள்.

(xxii) அ.சா.24 தடய அறிவியல்துறை உயிரியல் பிரிவு அலுவலர் தனது சாட்சியத்தில் தான் சா.பொ.1ஐ பகுப்பாய்வு செய்து மேற்படி சா.பொ.1ல் விந்துக்கறை கண்டறியப்பட்டு, அந்த விந்துக்கறையானது குருதி வடிநீரியல் பிரிவுக்கும், மரபணு பிரிவிற்கும் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதாக அ.சா.ஆ.27 அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.24 அனுப்பிய சா.பொ.1ல் உள்ள விந்துக்கறையை மரபணு பகுப்பாய்வு செய்த அ.சா.28 தனது சாட்சியத்தில் எதிரியினுடைய இரத்தமாதிரி சேகரிக்கப்பட்டு, அதிலிருந்து டி.என்.ஏ. பிரிக்கப்பட்டு, அதை சா.பொ.1ல் உள்ள விந்துக்கறையிலுள்ள டி.என்.ஏ படிமத்துடன் ஒப்பிட்டு பார்த்து, சா.பொ.1ல் உள்ள விந்துக்கறை எதிரி தஷ்வந்த் என்பவருடையதுதான் என கண்டறிந்து அ.சா.ஆ.32 அறிக்கையை வழங்கியுள்ளார். அந்த சா.பொ.1 ஜட்டி, இறந்து போன ஹாசினி காணாமல் போன தினத்தன்று அணிந்திருந்த ஜட்டி என்பதை அ.சா.1 மற்றும் அ.சா.2 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது உறுதிபடுத்தியுள்ளனர்.

WEB COPY

(xxiii) ஆனால் எதிரி தரப்பில், சான்று பொருள் 1 ஜட்டி போலிசாரால் புதிதாக வாங்கப்பட்டு சட்டப்புறம்பாக தன்னிடம் பெற்ற விந்துவை அதில் செலுத்தி, அதை ஆய்வுக்கு பயன் படுத்தியிருக்கிறார் என்று கூறியிருக்கின்றார், ஆனால் அவர் எந்த தேதியில் அவ்வாறு சட்டப்புறம்பாக போலிசார் தன்னிடம் விந்து பெற்றார்கள் என்பதை அப்போது தெரிவிக்கவில்லை அதே போல் விந்து எடுத்த பிறகு உடனடியாக அந்த சமயத்திலேயே இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி சா.பொ.1 ஜட்டி 8.2.2017 அன்று போலிசாரால் கைப்பபற்றப்பட்ட பிறகு அடுத்தநாளே அதாவது 9.2.2017 அன்று இந்நீதிமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது படிவம் 95 வாயிலாக தெரிய வருகிறது. அப்படி ஒருவேளை போலிஸ் செய்யவேண்டும் என்று நினைத்திருந்தால் இன்னும் ஒரு ஆண் அணியக்கூடிய ஜட்டியை வாங்கி அதிலும்

எதிரியின் விந்துவை செலுத்தி, அந்த ஜட்டியைத்தான் எதிரி சம்பவ நேரத்தில் அனிந்திருந்தார் என்றும் போலிசார் தயாரித்திருக்க முடியும், அனால் அவ்வாறு செய்யாததிலிருந்து போலிசார் நேர்மையாகத்தான் புலன் விசாரணை செய்திருக்கிறார்கள் என்றும் எதிரியை வற்புறுத்தி அவரிடமிருந்து விந்துவை பெற்று சாபொ**1**ல் சேலுத்தவில்லை என்றும் அது உண்மையிலேயே சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே அசா**21** முன்னிலையிலும் வழிகாட்டுதலிலும் அசாஆ **3** கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக சா.பொ.**1** கைப்பற்றப்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமனற்ம் கருதுகிறது.

(xxiv) எதிரி, செல்போனில், ஆபாச படங்கள் பார்க்கும் பழக்கமுடையவா் என்றும், அதனால் பெண்கள் மீது மோகம் கொண்டவா் என்பதும் அரசு தரப்பு வழக்கு. அதை உறுதிபடுத்தும் விதமாக எதிரியை அ.சா.29 ஆய்வாளர் கைது செய்யும் போது எதிரி வைத்திருந்த சா.பொ.5 செல்போனை அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோா் முன்னிலையில் கைப்பற்றி அதனை கணிணி தடய அறிவியல் பிரிவிற்கு பரிசோதனைக்கு அனுப்பியுள்ளாா். மேற்படி சா.பொ.5 செல்போனை ஆய்வு செய்த அ.சா.22 திரு.மணிவண்ணன், சென்னை தடய அறிவயில்துறை கணிணி பிரிவு அலுவலா், தனது சாட்சியத்தில் மேற்படி செல்போனை ஆய்வு செய்ததில், ஆபாசமான இணையதளங்களை பாா்வையிட்டதற்கான தடயங்கள் பிரவுசா் வரலாற்றுப் பக்கங்களின் பகுதியில் பதிவாகியிருந்தன என்று அ.சா.ஆ.25 கருத்துரை வழங்கியுள்ளாா். மேற்படி சாட்சியை எதிரி தரப்பு வழக்கறிஞா் குறுக்கு விசாரணை செய்த போது, போலிசாா் கைப்பற்றிய செல்போனில் மேற்படி ஆபாச இணையதளங்களை அவா்களே பயன்படுத்திவிட்டு, அ.சா.22இடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த ஆபாச இணையதளங்களை எதிரி அந்த செல்போனில் பாா்த்ததாக அறிக்கை தயாா் செய்ய சொன்னாா்கள் என்றும், அந்த அடிப்படையில் இந்த அறிக்கை தயாா் செய்யப்பட்ட அறிக்கை தான் அ.சா.ஆ.25 என கூறியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது

WEB COPY

என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், மேற்படி அ.சா.ஆ.25 அறிக்கையை பரிசீலித்து பார்க்கும் போது, இவ்வழக்கு சம்பவத்திற்கு முன் அதாவது எதிரியிடமிருந்து செல்போனை கைப்பற்றுவதற்கு முன்பே ஆபாச படங்கள் பார்க்கப்பட்டதாக அதில் தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி போலிசாரே அதில் ஆபாச இணையதளங்களை பார்த்துவிட்டு ஆய்வுக்கு அனுப்பியிருந்தால் அதில் சம்பவத்திற்கு பின்னர் தான் படங்கள் பார்க்கப்பட்டதாக தேதிகள் காணப்பட்டிருக்கும்.

(xxv) மேலும் எதிரி தரப்பில் சுட்டிக்காட்டியதை போல சிம் கார்ட் கைப்பற்றப்படவில்லை என்பதும் அந்த சிம் கார்ட் மூலம் எந்த நிறுவன தொலைபேசி வசதியை எதிரி பயன்படுத்தி வந்தார் என்பதற்கு ஒரு ஆவணத்தையும் கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்யவில்லை என்ற வாதமும் சட்டப்படி ஏற்றுக்கொள்ள கூடிய வாதமாக இந்த நீதிமன்றத்தில் அமையவில்லை, எனெனில் அந்த சிம் கார்டை பயன் படுத்தி எதிரி குற்றத்தில் ஈடுப்பட்டார் என்பது அரசு தரப்பு வழக்கு இல்லை, எனவே அவைகளை கைப்பற்றாத காரணத்தினால் அரசு தரப்பு வழக்கு எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxvi) மேலும் எதிரியும், அவரது குவிமுச பிரிவு 313(1)(ஆ) கீழான விசாரணையின் போது தான் எப்போதாவது ஆபாச படங்கள் பார்ப்பதுண்டு என்று பதில் அளித்துள்ளார். ஆகையால், எதிரிக்கு செல்போனில் ஆபாச படங்கள் பார்க்கும் பழக்கம் உள்ளது என்பதும் அதனால் எதிரி பெண்களுடன் உடலுறவு கொள்ளும் விஉஷயத்தில் அதிக நாட்டம் உடையவராக இருந்துள்ளார் என்ற அரசு தரப்பு கூற்று மேற்படி அ.சா.22ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், அ.சா.ஆ.25 ஆவண சாட்சியத்தின் வாயிலாகவும், உறுதிபடுத்தப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxvii) மேலும் அசா**16** தனது சாட்சியத்தில் சிறுமியின் பிரேதம் முழுவதும் எரிந்த காரணத்தினால் அவர் எவ்வாறு இறந்திருப்பார் என்பதை கூற இயலாது என்று சாட்சியமும் சான்றும் அளித்திருந்தாலும் அதன் பிறகு அ.சா.**29** மீண்டும் **01.08.2017** அன்று தன்னை சந்தித்து சில கேள்விகளை எழுத்து வடிவில் கொடுத்து பதில்

WEB COPY

கேட்டதாகவும் அதில் தான் பிரேதத்தின் உதட்டின் உள் பகுதியில் உள்ள கன்றிய காயம் வாயை அழுத்தினாலோ மழுங்கிய பொருட்கள் கொண்டு அழுத்தினாலோ கையால் அழுத்தினாலோ ஏற்பட கூடும் என்றும் மைய வெட்டு பற்கள் தளர்ந்தும் அதன் அருகில் கன்றிய காயம் காணப்படுவது கைகளால் சுவாச குழாயை அழுத்தியதால் ஏற்பட்டிருக்க கூடும் என்றும் பதில் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே மேற்கூறிய அசா16 சாட்சியத்திலிருந்தும் அவர் அளித்த அசாஆ 20 சான்றிலி ருந்தும் சிறுமி ஹசினி கையால் வாயை பொத்தியதாலும் கைகளால் சுவாச குழாயை அ முத்தியதாலும் இறந்திருக்கிறாா என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxviii) ஒரு குழந்தையின் வாயை வலிமையாக அவள் இறக்கக்கூடிய அளவிற்கு மூடவேண்டிய அவசியம் எந்த நேரத்தில் ஏற்படும் என்பதை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலக்கவேண்டியிருக்கிறது. சம்பவ தேதியில் அந்த சிறுமியின் வயது 7, எதிரியின் வயது 22 அவர் ஒரு விளையாட்டு வீரர். எதிரியின் தோற்றம் முழுமையாக வளர்ச்சியடைந்த ஆரோக்கியமான ஆண் என்பது அவர் தோற்றத்திலேயே அறிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட ஒரு நபர் 7 வயது குழந்தையின் வாயை மூச்சு வெளியே விட முடியாத அளவிற்கு அழுத்தும்போது இயற்கையாகவே அந்த குழந்தைக்கு மூச்சுதினறல் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் வண்புணர்வு செய்யும் வேகத்தில் ஒருவர் ஈடுபடும்போது அதனால் கிடைக்கின்ற அந்த இன்ப உணர்வு மட்டுமே அவர் மனதில் மேலோங்கி இருப்பதோடு அந்த இன்ப உணவிற்கு தடையாக அந்த குழந்தையின் சத்தம் இருக்கும்போது அந்த சத்தம் வெளியே கேட்டுவிட கூடாது என்பதற்காகவும், சத்தம் வெளியே கேட்டால் தனக்கு அவமானம், ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற உணர்வினாலும் அழுத்துகின்ற அழுத்தம் மிக அதிகமாக இருக்கும் என்பதிலும் அதனால் சிறுமி மூச்சு தினறல் ஏற்பட்டு இறந்திருக்க வாய்ப்புண்டு என்பதில் எந்தவிதமான சந்தேகமில்லை. எனவே சிறுமி ஹா சினி வண்புணர்வின்போது சத்தம்போட்டுவிட கூடாது என்பதற்காக எதிரியின் கையால் சிறுமியின் வாயை பொத்தியதாலும் கைகளால் சுவாச குழாயை ஆழுத்தியதாலும் மூச்சு தினறல் ஏற்பட்டு இறந்திருக்கிறார் என்பதும், அந்த உடல் தீ வைத்து எரிக்கப்பட்டு 5 நாட்கள் கழித்து உடற்கூறாய்வு செய்த காரணத்தினால் தான் உடற்கூறாய்வு மருத்துவரால் இறப்புக்கான காரணத்தை கண்டறிய இயலவில்லை என்றும் மேற்படி அரசு தரப்பு வாய்மொழி மற்றும் ஆவன சாட்சியங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(xxix) எதிரி தனது குவிமுச பிரிவு 313(ஆ)(1)ன் கீழான விசாரணையின் போது கொடுத்த எழுத்துமூலமான பதிலுரையில், தன் மீது காவல்துறையினா் சான்றாவணங்களையும், சான்று பொருள்களையும், சாட்சியங்களையும், தனக்கு எதிராக உருவாக்கி, தன்மீது பொய் வழக்கு போட்டுள்ளதாக கூறியுள்ளாா். அவ்வாறு எதிரி கூறியுள்ளவைகளை பாீசிலித்து பாா்க்கும் போது, எதிரி ஏற்கனவே போலிசாரால் பல வழக்குகளில் தேடப்பட்டு வந்த குற்றவாளியாகவோ அல்லது சமூக விரோதியாகவோ அல்லது தீவிரவாதியாகவோ இருந்திருந்திருந்தால் போலிசாா் அவ்வாறு எதிரியின் மீது பொய் வழக்கு போட வாய்ப்புள்ளது. ஆனால் எதிரியின் மீது இந்த வழக்கிற்கு முன் எந்தவொரு வழக்கும் இல்லை. அப்படியிருக்கும்பட்சத்தில், ஒரு சாதாரண குடிமகன் மீது இப்படியொரு அவதூறு வழக்கு போடவேண்டிய எந்தவொரு அவசியமும் காவல்துறையினருக்கு இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

(xxx) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞா் தனது வாதுரையில், இவ்வழக்கில் இதச பிரிவு 366 என்ற சட்டப்பிரிவு பெண்களை திருமணம் செய்வதற்காக கடத்திச் செல்லுதல் என்றும், இந்த வழக்கை பொருத்தவரையில், குழந்தை கடத்தப்பட்டதாக சொல்லப்படுவது பாலியல் வன்புணா்ச்சிக்காக என்பது தான் அரசு தரப்பு வழக்கு என்றும், ஆகையால் இந்த சட்டப்பிரிவு வராது என்றும் வாதிட்டாா். ஆனால் மேற்படி இதச பிரிவு 366ல் ஒரு பெண்ணை அவரது விருப்பத்திற்கு மாறாக எவரையேனும் மணந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படலாம் என்றும் அல்லது அவரை முறையற்ற உடலுறவு கொள்ளும்படி பலவந்தப்படுத்தப்படுவதற்காக கடத்திச் செல்லுதல் என்று சொல்லப்பட்டிருப்பதால், இவ்வழக்கில் எதிரி, மேற்படி சிறுமியை பாலியல் வன்புணா்வு செய்யும் நோக்கத்தோடு அவரது வீட்டிற்கு கடத்திச் சென்றிருக்கின்றாா் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், மேற்கூறிய இதச பிரிவு 366ன் கீழ்

குற்றச்சாட்டு வனைந்திருப்பது சரிதான் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxxi) மேலும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், அவர் வசிக்கும் பகுதியிலுள்ள அ.சா.6 நிர்வாகியாக உள்ள கோயிலின் சிசிடிவி கேமரா பதிவை பார்வையிட்டதன் மூலம் எதிரியின் மீது சந்தேகம் வந்ததாக போலிசாரிடம் சொன்னதாகவும் அதன் அடிப்படையில் அ.சா.6ம் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் ஆனால் அந்த சிசிடிவி கேமராவோ அல்லது அதன் பதிவோ புலனாய்வு அதிகாரியால் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் வாதிட்டார். மேற்படி எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தை கவனமாக பரிசீலனை செய்கையில், மேற்படி சிசிடிவி கேமராவை பயன்படுத்தி எதிரி குற்றச்செயலில் ஈடுபட்டதாக அரசு தரப்பு வழக்கில்லை. குற்றம் நடந்த இடத்தில் புலனாய்வு அதிகாரி போய் பார்க்கும் போது, அந்த சிசிடிவி கேமரா அங்கிருந்து, அதை புலனாய்வு அதிகாரி வேண்டுமென்றே கைப்பற்றாமல் மறைத்திருந்தால் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகப்பட முடியும். இந்த வழக்கை பொருத்தவரையில் முதல் தகவல் அறிக்கை பதிவுந்தவுடன் சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, ஆய்வாளர் மற்றும் அவர்களின் மேலதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி குழந்தையை தேட ஆரம்பித்திருப்பார்கள். அந்த சமயத்தில் அவர்கள் பல்வேறு வழிகளில் தகவல்களை சேகரித்திருப்பார்கள். அவைகள் அனைத்தும், குழந்தையை எப்படியாவது உயிருடன் மீட்க வேண்டும் என்பதற்காகவே சேகரித்திருப்பார்கள். இவ்வழக்கில், சிசிடிவி கேமரா பதிவை 6.2.2017ம் தேதி பரிசோதித்து பார்த்தததாக அ.சா.1 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அதை பற்றி எதிரியிடம் குவிமுச பிரிவு 313(ஆ)(1)ன் கீழான விசாரணையின் போது கேட்ட போது, அந்த மாதிரி சிசிடிவி Footage எதுவும் கிடையாது என்று சொல்லியுள்ளார். மேலும் அதில் பார்த்த விவரங்கள்

WEB COPY

எதிரியின் மீது சந்தேகம்படிவதற்கான ஆரம்பமே தவிர, அதுதான் முழுமையான, முதன்மையான சாட்சியம் அல்ல. எனவே அதை கைப்பற்றவில்லை என்பதால், முழு அரசு தரப்பு வழக்கும் பாதிக்கப்பட்டதாக கருத இயலாது. மேலும் காவலர் பணி என்பது, ஒரு புனிதமான பணியாகும். எல்லையில் இரா ணுவ வீரர்கள் நாட்டின் எதிரிகளிடமிருந்து, நாட்டை பாதுகாப்பது போல, காவல்துறை பணியாளர்கள் உள்நாட்டில் சமூக விரோதிகளிடமிருந்தும், குற்றவாளிகளிடமிருந்தும், தீவிர மற்ற பயங்கரவாதிகளிடமிருந்து உள்நாட்டு மக்களை பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்று செயல்படுகின்றனர். அவர்களது முக்கிய நோக்கமே குற்றம் நடக்காமல் தடுப்பதும், அதையும் மீறி குற்றம் நடந்துவிட்டால் அதற்கு காரணமானவர்களை கண்டறிந்து, சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்று தருவதுமாகும். அவ்வாறான சட்டப்பணிகளை ஆற்றும்போது எப்போதும் மிகச்சரியாகவும், நேர்மையாகவும் உண்மையை கண்டறியும் நோக்கிலும், செயல்பட்டதாகவே கருத வேண்டுமே தவிர அவற்றில் தேவையில்லாமல் எந்தவித அடிப்படையுமில்லாமல் சந்தேகப்படுவது தேவையில்லாதது. உளவியல் துறையில் அடிப்படை இல்லாத சந்தேகம் என்பது ஒரு மனநோயாகும். எனவே குற்ற விசாரணை வழக்குகளில், புலன் விசாரணை அதிகாரிகளின் நடவடிக்கைகளின் மீது எந்தவிதமான அடிப்படையுமின்றி, காரணகாரியங்கள் இல்லாமல் சந்தேகம் கொண்டால் அது மனநோயாளிகளின் பார்வை போலவே அமைந்துவிடும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxxii) மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்பைடயில் கீழ்கண்ட சூழ்நிலை சாட்சியங்கள் அரசு தரப்பில் சந்தேக்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது,

- அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் 5.2.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு சிறுமி உறாசினியை நிகிதா பிளாட்சின் தரைதளத்தில் விளையாடிக்கொண்டிருந்தவரை விட்டுவிட்டு பாய்கடை

WEB COPY

என்ற இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் காய்கறி வாங்க சென்றுள்ளனர் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

- அ.சா.3 மொட்டை மாடியில் காய வைத்த துணிகளை எடுப்பதற்காக 6.15 மணிக்கு மொட்டை மாடிக்கு செல்லும் போதும், துணிகளை எடுத்துக்கொண்டு திரும்பி வரும் போதும் சிறுமி உறாசினி எதிரியுடனும், எதிரியின் நாயுடனும் எதிரியின் வீடு அமைந்துள்ள இரண்டாவது தளத்தில் விளையாடிக் கொண்டிருந்ததை பார்த்துள்ளார் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
  - அதன் பிறகு சிறுமி உறாசினியை யாரும் உயிருடன் பார்க்கவில்லை என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
  - அதே தினம் மாலை 6.30 மணியளவில், நிக்கிதா பிளாட்சின் எதிரில் வசிக்கும், அ.சா.11 திருமதி.புஉஷ்பா என்பவர் அவரது நாயை வாக்கிங் கூட்டிச் சென்று "வேலம்மாள் போதிகேம்பஸ்" அருகே நின்று கொண்டிருந்த போது, எதிரி டென்உஷனாக அவரது இருசக்கர வாகனமான சா.பொ.4 அப்பாச்சி என்ற மோட்டார் சைக்கிளில், சா.பொ.6 ஆன டிராவல்பேக்கை முதுகில் மாட்டிக்கொண்டு, முன்பக்கத்தில் சா.பொ.19 உெறல்மெட்டை வைத்துக்கொண்டு வேகமாக நிகிதா பிளாட்சின் முன்கதவை தள்ளிக்கொண்டு சர்ரென்று வெளியே சென்றுள்ளார் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
  - பின்னர் கடைக்குச் சென்ற சிறுமி உறாசினியின் பெற்றோர்கள் இரவு 7.00 மணிக்கு திரும்பி வந்து, உறாசினியை அழைத்த போது உறாசினியிடமிருந்து எந்த பதிலும் வராததால் உறாசினியை தேடியுள்ளனர் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

- முதல் தளத்தில் வசிக்கும் அ.சா.3 இடம் விசாரிக்கும் போது அவர் மேலே இரண்டாவது தளத்தில் உறாசினி விளையாடிக் கொண்டிருப்பதாகவும் அங்கு போய் பார்க்கும்படி சொன்னார் என்பதும், அதன் பேரில், அ.சா.1, அ.சா.2 ஆகியோர் எதிரி வசிக்கும் இரண்டாவது தளத்தில் தேடியுள்ளனர் என்பதும், அப்போது எதிரியின் வீடு பூட்டியிருப்பதை கண்டிருக்கிறார்கள் என்பதும், கீழே வந்து மறுபடியும் எல்லா இடங்களிலும் தேடியுள்ளனர் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
- மேலும் எதிரியின் வீட்டில் உள்ளவர்களும், 05.2.2017ம் தேதி பல்லாவரத்தில் நடந்த எதிரியின் அத்தை மகள் திருமணத்திற்கு சென்றுவிட்டதும், மாலை 6.00 மணியிலிருந்து, இரவு 7.15மணி வரையிலும் எதிரியின் வீட்டில் எதிரியை தவிர வேறு யாரும் இல்லை என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

- **05.02.2017** அன்று இரவு **9.20** மணிக்கு மேல் எதிரி தனது வீடு இருக்கும் குடியிருப்பில் இல்லை என்பது நிருபிக்கப்பட்டுள்ளது,
- **06.02.2017, 07.02.2017** ஆகிய தேதிகளில் எதிரி சந்தேகத்திற்குறிய நபராக வலம் வந்திருக்கிறார் என்பதும் அவர் மீது சந்தேகம் வலுப்படும்போது எதிரி தலைமறைவாகி இருக்கிறார் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
- **08.02.2017** அன்று காலை சுமார் **9** மணியளவில் முகலிவாக்கம் ஏஜிஎஸ் பார்க் அருகே எதிரியை ஆய்வாளரால் கைது செய்யப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அந்த அப்பாச்சி பைக்கும் செல்போனும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது நிருபிக்கப்பட்டுள்ள து.
- எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தாம்பரம் =மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் அனகாபுத்தூர், அருகே உபயோகமில்லாத எமர்ஜென்சி பூத் அருகே உள்ள

முட்புதரில் இருந்து எரிந்த நிலையில் இருந்த ஒரு குழந்தையின் பிரேதம், நீலக்கலர் ஜட்டி, டிராவல்பேக், சிறுமி உறாசினி எரிக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பல் சிறிதளவு, எரிந்து போன பிரேதத்தின் கருகிய தலைமுடி, கருகிய தரைமண், பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட தரைமண், சுமார் 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்ரோல் வாடையுடன் கூடிய கூல்டிரிங்ஸ் பாட்டில்கள் இரண்டு ஆகியவைகள் கைப்பற்றப்பட்டது நிருபிக்கப்பட்டுள்ளது.

- எதிரியின் வீட்டிலிருந்து சிறுமி சிறுநீர் கழித்த பெட்உஷீட் கவர் ஒருபகுதி, எதிரியின் உடைகள், எதிரியின் ஏ.டி.எம.கார்டு, பான் கார்டு, ஐ.டி. கார்டு, எதிரியின் கருப்பு கலர் பர்ஸ, அதிலிருந்த இறந்து போன சிறுமியின் பொன் கம்மல் ஒரு ஜோடி, சிறுமியின் கால் கொலுசு சா.பொ.3 ஆகியவைகள் கைப்பற்றப்பட்டது நிருபிக்கப்பட்டுள்ளது.
- அங்கு கண்டெடுக்கப்பட்ட பிரேதம் சிறுமி ஹசினிதான் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.
- அந்த சிறுமியின் பிரேதத்தின் மீது பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டுள்ளதும் அந்த பெட்ரோலை எதிரி **05.02.2017** அன்று இரவு **9.20** மணிக்கு வாங்கியதும் நிருபணம் செய்யப்பட்டுள்ளது.
- சாபொ**1** நீல நிற ஜட்டி சிறுமியுடையது என்பதும் அதில் இருந்த விந்துக்கறை எதிரியுடையதுதான் என்பது நிருபணம் செய்யப்பட்டுள்ளது.
- சாபொ**19** தலைகவசம் எதிரியுடையது தான் என்பதும் அதை எதிரிதான் அவருடைய வீட்டின் மொட்டை மாடியில் மறைத்து வைத்திருந்தார் என்பதும் நிருபணம் செய்யப்பட்டுள்ளது.
- சிறுமி ஹா சினி எதிரியால் கையால் வாயை பொத்தியதாலும் கைகளால் சுவாச குழாயை அழுத்தியதாலும் மூச்சு தினறல் எற்பட்டு இறந்திருக்கிறார் என்பது நிருபணம் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

(xxxiii) இந்நிலையில் கடந்த 5.2.2017ம் தேதி மாலை 5.00 மணிக்கு மதனந்தபுரம் நிக்கிதா பிளாட்சில் வசிக்கும் உறாசினி வயது 7 என்ற சிறுமி கீழ்தளத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது, எதிரி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்யும் நோக்கத்துடன் அதே பிளாட்சில் உள்ள எதிரியின் வீட்டிற்கு கடத்திச் சென்று எதிரியின் நாயுடன் சிறுமி உறாசினி விளையாடிக்கொண்டிருந்த போது, எதிரி அவரது வீட்டுக் கதவை உள்புறமாக தாழ்ப்பாள் போட்டு, அவரை பாலியல் தாக்குதல் செய்யும் நோக்கத்துடன் அவரது உள்ளாடைகளை தூக்கி பிறப்புறுப்பில் கையை வைத்து தடவியும் எதிரி சிறுமி உறாசினியை அவரது படுக்கையறைக்கு தூக்கிச் சென்று, அவரது உள்ளாடைகளை கழற்றி எதிரியின் ஆ ணுறுப்பை எடுத்து உறாசினியின் பெண் ணுறுப்பில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் என்பதும் அப்போது சிறுமி கத்தி அழுததால் எதிரி பெட்உஷீட்டை எடுத்து அவரது முகத்தில் மூடி அழுத்தி, அவரது கழுத்தை இறுக்கி வாயை பொத்தி உறாசினியை கொலை செய்திருக்கிறார் என்பது அரசு தரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் தெள்ளத்தெளிவாக புலனாகிறது.

WEB COPY

(xxxiv) அதன் பின்னர், எதிரி மறைத்து வைத்த உறாசினியின் உடலை யாராவது கண்டுபிடித்துவிட்டால், எதிரி அந்த சிறுமியை கற்பழித்த விவரம் தெரிந்து விடும் என்பதும், அந்த குழந்தை யாருடையது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்பதும் அதனால், எதிரி போலிசாரிடம் மாட்டிக்கொள்வோம் என்ற எண்ணத்தில், அந்த சிறுமியின் உடலை எரித்துவிட்டால், அந்த சிறுமியை கற்பழித்ததையும், அந்த சிறுமி யாருடைய குழந்தை என்பதையும் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டால், தான் தப்பித்து விடலாம் என்ற எண்ணத்துடன், மறுபடியும் அன்றே 9.20 மணிக்கு, வண்டியை எடுத்துக்கொண்டு, மாதா நகர், பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடும் நபரான அ.சா.18 இடம்

ரூ.333/=க்கு பெட்ரோல் வாங்கிக்கொண்டு, அதற்கான பணத்தை எதிரியின் ஆக்சிஸ் பேங்க் ஏ.டி.எம். கார்டு மூலம் ஸ்வைப் செய்துவிட்டு, அந்த பெட்ரோல் மூலம், சிறுமி உறாசினியின் உடலை எரித்துள்ளார் என்பதும் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபனம் செய்யப்பட்டுள்ளது என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

17. **பிரச்சனை எண்.5**

மேலே பிரச்சனை எண்.1 முதல் 4ல் விரிவாக பரிசீலிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் மீதான இதச பிரிவுகள் 363, 366, 354(பி), 302, 201 மற்றும் பிரிவு 8 உ/இ.7 மற்றும் பிரிவு 6 உ/இ.5(எம்) குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012 கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 235(2)ன் கீழ் அவரிடம் வினவிய போது,

" குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கூறினார்."

எதிரி தரப்பு வழக்கறிஞர், எதிரியின் வயது, எதிரி தற்போது சிறையிலிருந்து வருவதை கருத்தில் கொண்டு, அபராதம் விதிக்காமல் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று, வாதிட்டார்.

அரசு தரப்பில் முன்னிலையான அரசு சிறப்பு வழக்கறிஞர், இந்த பாலியல் குற்றம் ஒரு சிறுமிக்கு எதிராக கருணையற்ற முறையில், செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த வழக்கை அரிதினும்அரிதான வழக்காக கருதி, அதிகபட்ச தண்டனையாக எதிரிக்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென்றும், வாதிடப்பட்டது.

WEB COPY

இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், கீழ்கண்ட மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டு தீர்ப்பு கவனத்தில் கொள்ளப்பட்டது.

**Crl. Appeal No.609 – 610 of 2017 (@SLP(CRL0 Nos. 5027-2028 of 2014) – Vinay Sharma and Another Vs. State of NCT of Delhi and others.**

128. Let me now refer to a few cases of rape and murder where this Court has confirmed the sentence of death. In Molai & Anr. v. State of M.P. (1999) 9 SCC 581, death sentence awarded to both the accused for committing offences under Sections 376 (2)(g) IPC, 302 read with Section 34 IPC and 201 IPC, was confirmed by this Court. The accused had committed gang rape on the victim, strangulated her thereafter and threw away her body into the septic tank with the cycle, after causing stab injuries. It was held as under:
"36……It cannot be overlooked that Naveen, a 16 year old girl, was preparing for her 10th examination at her house and suddenly both the accused took advantage of she being alone in the house and committed a most shameful act of rape. The accused did not stop there but they strangulated her by using her under-garment and thereafter took her to the septic tank alongwith the cycle and caused injuries with a sharp edged weapon. The accused did not even stop there but they exhibited the criminality in their conduct by throwing the dead body into the septic tank totally disregarding the respect for a human dead body. Learned Counsel for the accused (appellants) could not point any mitigating circumstances from the record of the case to justify the 413 reduction of sentence of either of the accused. In a case of this nature, in our considered view, the capital punishment to both the accused is the only proper punishment and we see no reason to take a different view than the one taken by the courts below."

WEB COPY

129. In Bantu v. State of Uttar Pradesh (2008) 11 SCC 113, the victim aged about five years was not only raped, but was murdered in a diabolic manner. The Court awarded extreme punishment of death, holding that for deciding just and appropriate sentence to be awarded for an offence, the aggravating and mitigating factors and circumstances in which a crime has been committed must be delicately balanced by the Court in a dispassionate

manner.

130. In Ankush Maruti Shinde and Ors. v. State of Maharashtra (2009) 6 SCC 667, concerned accused were found guilty of offences under Sections 307 IPC, 376(2)(g) IPC and 397 read with 395 and 396 of IPC. This Court declined to interfere with the concurrent findings of the courts below and upheld death penalty awarded to the accused, taking into account the brutality of the incident, tender age of the deceased, and the fact of a minor girl being mercilessly gang raped and then put to death. The court also noted that there was no provocation from the deceased's side and the two surviving eye witnesses had fully corroborated the case of the prosecution.

